T. 2452

T.
2452

# தமிழ்ப்

# புலவர் வரிசை

T. 2452

ஒன்பதாம் புத்தகம்

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
26 FEB 1958
MADRAS

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

கழக வெளியீடு: எகூ0

# தமிழ்ப் புலவர் வரிசை

[ஒன்பதாம் புத்தகம்]

ஆசிரியர்:
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1955.

THAMIZHP PULAVAR VARISAI - IX

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம்நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் **எட்டு** நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **ஒன்பதாம் புத்தக**மாகும்.

இதன்கண் **சேலம் குமாரசாமி முதலியார்** முதல் **இராசம் அய்யர்** ஈறாக நடு புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனை எங்கள் வேண்டுகோளின்படி ஆக்கித்தந்த திரு. **சு. அ. இராமசாமிப் புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் எட்டுப் புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | சேலம் குமாரசாமி முதலியார் | ... | 1 |
| உ. | ஈசானிய மடம் இராமலிங்க அடிகள் | ... | 3 |
| ங. | வ. த. சுப்பிரமணிய பிள்ளை | ... | 5 |
| ச. | தஞ்சை. ஆபிரகாம் பண்டிதர் | ... | 10 |
| ரு. | ஜே எம். நல்லசாமிப் பிள்ளை | ... | 19 |
| சு. | குல. சபாரத்தின முதலியார் | ... | 24 |
| எ. | நாகை. தண்டபாணிப் பிள்ளை | ... | 28 |
| அ. | வ. வே. சுப்பிரமணிய ஐயர் | ... | 32 |
| கூ. | சே. கிருட்டிணமாச்சாரியார் | ... | 39 |
| க0. | ம. ரா. குமாரசாமிப் பிள்ளை | ... | 42 |
| கக. | சரவணபவானந்தம் பிள்ளை | ... | 45 |
| கஉ. | விருதை சிவஞானயோகிகள் | ... | 49 |
| கங. | இருக்கம். ஆதிமூல முதலியார் | ... | 56 |
| கச. | பேரம்பலப் புலவர் | ... | 60 |
| கரு. | வண்ணை. செல்லையா | ... | 64 |
| கசு. | சீர்காழி. முத்துத் தாண்டவராய பிள்ளை | ... | 67 |
| கஎ. | ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை | ... | 70 |
| கஅ. | கு. சோமசுந்தர தேசிகர் | ... | 73 |
| ககூ. | வல்லை. சண்முகசுந்தர முதலியார் | ... | 76 |
| உ0. | வ. சு. சண்முகம் பிள்ளை | ... | 80 |
| உக. | காழி. சிவ. கண்ணுச்சாமிப் பிள்ளை | ... | 83 |
| உஉ. | ந. பலராம ஐயர் | ... | 86 |
| உங. | சலசலோசனர் | ... | 89 |
| உச. | பண்டித வேங்கடசாமி நாட்டார் | ... | 92 |
| உரு. | ச. த. சற்குணர் | ... | 100 |
| உசு. | கா. சுப்பிரமணிய பிள்ளை | ... | 102 |
| உஎ. | மோசூர். கந்தசாமி முதலியார் | ... | 112 |
| உஅ. | புதுமைப்பித்தன் | ... | 115 |
| உகூ. | முத்துக்குமாரத் தம்பிரான் | ... | 120 |
| ங0. | சேலம். இராமசாமிக் கவுண்டர் | ... | 122 |
| ஙக. | புகழ். முத்துச்சாமிப் பிள்ளை | ... | 127 |
| ஙஉ. | ப. சிதம்பரம் பிள்ளை | ... | 129 |
| ஙங. | திருக்குறள் அவதானி சுப்பிரமணிய தாசு | ... | 132 |
| ஙச. | நவநீதகிருட்டிண பாரதியார் | ... | 134 |
| ஙரு. | இராசம் அய்யர் | ... | 137 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## [ஒன்பதாம் புத்தகம்]

## க. சேலம் குமாரசாமி முதலியார்

**பிறப்பு**

குமாரசாமி முதலியார் என்பவர் தொண்டை நாட்டிலே சென்னையை ஒட்டியுள்ள குன்றத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணசல முதலியார் என்பவருடைய மகனாகத் தோன்றினர். தாயார் பெயர் மீனாட்சியம்மாள். குமாரசாமி முதலியார் பிறந்த காலம் சாலிவாகன சகம் 1725-ல், துன்மதி ஆண்டு சித்திரைத் திங்கள். அருணசல முதலியார் அரசியல் அலுவலை முன்னிட்டுச் சேலத்தில் இருந்ததால், அவருக்கும் அவருடைய மகனுக்கும் சேலம் என்னும் அடைமொழி சேர்ந்தது.

**கல்வி**

குமாரசாமி முதலியார் ஐந்தாம் அகவையில் அத்தப்ப உபாத்தியாயர் என்பவரிடத்தில் கல்வி கற்கத் தொடங்கினர். இவர் நுண்ணுணர்வு உடையவராக இருந்தமையின் வெகு எளிதாக இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொண்டார். சுந்தரம் ஐயர், இராமகிருட்டிண ஐயர் என்பவர்களிடம் இசைப் பயிற்சியுங் கற்றுக் கொண்டார். மேற்கூறிய இருவரும் நல்ல இசைப் புலவர்களாக இருந்தமையின் குமாரசாமி முதலியாருக்கு இசைப்பாட்டுப் பாடும் ஆற்றலும் உண்டாயிற்று.

அலுவல்

குமாரசாமி முதலியார் முதலில் அரசாங்க அலுவலகத்தில் எழுத்தாளரானார். பிறகு சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் சவுக்கைதார் என்னும் வேலை பார்க்கத் தொடங்கினார். பிறகு பல ஊர்களுக்கு மாற்றப்பட்டார். இவர் இசைப்பாட்டுப் பாடுவதில் சிறந்தவராக இருந்தமையின் வழிபாட்டுக்குச் செல்லும் பதிகளில் எழுந்தருளியுள்ள கடவுளர்கள் மீதெல்லாம் இசைப்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார். இவரால் இயற்றப்பட்ட இசைப்பாடல்கள் பல. இவர் கந்தபுராண முழுவதையும் இசைப்பாட்டாகப் பாடிப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

இயற்றிய இசை நூல்கள்

1. கந்த புராணக் கீர்த்தனை
2. சுவாமிமலை சுவாமிநாத சுவாமி பதம்
3. சுப்பிரமணியர் லாலி
4. சுப்பிரமணியர் பதிகம்
5. தர்ம சம்வர்த்தனி கீர்த்தனை
6. அறம் வளர்த்த நாயகி கீர்த்தனம்
7. தண்டாயுதக் கடவுள் பஞ்சரத்தின மாலை
8. பழநி மும்மணி மாலை
9. இரட்டை விநாயகர் கீர்த்தனை
10. மூல விநாயகர் கீர்த்தனை
11. மீனாட்சி கீர்த்தனை
12. சோமசுந்தரக் கடவுள் பதம்
13. திருப்பரங்குன்றம் முருகர் பதம்
14. தண்டாயுதபாணி கலித்துறைப் பதிகம்
15. தண்டாயுதபாணி ஒருபா ஒரு பஃது
16. பெரியநாயகியம்மன் கும்மி
17. பழநியாண்டவர் சதகம்
18. பழநியாண்டவர் வண்ணம்

முதலியன இவரால் இயற்றப்பெற்றன. இவரால் இயற்றப்பெற்ற கந்தபுராணக் கீர்த்தனை சென்னைமா நகரில் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் சபாபதி முதலியார், திருத்தணிகைக் கந்தப்பையர் முதலிய பேரறிஞர்கள் கூடிய அவையிலே அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. இவருடைய கீர்த்தனை கந்தபுராணம் முழுவதற்கும் இயற்றப்பட்டபடியாலும் இதற்குப் பிறகு நயமான இசைப்பாடல்கள் பல எழுந்தமையானும் வழக்காறற்று மறைந்தொழியும் நிலையில் இருக்கிறது. இவர் காலமான ஆண்டு முதலிய விவரங்கள் புலனாகவில்லை.

---

## உ. ஈசானியமடம் இராமலிங்க அடிகள்

*துறவி*

துறவியாக வாழ்ந்திருந்த இப்பெரியார் தில்லை ஈசானிய மடத்திலே தங்கித் தமிழ்த்தொண்டு செய்திருந்தார். வீரசைவக் கொள்கையுடையவர். புராணங்கள், இலக்கண இலக்கியங்கள், சங்க நூல்கள் ஆகியவைகளைத் தக்காரிடம் நன்றாகக் கற்றறிந்தார். தம்மை யடுத்தவர்கட்கு அவர்கள் விரும்பும் நூல்களைக் கற்பித்தார். பாடஞ் சொல்லும் ஆற்றலும், சொற்பொழிவு செய்யும் ஆற்றலும், பழந்தமிழ் நூல்கட்கு உரையெழுதும் ஆற்றலும் இவரிடம் இயற்கையாக அமைந்திருந்தன.

*மாணவர்கள்*

இவருடைய மாணவர்களும் இவரைப்போலவே உரையெழுதும் ஆற்றல், சொற்பொழிவு செய்யும் ஆற்றல் முதலியவைகளை நன்கு பெற்றிருந்தனர். மாணவர்களில் மிகச் சிறந்து விளங்கியவர்கள் சே. சூரப்பநாயுடு,

க. வ. திருவேங்கட நாயுடு முதலியோராவர். இவர்களில் க. வ. திருவேங்கடநாயுடு சோணசைல மாலைக்கு அரிய விருத்தியுரை ஒன்றை எழுதி வெளிப்படுத்தினர்.

கச்சிக்கலம்பகத்திற்குதவி

பூண்டி அரங்கநாத முதலியார் சென்னையில் இருந்த போது இராமலிங்க அடிகளார்க்கும் முதலியார்க்கும் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் அடிக்கடி ஒருவரையொருவர் கண்டு உரையாடி மகிழ்தல் இயல்பு. அரங்கநாதமுதலியார் பாடிய கச்சிக்கலம்பகத்திற்கு அடிகளார் இன்றியமையாத் துணையாக இருந்தார்.

உரையாசிரியர்

நால்வர் நான்மணிமாலைக்கு அரிய விரிவுரை ஒன்று மிகச் சிறந்த முறையில் எழுதினர். பழமலையந்தாதிக்கும் உரையொன்று செய்தார். பெரியபுராணத்திற்கு ஆறுமுகத் தம்பிரான் உரையெழுதியபோது உடனிருந்து தக்க உதவிசெய்து அவ்வுரையை முற்றுப்பெறச் செய்தார்.

பதிப்பாசிரியர்

பழைய நூல்கள் இறந்துபடா வண்ணம் பாதுகாப்பதில் அடிகள் மிகுந்த கருத்துச் செலுத்தினர். ஓலைச் சுவடிகள் பலவற்றை ஆராய்ந்து அச்சுக்குத் தகுதியாமாறு தாளில் எழுதி ஒழுங்கு படுத்தினர். செல்வர் சிலருடைய உதவியைக்கொண்டு,

1. குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு
2. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு
3. திருவிளையாடற் புராண மூலம்
4. சீகாளத்திப் புராணம்
5. வசவபுராணம்
6. திருக்கூவப்புராணம்

7. வாயு சங்கிதை
8. சிவராத்திரி கற்ப முதலியன
9. தோத்திரப் பிரபந்தத்திரட்டு
10. முருகேசர் முதுநெறி வெண்பா
11. நால்வர் நான்மணிமாலையுரை
12. பழமலையந்தாதியுரை

ஆகிய நூல்களைப் பிழையற நல்லமுறையில் வெளிப்படுத்தி அரிய தமிழ்த்தொண்டு செய்தார். பூண்டி அரங்கநாதமுதலியார், காயாறு ஞானசுந்தர ஐயர், பாளையம் சோமசுந்தரம் செட்டியார் என்பவர்கள் இவருடைய தமிழ்த்தொண்டிற்குத் தக்கவாறு உதவி செய்தார்கள்.

இறுதி

1906-ஆம் ஆண்டில் சென்னையில் தங்கிச் சில நூல்களை அச்சிட்டுக்கொண்டும் விரைவாத நோய்க்கு அறுவை மருத்துவஞ் செய்துகொண்டும் இருந்தபோது, 55-ஆம் அகவையில் திடீரென்று காலமானார்.

---

## ரு. சுப்பிரமணியபிள்ளை

தோற்றம்

தொண்டை நாட்டிலே செங்கற்பட்டிலே 1846-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் (கலி 4947 பராபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28-ஆம் நாள்) சுப்பிரமணிய பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் தணிகாசலம் பிள்ளை. தாயார் பெயர் இலக்குமியம்மாள்.

கல்வி கற்றல்

இளமைப்பருவத்தில் வீட்டு உபாத்தியாயரிடம் தமிழுந் தெலுங்கும் படித்தார். பிறகு மிஷன் பள்ளியிற்

சேர்ந்து படித்தார். படிக்கிற காலத்தில் காலை நான்கு மணிக்கே எழுந்து பாடங்களைப் படிப்பது இவருடைய வழக்கம். இவருடைய குடும்பம் வறுமையுடையதாக இருந்தபடியால், இவர் தமது இளமைப் பருவத்திலேயே ஆறு ரூபா ஊதியத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயராக வேலைபார்க்கத் தொடங்கினர். அவ்வூதியமே குடும்பத்தை நடத்துவதற்குப் பயன்பட்டது.

1864-ஆம் ஆண்டில் சென்னைக் கிறித்தவப்பள்ளி ஆசிரியர் மில்லர் துரை செங்கற்பட்டுப் பள்ளிக்கூட சோதனைக்கு வந்தபோது சுப்பிரமணியபிள்ளை தமது கல்வி விருப்பத்தையும், குடும்ப வறுமையையும் துரையிடம் கூறினர். "சென்னைக்கு வந்தால் மெட்ரிகுலேஷன் படிப்பதற்கு உதவிசெய்கிறேன்" என்று துரை கூறினர். ஆயினும் இவர் தாய் தந்தையரைவிட்டுப் பிரிந்து எப்படிச் சென்னைக்குப்போவது என்று அஞ்சி அந்த ஆறு ரூபா அலுவலிலேயே மேலும் சில காலம் இருந்தார்.

### சென்னையில் கல்வி கற்றல்

1865-ஆம் ஆண்டில் - சென்னைக்குச்சென்று கல்வி கற்றற்கு உதவிப்பொருள் அளிக்கும் ஆராய்ச்சியொன்றில் தேர்வு எழுதி அதில் வெற்றிபெற்றார். அதனால் இவருக்கு எட்டு வெண்பொற்காசுகள் ஒவ்வொரு திங்களும் உதவித் தொகையாகக் கிடைத்தது. அதைக்கொண்டு இவர் சென்னையில் தங்கிக் கல்விகற்றார். பலதொல்லைகளுக்கிடையே படித்து 1867-ஆம் ஆண்டில் எப். ஏ., தேர்வில் தேறினர்.

### ஆசிரியத் தொழில்

மேலும் கல்வி கற்றுக்கொண்டிருந்தால் தம்முடைய தாய்தந்தையர்க்குத் தொல்லையேற்படும் என்று கருதிய

இவர் நாற்பது ரூபா ஊதியத்தில் ஆசிரியராக வேலை பார்க்கத்தொடங்கினர். அவ்வேலை இவருக்கு விருப்ப மில்லாதிருந்தபடியால் அதே பள்ளியில் கணக்கப்பிள்ளை யாக மாறினர்.

திருமணம்

காஞ்சிபுரத்தில் இவருக்குத் திருமணம் நடைபெற் றது. மனைவியாக வாய்த்த மங்கை வள்ளியம்மாள் என்னும் பெயருடையவர். சுப்பிரமணிய பிள்ளையைப் போலவே இம்மாதும் முருகப்பெருமானிடத்தில் சிறந்த கடவுளன்புகொண்டிருந்தார்.

பல ஊர்களில் வேலை

இவருக்குச் சென்னை வாழ்வு பொருந்தவில்லை. வெளி யூர்களில் இருக்கவேண்டும் என்பதே இவருடைய நோக்க மாக இருந்தது. பலவிடங்களினும் வேலைக்கு விண்ணப்பம் போட்டிருந்தார். 1870-ஆம் ஆண்டில் மஞ்சக்குப்பம் மாவட்ட நீதிமன்றத்திலே எழுத்தாளராக வேலை கிடைத் தது. அவ் வேலையை மேற்கொண்ட இவர், ஒவ்வொரு கார்த்திகைநாளிலும் முருகப்பெருமானுக்கு ஒருபலம் கற்பூரம் கொளுத்தி ஒளிவழிபாடு செய்யவேண்டுமென்று உறுதிகொண்டு அவ்வாறே இறுதிநாள் வரையில் செய்தார்.

முனிசீப்

முனிசீப் வேலையை அடைதற்பொருட்டு அதற்குரிய நூல்களைப் படித்து அத் தேர்வில் வெற்றியடைந்தார். எழுத்தாளர் வேலையில் தலைவராக (ஹெட்கிளார்க்) நூறு வெண்பொற்காசு ஊதியத்தில் வேலைபார்த்துக்கொண் டிருந்த இவர் முனிசீப்வேலை கொடுக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு எழுதினர். ஆயினும் உடனே கிடைக்கவில்லை. எட்டு ஆண்டுகள் முயற்சி செய்த பிறகு

பல இடங்களில் முனிசிப் வேலையைத் தற்காலிகமாகப் பார்த்தார். அதன்பின் 1888-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முனிசிப்வேலை கிடைத்தது. முதலில் அவ்வேலையை நாமக்கல்லில் பார்க்கத்தொடங்கினார். திங்கள் ஊதியம் ரூபா இருநூறு கிடைத்தது. ஆறுரூபா ஊதியத்தில் ஆசிரியராக அமர்த்தப்பட்ட இவர் தமது விடாமுயற்சியாலும் உழைப்பாலும் இவ்வாறு உயர்நிலையை அடைந்தார். கும்பகோணம், திருத்தருப்பூண்டி, மதுரை, மானாமதுரை ஆகிய இடங்களுக்கு மாற்றப்பட்டு வேலைபார்த்தார்.

### நூல்கள் வெளியிடல்

நூல்களை எழுதுவதிலும் வெளியிடுவதிலும் இவருடைய மனம் மிகுதியாக ஊக்கங்கொண்டிருந்தது. முருகன்மீது பேரன்பு பொருந்தியிருந்த இவர் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்ப் பாடல்களைத் தொகுத்துச் சுத்தமான பதிப்பாக வெளியிடவேண்டும் என்று பெருமுயற்சி செய்தார். புதுப் பாடல்கள் கிடைக்கக்கூடும் என்று பலவிடங்களினும் தேடினார். ஆயிரம் பாடல்களையாவது தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவதற்கு முயற்சி செய்தார். இவர் முனிசீப்பாக வேலைபார்த்த இடங்களிலெல்லாம் திருப்புகழ் ஏடு தேடும் வேலையையும் மேற்கொண்டிருந்தார். பிரமோத்திரகாண்டத்தை உரைநடையாக எழுதி 1879-ஆம் ஆண்டிலே முதன் முதலாக வெளியிட்டார். திருத்தருப்பூண்டியில் வேலைபார்த்தபோது அவ்வூர்ப் புராணத்தை எழுதிக் கோயிற்செலவில் வெளிப்படுத்தினார். மானாமதுரையில் இருந்தபோது அவ்வூர்த் தலபுராணத்தை உரைநடையாக எழுதி வெளிப்படுத்தினார்.

### முருகக்கடவுள்மீது அன்பு

இவரும் இவருடைய வழிமுறையினரும் முருகப் பெருமானையே குடும்பக் கடவுளாகவும் குலதெய்வமாகவும்

வழிபட்டொழுகினார்கள். இவர் நாள்தோறும் முருகக் கடவுள்மீது பாடல்கள் இயற்றுவது வழக்கம்.

"மண்ணாசை என்கின்ற மாயையில் வீழ்ந்து மதிமயங்கி
எண்ணா துனைமறந் தேயிருந் தேனினி யாகிலுமென்
அண்ணாஉன் தன்பொன் னடிக்கம லம்வந் தடையும்வண்ணம்
தண்ணார் அருள்புரி யாய்தணி காசல சண்முகனே."

"மாதர்கள் மோகந் தன்னில் மயங்கியே வீழ்ந்தி டாமல்,
போதநன் னெறியைப் பற்றிப் புண்ணியந் தனையே செய்துன்,
பாதமே கதியென் றெண்ணிப் பத்தியாய்ப் பணியும் நல்ல
சாதகம் வருவதென்றோ தணிகைமா மலையு ளானே."

என்பன இவர் இயற்றிய பாடல்களில் இரண்டு. அடிக்கடி தணிகைசென்று வழிபடுதலையும் இவர் தமது கடமையாகக் கொண்டிருந்தார். இவருடைய பெருமுயற்சியால் திருப்புகழ் ஆயிரத்து இருநூறு பாடல்கள்வரை சுத்தப் பதிப்பாகவும் இரண்டுமூன்று பகுதிகளாகவும் வெளிவந்தன.

### வேலையில் இருந்து விடுதலை

1901-ஆம் ஆண்டில் வேலையில் இருந்து விடுதலை பெற்றார். பிறகு சென்னையில் லிங்கச்செட்டித் தெருவில் வசித்திருந்தார். அடிக்கடி காஞ்சிக்கும் தணிகைக்கும் சென்று இறைவழிபாடு செய்தார். வேலைபார்த்திருந்த இடங்களைச் சுற்றியுள்ள சிவப்பதிகட்கெல்லாம் சென்று சிவபெருமானை வழிபாடு செய்வது இவருக்கு இயல்பு. இவ்வாறு முந்நூறு சிவப்பதிகள்வரை போற்றி வழிபட்டார்.

### எழுதியனவும் வெளியிட்டனவும்

இவரால் எழுதப்பட்ட உரைநடை நூல்களும் பதிப்பிக்கப்பட்ட நூல்களும் பல. அவற்றுள் சில வருமாறு :—

1. பிரமோத்ரகாண்டம் உரைநடை
2. திருத்தருப்பூண்டித் தலபுராணம் உரைநடை
3. மானுமதுரைத் தலபுராணம் உரைநடை
4. சிவத்தலமஞ்சரி
5. திருநீரேர்த் தலபுராணம் உரைநடை
6. திருப்புகழ் மூன்று பகுதிகள்.

முருகக்கடவுள்மீது இவர் இயற்றிய தனிப்பாடல்கள் பல.

பழக்கவழக்கம்

ஒவ்வொருநாளும் அன்றைய நிகழ்ச்சிகளைக் குறிப்பெழுதிவைக்கும் பழக்கத்தை இவர் மேற்கொண்டிருந்தார். இப்பழக்கத்தை இவர் தம் வாணாள்முழுதும் மேற்கொண்டிருந்தபடியால் பிற்றைநாளில் இவருடைய வரலாற்றுக் குறிப்புக்களுக்கு அது சிறந்த வழியாயிற்று.

இறுதி

முருகக்கடவுளிடத்துப் பேரன்புகொண்டு இடைவிடாது உழைத்துநின்ற இவர், 1909-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினேழாம் நாள், தமது அறுபத்து மூன்றாம் அகவையில் முருகன் திருவடிநீழலை அடைந்தார்.

---

## ௯. ஆபிரகாம் பண்டிதர்

தோற்றம்

திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள சாம்பூர் வடகரை என்னும் சிற்றூரில் 1859-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இரண்டாம் நாள் ஆபிரகாம் பண்டிதர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் முத்துச்சாமி. முத்துச்சாமி அன்பு அருள் அடக்கம் வாய்மை முதலிய நற்குணங்கள் யாவும் அமையப் பெற்றவர்.

**கல்வி கற்றல்**

ஆபிரகாம் ஐந்தாம் அகவையை அடைந்ததும் சுரண்டை என்னும் ஊரில் இருந்த பள்ளிக்குச் சென்று கல்விகற்கலானார். பள்ளிக்கல்வியை ஊக்கமாய்க் கற்றுத் தேர்வுகளில் முதன்மையாகத் தேறினார். ஓவியம் தீட்டுதற்கும் இசைபாடுதற்கும் இளமையிலேயே பழகிக்கொண்டார். 1874-ஆம் ஆண்டில் திண்டுக்கல்லை அடைந்து ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிற் சேர்ந்தார். அக் காலத்தில் புகைவண்டி போக்குவரத்து இல்லை. ஆகவே மிகச் சேய்மையில் உள்ள இடங்கட்குச் சென்று கல்விகற்பது மிகவுந் தொல்லையாக இருந்தது.

**பலவகைப் பயிற்சி**

இவர் ஆசிரியப் பயிற்சிக்குக் கல்விகற்ற நாளையில் அறிஞர் பலருடைய நல்லுறவைப் பெற்றார். இலக்கண இலக்கியங்களையும் சமயநூல்களையும் கற்றார். மருத்துவர்களோடு நட்புக்கொண்டு அவர்களுடன் இருந்து மருத்துவங் கற்றார். தம் நண்பராக இருந்த சோதிடம் கந்தசாமிப் பிள்ளை என்பவரிடம் கோள்நூல்களைக் கற்றார். இசையாசிரியர் பிடில் சடையாண்டிப் பத்தர் என்பவரிடம் இசை பயின்றார். தம் பள்ளித்தலைவரான யார்க்ஐயர் (Rev. York) என்பவரோடு புகைப்படம் பிடித்து அக்கலையினுந் தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார். தாம் மேற்கொண்டுள்ள சமயத்திற்கு ஏற்றவாறு கிறித்துவ மறையினை ஆராய்ந்து காலைமாலை வேளைகளில் தமது சமயக் கடவுளைப் போற்றுவார். கெட்டுப்போன பொருள்களைச் சீர்படுத்தும் (ரிபேர்செய்யும்) தொழிலும் கற்றுக் கொண்டார்.

ஆசிரியர்

ஆபிரகாம் பண்டிதருடைய அறிவுமாட்சியைக் கண்ட யார்க்ஜயர் இவரை அப் பள்ளியிலேயே ஓர் ஆசிரியராக அமர்த்தினார். இவர் அப்பணியை 1876-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டு பார்க்கத்தொடங்கினார். அக் காலத்திய ஆசிரியர்கள் கோலோடிய மாணவரைச்சாடி அவர்தம் மடமையை அகற்றுவதே முறைமையாக இருந்தது. ஆபிரகாம் தாம் அம்முறையை மேற்கொள்ளாது நன்முறைகளை மேற்கொண்டு மாணவர்களைத் தம்வழிப்படுத்தி அவர்களுடைய அறியாமையைப் போக்கினார்.

கருணாநந்தர் காட்சி

யானைமலைப்பட்டி என்னும் ஊரைச்சேர்ந்த இரு மாணவர்கள் ஆபிரகாம் பண்டிதரிடம் கல்விகற்றுக் கொண்டிருந்தனர். அந்த மாணவர்களின் தந்தையார் பெயர் பொன்னம்பலனார். பொன்னம்பலனார் ஆபிரகாம் பண்டிதரின் அரியகுணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவரை அவருடைய வீட்டிற்குப்போய்ப் பார்த்தார். அது முதல் ஆபிரகாம் பண்டிதரும் பொன்னம்பலனாரும் அரிய நண்பர்களாயினர். பொன்னம்பலனாருடைய ஊருக்குச் சென்ற ஆபிரகாம் பண்டிதர், அண்மையில் இருந்த சுருளி மலையைப்பற்றி உசாவியறிந்தார். அதில் பெரியவர் ஒருவர் இருக்கிறார் என்னுஞ்செய்தி தெரிந்தது. தம் நண்பரான பொன்னம்பலனாரையும் அழைத்துக்கொண்டு ஒருநாள் ஆபிரகாம் சுருளிமலைக்குச் சென்றார். இருவரும் மலையடிவாரத்தில் ஓரிடத்தில் இளைப்பாறியிருந்தனர்.

அச் சமயத்தில் காவியுடை அணிந்த துறவியொருவர் இவர்கட்கு முன்னால்தோன்றினார். "உங்களில் ஆபிரகாம் என்பவர் யாவர்?" என்று கேட்டார். அந்தக் காட்

டில் தம்மை முன்பின் அறியாத துறவி ஒருவர் தமது பெயரைக் கூறக்கேட்டவுடன் ஆபிரகாம் திடுக்கிட்டுப் போனார். உள்ளம்பதற, நாக்குழற, "ஐயனே! ஆபிரகாம் என்னும் பெயருடையவன் அடியனேன்தான்" என்றார். இதனைக்கேட்ட துறவி புன்முறுவல்கொண்டார். "எம்முடைய குருநாதன் நும்மை அழைத்துக்கொண்டு வருமாறு அடியேனுக்குக் கட்டளையிட்டுள்ளார். ஆதலின் என்பின்னே வருவீராக" என்றார். இம்மொழிகளைக் கேட்ட ஆபிரகாம் தம் நண்பர் பொன்னம்பலனாரை அவ்விடமே இருக்குமாறு பணித்துவிட்டுத் தாம் அத்துறவியின் பின்னே சென்றார். இருவரும் மலைமீது ஏறி மலையின் உச்சியை அடைந்தனர். ஆங்கோர் துறவி சந்தனமரத்தின் நீழலிலே பாங்குடன் அமர்ந்திருத்தலைக் கண்டார். ஆபிரகாம், உடனே அவரது அடிகளில் தமதுமுடிபட வீழ்ந்து வணங்கினார். பலவாறு போற்றிப் புகழ்ந்தார். அங்கெழுந்தருளியிருந்த பெரியாருடைய பெயர் கருணானந்தர் என்பது. அவர் ஆபிரகாம் பண்டிதருக்கு வாழ்த்துரைகள் கூறினார். "அன்பனே! உன்னுடைய வரவால் மிகுந்த மகிழ்ச்சி கொண்டோம். நீ இங்குவந்து எம்மைப் பார்க்க விரும்பியதின் நோக்கம் யாது?" என்று உசாவினார்.

கருணானந்தரைப் பார்த்து ஆபிரகாம் "ஐயனே, அடியேன் தங்களைக் காணுமுன் கொண்டிருந்த நோக்கம் வேறு. இப்பொழுது கொள்ளும் நோக்கம் வேறு. இப்போது தங்களைக் கண்டபின் அதனைமுற்றும் ஒழித்தேன். இனிமேல் அடியேன் தங்கள் திருவடிகளைப் பிரியா திருத்தல்வேண்டும் என்னும் விருப்பம் மிகுதியாகின்றது. தாங்கள் இதற்கு அன்புகூர்ந்து உடன்பாடுதந்தருள வேண்டிக் கொள்ளுகிறேன்," என்று சொல்லிவணங்கினார்.

கருணானந்தர் அறிவுரை

ஆபிரகாமின் வேண்டுகோளைக் கேட்ட கருணானந்த முனிவர் புன்னகை பூத்தார். சில அருள் உரைகளைக் கூற லானார். "அன்பனே! தம்மை ஒருபொருளாக மதித்துக்கொண்டு தம்மைச் சார்ந்தபொருள்களையெல்லாம் தம்முடையதென விரும் பித் திரிபவர்கள் துறவி என்று பேர்வைத்துக்கொண்டு நீட்டலையும் மழித்தலையுஞ் செய்து திரிதல் துறவன்று; மனத்துறவே மாண்பு மிக்க துறவாகும்" என்றுரைத்து மனத்துறவின் தன்மை யையும் அதனை அடையும் முறையினையும் அது நிலைபெறு தற்குரிய வழியினையும் நன்றாக உணர்த்தியருளினார். மேலும் ஆபிரகாமைப் பார்த்து, "பிள்ளாய்! நீ மருத்துவ வேட்கை மிகுதியும் உடையவனாக இருக்கிறாய். முப்பிணி களையும் நீக்கவல்ல அரிய மருந்துகளைச் செய்யும் முறை யினை நினக்குக் கூறுகிறோம். நீ அவைகளைச் செய்து உலகினரின் பிணியைத் தீர்ப்பாயாக," என்றுகூறி அரிய மருந்துகள் பலசெய்யவேண்டிய முறைகளைக் கூறினார். மருந்துப்பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய நட்புப் பகையினையும், ஒற்றுமை வேற்றுமைகளையும், மருத்துவத் திற்கு உதவும் பலவகையான மூலிகைகளையும் கூறினார். மருத்துவத்திற்கு வேண்டிய முறைகளையெல்லாம் கூறிய பின் வாழ்த்துரை வழங்கி ஆபிரகாமை அனுப்பிவைத்தார். ஆபிரகாம் நண்பர் இருந்த இடஞ்சென்று நிகழ்ந்ததைக் கூறி அவரோடு ஊரையடைந்தார். மேலும் மூன்றுமுறை கருணானந்தர் இருக்குமிடஞ்சென்று அரியவேண்டியவை களையெல்லாம் நன்கறிந்துகொண்டார்.

கருணானந்தர் மருந்துகள்

பிறகு ஆபிரகாம் தம் இருப்பிடமாகிய திண்டுக்கல்லை யடைந்தார். கருணானந்தர் திருவாய் மலர்ந்தருளிய முறைப்

படி மருந்துகளைச் செய்து தாம் உண்டு அவற்றின் பயன்களை நடைமுறையில் கண்டார். அவைகள் நல்ல பயனளித்தலைக் கண்டு உளம்மிக மகிழ்ந்தார். அந்த மருந்துகளுக்குக், “கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்” என்று பெயரிட்டார். நோயாளிகள் பலருக்குங்கொடுத்து உதவி செய்தார். மருந்தை அருந்திய எல்லோரும் நோய்நீங்கி நலம்பெற்றனர். மருந்தைப் பற்றிப் புகழ்ந்து பலருக்குங் கூறினர். இதனால் கருணானந்தருடைய மருந்துகள் யாண்டும் பரவிச் சீர்த்தி பெற்றன. அதனால் இவர் அவ்விடத்தில் சிறந்த மருத்துவராகவும் விளங்கினார். மேலும் இசை, கோணூல், ஆருடம், ஒளி, ஓவியம் முதலிய பிறகலைகளினும் தேர்ச்சிபெற்று விளங்கினார்.

தாய்தந்தையார் காண்டல்,

சாம்பூர் வடகரையில் இருந்த இவருடைய பெற்றோர்கள், தம்மகனார் தம் சமயத்தைத் துறந்து வேறு சமயத்தைத் தழுவி அச் சமயத்தொண்டிலே ஈடுபட்டுத் திகழ்கிறார் என்று உணர்ந்து வருந்தினார்கள். திண்டுக்கல்லையடைந்து தம் அருமை மகனைக் கண்டார்கள். தம் கான்முளையின் அறிவுப் பெருக்கையும், மருத்துவத்திறமையையும் இறைவழிபாட்டு நேர்மையையுங் கண்டு உள்ளங்களித்தார்கள். இவருடன் இரண்டொரு திங்கள் தங்கியிருந்துவிட்டுப் பிறகு தம்மூர் சென்றார்கள்.

திருமணம்

27-12-1882-ல் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. நாஞ்சாங்குளம் என்னும் ஊரில் இருந்த வேதக்கண் புனிதர் என்ற பெயருடையவரின் அருமைத் திருமகளும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, விருந்தோம்பல் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவளும், எட்டாம்

வகுப்புவரை படித்து ஆசிரியப் பயிற்சியை முடித்தவளும் ஞானவடிவு பொன்னம்மாள் என்ற பெயருடையவளு மாகிய நங்கையே ஆபிரகாம் பண்டிதரின் வாழ்க்கைத் துணையாக அமைந்தனள். மணம் முடிந்தபின் இவர் தம் மனைவியோடு திண்டுக்கல்லை அடைந்தார்.

தஞ்சையில் வேலை

திருமணமாகித் திண்டுக்கல்லை யடைந்து சின்னாள் வதிந்திருந்தார். பொருண்முட்டுப்பாட்டினால் இவர் வேலை பார்த்த பள்ளிமூடப்பெற்றது. இவர் உள்ளங் கலங்கினார். ஆனால், மிகுவிரைவில் தஞ்சையில் இருந்த ஒரு பெண் பள்ளிக்குக் கணவன் மனைவி இருவராகிய ஆசிரியர்களாக அமர்த்தப் பெற்று மகிழ்வடைந்தனர். சில ஆண்டுகள் இவ்வேலையை மேற்கொண்டிருந்தார்.

மருத்துவத் தொழில்

1890-ஆம் ஆண்டில் தமது ஆசிரியத் தொழிலை விட்டார். தஞ்சை மிஷன்தெருவில் உள்ள ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் குடிபுகுந்தார். கருணானந்தர் திருவாய் மலர்ந்தருளிய முறைப்படி மருந்துகளைச் செய்து எடுத்துக்கொண்டு பல ஊர்களுக்குஞ் சென்று நோயாளிகளுக்கு மருத்துவஞ்செய்து அவர்களைக் குணப்படுத்தினார். ஆங்காங்கிருந்தவர்களுடைய நட்பினையும் பெற்றார். அக் காலத்தில் இவருக்கு உதவி செய்தவர்கள் திருப்பாதிரிப் புலியூர் திருக்கோவலூர் ஆதீனத்தலைவர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய ஞானியார், நாகை. அருட்டிரு ஐசக்ஞான வொளிவு ஐயரவர்கள், ஊ. சு. கிருட்டிணசாமி ஐயர், சென்னை வழக்கறிஞர் சோசப் சத்தியநாதன், சேலம் பா. தானியேல் முதலிய பலராவர். இவர் பலமுறை குடும்பச்

செலவிற்குக் கூடப்போதிய வருவாய் இல்லாமல் மிகுந்த தொல்லைப்பட்டார். இவருக்கு மக்களும் பலர் தோன்றினமையின் குடும்பம் விரிவடைந்தது. மூவாண்டுகள் வறுமைத் தொல்லை முடுகிவாட்டியது.

நல்வாழ்வு

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருதலைப்போலச் செல்வமும் வறுமையும் மாறிமாறி வருதலும் உண்டு. ஆபிரகாம் கடவுள் திருவருளையே உறுதியாய் நம்பித் தொழிலினைப் புரிந்து நின்றார். இறைவனுடைய அருள் நோக்கம் இவர்மேல் வீழ்ந்தது. இவருடைய மருந்துகள் தமிழகம் முழுவதும் பரவியதல்லாமல் வடநாடுகளினும், பர்மா, மலேயா, சைகோன், கொழும்பு, மடகாஸ்கர் முதலிய பிறநாடுகளினும் பரவின. இதனால் இவருக்குப் பொருள் வருவாய் மிகுதியாயிற்று. 1893-ஆம் ஆண்டில் ஒரு நல்ல வீட்டைத் தமக்கு உரிமையாக வாங்கினார். இச் சமயம் மைசூர், பூனா, பம்பாய் முதலிய இடங்களில் கட்டிக்காய்ச்சல் என்னும் கொடிய நோய் தலைவிரித்தாடியது. அதனைப் போக்குதற்கு அப்பொழுது நன் மருந்து எந்நாட்டினும் இல்லாதிருந்தது. இவர்தம்முடைய நுண்ணறிவால் ஓர் அரிய மருந்தைக் கண்டறிந்து அதை அந்நாடுகட்கு அனுப்பி நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார். இதனால் இவருடைய வருவாய் மிகுதிப்பட்டது, சீர்த்தியும் பரவியது. இதன்பிறகு தோட்டம், துரவு, நிலபுலம் முதலியவைகளையும் தமக்கு உரிமையாக வாங்கினார். தம் உறவினர் பலரையும் வரவழைத்து அவர்கட்கும் உதவிசெய்தார். இவருடைய முதன்மனைவி 15-12-1911-ல் மறைந்தபடியினால் 5-2-1912-ல் மறுமணம் செய்துகொண்டார்.

நூல்வெளியிடல்

இவர் மருத்துவத் தொழிலோடு அமைதியுற்றிராமல் பிற கலைகளையும் நன்றாகக் கற்றுணர்ந்தார். "கருணாமிருத சாகரத்திரட்டு" என்னும் இசைப்பாநூலை 1907-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். தமிழிசையைப் புதுப்பித்தற்கு அடிகோலியவர்களில் இவரே முதல்வராவார். பின்னர் 1917-ஆம் ஆண்டில் "கருணாமிர்தசாகரம்" என்னும் பெயருடைய அரியநூல் ஒன்றை வெளியிட்டார். பிறகு இதனுடைய இரண்டாம் பாகத்தையும் வெளியிட்டார்.

இசை மாநாடு

1912-ஆம் ஆண்டு மேத்திங்கள் 27-ஆம் நாளில் இந்நாட்டின் பலபாகங்களினுமிருந்து இசைப் புலவர், இசையறிஞர், இசையன்பர், இசைப்புரவலர், இயற்றமிழ்ப் புலவர் ஆகிய பல அறிஞர்களையும் ஒன்றுசேர்த்து இசை மாநாடு ஒன்றினைத் தம்பொருட் செலவில் நடத்தினார். மேலும் பல இசைமாநாடுகளை நடத்தினார். 1916-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் 20-ஆம்நாள் பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய இசைமாநாட்டிற்கு அழைக்கப் பெற்று அங்குச்சென்று, இன்னிசைக் கலைக்குத் தாயகமாய்த் தொன்றுதொட்டு விளங்குவது தென்தமிழ்நாடே என்று வலியுறுத்திக் கூறினார்.

இறுதி

மருத்துவக்கலைக்கும் தமிழிசைக்கும் பெருந்தொண்டு செய்து சிறந்து விளங்கிய இவர் 1919-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முப்பத்தொன்றாம்நாள் தமது அறுபதாம் அகவையில் பூதவுடலை நீத்துப் புகழுடலை நண்ணினார்.

# ௫. நல்லசாமிப் பிள்ளை

### தோற்றமும் கல்வியும்

1864-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம்நாள் திரிசிரபுரத்திலே நல்லசாமிப் பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் மாணிக்கம் பிள்ளை; தாயார் பெயர் செல்லத்தம்மையார் மாணிக்கம் பிள்ளை சிறிய வருவாயில் அரசாங்க அலுவலில் அமர்ந்திருந்தார். நல்லசாமிப்பிள்ளை இளமைப் பருவத்தில் தமிழறிஞர் ஒருவரிடம் பொதுக் கல்வியையும், ஓதுவார் ஒருவரிடம் தமிழ்மறையையும், பாடசாலை ஒன்றில் ஆங்கிலத்தையும் பயின்றார். தமது பதினைந்தாவது அகவையில் மெட்டிரிக்குலேஷன் தேர்வில் முதல்வகுப்பில் தேறினார். பிறகு எப்.ஏ. வகுப்பிலும் தேறினார்.

### சென்னையில் கல்வி

நல்லசாமியின் கல்வியார்வத்தைக் கண்டு, அவருடைய தமையன்மார்களான சுப்பராயப் பிள்ளையும் மதுரநாயகம் பிள்ளையும் நல்லசாமியைச் சென்னைக்கு அனுப்பிக் கல்வி பயிலச் செய்தனர். நல்லசாமி சென்னையை அடைந்து இராசதானிக் கல்லூரியிற் சேர்ந்தார். தத்துவ சாத்திரத்தைத் தமது பாடமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு கல்விபயின்றார். 19-ஆம் அகவையில் பி. ஏ. பட்டம் பெற்றார். சட்டக்கல்வியையும் பயின்று பி. எல் பட்டத்தையும் பெற்றார். 1887-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞரானார்.

### முன்சீப்புவேலை

வழக்கறிஞர் தொழிலில் இவர் மிகச் சிறந்து விளங்கியபடியால் ஐந்தரை ஆண்டுக்குள் மாவட்ட முன்சீப்பாக 1893-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பெற்றார். வட ஆர்க்காடு

மாவட்டம் திருப்பத்தூரிலே வேலையை ஏற்றுக்கொண்ட இவர் அவ்வேலையோடு சமயப்பணிகட்கான வேலையையுஞ் செய்யத்தொடங்கினார். சிவஞானபோதத்தை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து 1894-ஆம் ஆண்டில் வெளியிட்டார். 1897-ஆம் ஆண்டில் திருவருட்பயன் என்னும் நூல் வெளிவந்தது. இவருடைய ஆதரவில், "உண்மை விளக்கம்," "சித்தாந்ததீபிகை" என்னும் பெயர்களுடன் இரண்டு திங்கள் வெளியீடுகளும் வெளியிடப்பெற்றன. மேலும் இவர், சித்தூர், நந்தியால், சேலம், இராசமகேந்திரவரம், குண்டூர், திருப்பாதிரிப்புலியூர் ஆகிய இடங்கட்கு மாற்றப் பெற்று அவ்வவ்விடங்கட்குச் சென்று வேலை பார்த்த போதும் நூல்கள் பலவற்றை எழுதி வெளிப்படுத்தினார். மாவட்ட முன்சீப்பாக இவர் இருபது ஆண்டுகள் வேலை பார்த்தார். இவருடைய நீதிமன்றத்திலே அறநெறிதான் முதன்மையான நோக்கமாக இருந்தது. அரசாங்க வழக்குகளாக இருந்தாலும் இவர் முறைமாறாமலே தீர்ப்புகள் செய்தார். இவருடைய தீர்ப்புகள் மேல் நீதிமன்றத்திற்குப் போவது மிகவும் அருமை; அப்படிப்போனாலும் இவருடைய தீர்ப்புக்களே உறுதிசெய்யப்படும். வழக்காளியையும் எதிர்வழக்காளியையும் ஒற்றுமைப் படுத்துவதிலேயே இவர் தம்முடைய கருத்தைச் செலுத்துவார்.

### சமயப்பணி

நல்லசாமிப் பிள்ளை சமயப்பணியைப் பெரிதாக நாடியிருந்தபடியால், அரசியல் அலுவலை ஒருபொருளாக மதியாது நீத்துவிட்டுச் சமயப்பணியில் இறங்கினார். அவைகளில் சொற்பொழிவாற்றுதல், ஆங்கிலத்தாள்களுக்குச் சமயக்கட்டுரைகள் எழுதுதல் முதலியவைகளை மிகுதியாக மேற்கொண்டார். சமயத்துறையில் இவருக்கு நண்பர்க

ளாக அமைந்தவர்கள், மறைமலையடிகள், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், காசிவாசி செந்திநாதையர், தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளை, பொ. முத்தைய பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகள், காஞ்சி நாகலிங்க முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, கி. குப்புச்சாமி முதலியார் முதலியோராவர். மறைமலையடிகள் இளமை முதற்கொண்டே நல்லசாமிப் பிள்ளையுடனேயே உண்டு உடுத்து உறைந்த நெருங்கிய நட்பினராவர். இருவரும் பல சிவப்பதிகட்குச் சென்று இறை வழிபாடு செய்வது வழக்கம். ஆங்கிலக்கட்டுரைகளே யன்றித் தமிழில் சமயக்கட்டுரைகள் எழுதுவதினும் இவர் சிறந்து விளங்கினர். செந்தமிழ், சித்தாந்ததீபிகை, சித்தாந்தம் முதலிய பத்திரிகைகளில் தமிழ்க் கட்டுரைகள் வெளியாயின.

### சொற்பொழிவுகள்

இவர் பல பேரவைகளில் தலைமைதாங்கிச் சொற்பொழிவுகள் செய்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் இருமுறை தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றினர். சைவசித்தாந்த மகாசமாசத்தில் மூன்று ஆண்டுகள் தலைமையேற்றார். பாளையங்கோட்டை, சங்கரிதுர்க்கம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள சைவசபைகளிலும் தலைமைதாங்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். 1907-ஆம் ஆண்டில் கல்கத்தாவிலும், 1911-ஆம் ஆண்டில் அலகாபாத்திலும் நடந்த சர்வசமயப் பெருங்கூட்டங்களில் ஆகம அத்துவித சைவத்திற்கு ஆணையாளராகச் சென்று விரிவுரையாற்றினர். தமிழ்நாட்டில் சைவசபைகள் பல தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார்.

விவேகானந்தர்

சிகாகோ சென்று திரும்பிவந்த விவேகாநந்த அடிகளை ஒருமுறை சென்னையிற் கண்டு உரையாடினர். அப்பொழுது சைவசித்தாந்த மெய்ப்பொருளை அவரிடம் தெளிவாக விளக்கிக்கூறினர். இவருடைய உரையைக் கேட்ட விவேகாநந்த அடிகள், "இவ்வரிய மெய்ப்பொருள் தென்னிந்தியாவில் இருக்கிற செய்தி தமக்குத் தெரியாது," என்றுகூறிச் சித்தாந்த உண்மைகளைப் பெரிதும் பாராட்டிக் கூறினர். அன்னிபெசண்ட் அம்மையார் போன்ற அறிஞர்களுடனும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பினர்.

நூல் உரிமை

பிள்ளையவர்களின் நூற்பெருமையை உணர்ந்த தருமையாதீனத்தார் நூல்களின் உரிமையைத் தாம் பெற்று அந்நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். முதற்கண் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலியவைகளை அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்கள். எஞ்சியவைகளையும் நாளடைவில் வெளியிடுவார்கள்.

குடும்ப வாழ்க்கை

இவர் தமது இருபதாவது அகவையில் இலட்சுமி என்னும் மாதைத் திருமணம் புரிந்து இல்லறவாழ்க்கையை மேற்கொண்டார். அவ்வம்மையார் தம் கணவன் குறிப்பறிந்து தமது இல்லறவாழ்க்கையை எல்லாவகையினும் சிறப்புற நடத்தினர். இவர் வழக்கறிஞராக இருந்தபோதும் நீதிமன்றத்தலைவராகத் திகழ்ந்தபோதும் உறவினர்களையும் விருந்தினர்களையும் நன்குபேணி, "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டு" என்னும் தமிழ்மறையைப் பின்பற்றினர். எப்பொழுதும்

இவருடைய இல்லத்தில் விருந்தினர் பலர் இருந்து கொண்டே இருந்தனர். இவர் இல்லறத்தில் இல்லறத்தாராக இருந்தபோதினும் அதிற் சிறிதும் பற்றுவைக்காமல் துறவியைப் போன்றே வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

இவருடைய பண்புநலம்

இவர் தாம் கற்றும்கேட்டும் இருந்த நுண்ணிய பொருள்களைத் திறமையாக யாவருக்கும் விரித்துரைக்கும் சொல்லாற்றலை நன்றாகப் பெற்றிருந்தார். மறந்துகூடச் சிவனை மறவார். எப்பொழுதும் தேவார திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டேயிருப்பார். மெய்ம்மறந்து சிவபூசை செய்வார். வாழ்க்கையை ஆடம்பரமாக நடத்தாது எளியமுறையிலேயே நடத்தினார்.

மகனறிவு தந்தையறிவு

"மகனறிவு தந்தையறிவு" என்பர் பெரியோர். இவருடைய அருமை மகனாகத்தோன்றிய இராமநாதன் என்பவரும் தந்தையின் வழிநின்று தாமும் சைவப்பணிகளை மேற்கொண்டார். அச்சகம் ஒன்றை ஏற்படுத்தித் தந்தையாரின் நூல்களை அச்சிற்பதிப்பித்து வெளியிட்டார். ஆனால், அவர் மிகுவிரைவிலேயே இறைவன் திருவடிநீழலை எய்திவிட்டார்.

இறுதி

இறுதிக் காலத்தில் நல்லசாமிப் பிள்ளை மதுரையை அடைந்து மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். நோய்கள் சில இவரைப் பீடித்தன. 1920-ஆம் ஆண்டில் தமது ஐம்பத்தாறும் அகவையில் இறைவன் திருவடிநீழலை எய்தினார்.

மொழிபெயர்த்த நூல்கள்

1. உண்மைநெறி விளக்கம்
2. சிவஞான போதம்
3. சிவஞான சித்தியார்
4. திருவுந்தியார்
5. உண்மை விளக்கம்
6. வினாவெண்பா
7. கொடிக்கவி
8. திருவருட் பயன்
9. இருபா இருபஃது
10. சிவபக்த விலாசம்

என்பன இவருடைய நூல்கள். இவைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

---

## கூ. சபாரத்தின முதலியார்

பிறப்பு

ஈழமண்டலத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்திலே கொக்குவில் என்னுஞ் சிற்றூரிலே வேளாளர் குலத்திலே 1858-ஆம் ஆண்டில் (காலயுக்தி) ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றும் நாள் சபாரத்தின முதலியார் பிறந்தார். தந்தையார் பெயர் சபாபதிப்பிள்ளை. தாயார் பெயர் ஆச்சிமுத்து அம்மையார்.

கல்விப்பயிற்சி

இவர் உரிய காலத்திலே கல்விப் பயிற்சி செய்விக்கப் பெற்றார். அக்காலத்திலே புகழ்பெற்ற தமிழ் அறிஞராக விளங்கிய கொக்குவில் சுயம்புநாதர் என்பவரிடத்தில் முதன்முதலாகத் தமிழ்க்கல்வியைக் கற்கத்தொடங்கினார். நடுத்தரக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றார்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானிடமும் இவர் சில காலம் தமிழ்க்கல்வி கற்ருர். அப்போது இவருடனிருந்து கற்ற வர்களுள் முதன்மையானவர் யாழ்ப்பாண சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைவராக விளங்கிய த. கைலாச பிள்ளை அவர்களாவர். நாவலர் பெருந்தகையாரின் அருட் பார்வையாற்ருன் இவருக்குச் சமயப்பற்று இளமையில் வேரூன்றியது; நாளடைவில் இவர் சமயத்தின் பால் கொண்ட பற்றின்காரணமாக அது வளர்ந்தது. நாவலரவர் களைப் போலவே இவரும் தம்முடைய பத்தென்பதாம் வயதுமுதற்கொண்டே சமயத்தொண்டுகளில் ஈடுபட்டார்.

சமயத்தொண்டு

இவர் காலத்தில் சார்லஸ் பிராட்லாப்[1] என்னும் கிறித்தவ தத்துவஞானி ஒருவரிருந்தார். இவர் புகழ்பெற்ற பண்டிதர். எனினும் ஊழ்வலியினுல், "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; எல்லாம் இயற்கை அமைப்பே," என்னும் 'நீரீச்சுரவா'தக் கொள்கையைத் தழுவி, அதைப் பரப்பும் நோக்கத்துடன் பல நூல்களெழுதி வெளி யிட்டார். இவர் கொள்கை சில தமிழ் இதழ்கள் வாயிலா கவும் பரவத்தொடங்கியபோது, சைவசமயத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் இதனுல் கேடுவிளைவதைக்கண்ட முதலியார் அதனைக் காலத்துக் கேற்றவாறு தருக்க முறையில் மறுத்துப் பல கடிதங்கள், யாழ்ப்பாணத்தில் அப்பொழுது வெளிவந்தகொண்டிருந்த உதயபானு என் னும் ஒரு தமிழிதழ் வாயிலாக வெளியிட்டனர். இதன் பயனுக 'நீரீச்சுரவாதம்' தமிழ் நாட்டிலிருந்து நீங்கிற்று. அவ்வமயம் இவர் எழுதிய மதிப்புரைகளே, ஈச்சுரநிச்சயம் என்னும் பெயர் தாங்கிய நூலாக 1896-ல் வெளி வந்தது.

---

1. Charles Bradlaugh.

அலுவல்

1878-ஆம் ஆண்டில் அரசாங்க அலுவலில் அமர்ந்தார். முதன்முதலில் எழுத்தாளராக வேலை பார்க்கத் தொடங்கியவர் தம்முடைய ஊக்கத்தினாலே உயர் பதவிக்கு வந்தார். முல்லைத்தீவு, கொழும்பு, கண்டி முதலிய இடங்களில் அலுவல் பார்த்தார். "யாழ்ப்பாணக்கச்சேரி முதலியார்" என்னும் அலுவலைச் சில காலம் பார்த்தார். பிறகு பத்து ஆண்டுகள் யாழ்ப்பாணத்து உதவி பிசுக்கல் என்னும் வேலையைப் பார்த்தார்.

திருமணமும் மக்கட் பேறும்

1889-ஆம் ஆண்டில் கனகம்மாள் என்னும் பெண் மணியைத் திருமணஞ் செய்துகொண்டார். அப்பெண் மணியினிடம் நவரத்தினம் என்னும் ஓராண்மகனும் பரஞானம் என்னும் பெண்மகளுந்தோன்றினர். முதல் மனைவி காலமாக, இரண்டாவது திருமணஞ் செய்துகொண்டார். அம்மனைவியினிடத்தில் ஒரு பெண்மகவுதோன்றியது.

பட்டம் பெறுதல்

அரசாங்கத்தினர் இவரிடம் தாம் கொண்டிருந்த நன் மதிப்புக்கு அறிகுறியாக 1905-ஆம் ஆண்டில் இவருக்கு முதலியார் என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கினர். பிறகு 1917-ஆம் ஆண்டில் சமாதான நீதிபதி என்னும் கௌரவ வேலையைக்கொடுத்தனர். இறுதியில் 1919-ஆம் ஆண்டில் "இராசவாசல் முதலியார்" என்னும் சிறப்புப் பெயரையும் வழங்கினர்.

சிவப்பதி யாத்திரை

1922-ம் ஆண்டில் சிவவழிபாடு செய்யும் பொருட்டுப் பல சிவப்பதிகளுக்குச் சென்றார்.

இறுதி

காசிப்பயணம் முதலியவைகளை முடித்துக்கொண்டு திரும்பிய இவர் உறவினர் சாக்காட்டால் நேர்ந்த துன்பத்தால் நோயடைந்து 1922-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

அலுவலில் இருந்த காலத்திலேயே இவர் நூல்கள் எழுதும் வேலையிலும் ஆங்கிலப் பத்திரிகைகள் தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றில் கட்டுரை எழுதும் வேலையிலும் ஈடுபட்டார்.

1. சீவான்ம பேதம்
2. ஈச்சுர நிச்சயம்
3. இந்துமதத்தின் முக்கியாம்சங்கள்
4. பிரபஞ்சவிசாரம்
5. திருஞானசம்பந்தர் வரலாறு (ஆங்கிலம்)
6. திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு
7. மறு பிறப்புண்மை
8. பண்டைத் தமிழர்களின் சமயக்கொள்கை
9. சைவோத்தரம்
10. சரவணபவமாலை
11. நல்லை நான்மணிமாலை
12. கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டைமணி மாலை
13. கொக்குவில் சிவசுப்பிரமணியர் மும்மணிக்கோவை

என்பன இவரால் எழுதப்பெற்றவை.

# எ. நாகை. தண்டபாணிப் பிள்ளை

தோற்றம்

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஆன்றோர்களால் புகழ்ந்தோதப்பெற்ற சோழவளநாட்டிலே, நாகபட்டினத்திலே, 1891-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இரண்டாம் நாள் தண்டபாணிப் பிள்ளை பிறந்தார். தண்டபாணிப் பிள்ளையின் தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை தாயார் பெயர் சுந்தரத்தம்மையார்.

கல்வி

நாகையில் கிறித்தவ சமயத்தினரால் நடத்தப்பட்டு வந்த வெஸ்லியன் மிஷன் கல்லூரியிற் கல்வி பயின்றார். இளம்பருவத்தில் இருந்தே கல்வி கற்றலில் கருத்துடையவராக இருந்தமையின் பள்ளித் தேர்வுகளில் ஒழுங்காகத் தேறி மெட்ரிக்குலேஷன் வகுப்பை யடைந்தார். இந்நாளில் இவருடைய கல்வி நாட்டம் பல துறைகளில் சிதறியது. ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய புதுக் கதைகளைப் படிப்பதினும், தாமும் அவ்வாறு கதைகள் எழுதுவதினும், தமிழ் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதினும் கருத்துச் செலுத்தினர். இதன்பயனாக மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேறாமற் போனார். இவர் தவறியதைக் கண்டு இவருடைய மாமனார் இவரைக் கடிந்துகொண்டார். அந்தணச் சிறுவன் ஒருவன் தண்டபாணியின் மாமனாரிடத்தில் சம்பள உதவி பெற்றுப் படித்துக்கொண்டிருந்தான். அவன் தேர்வில் தேறிவிட்டான். இதனைத் தண்டபாணியின் மாமனார் அவனைச் சுட்டிக் காட்டினார். "நம்மிடம் உதவிபெற்றுப் படித்த ஒருவன் தேர்வில் வெற்றி பெறுவதும் நீ தவறுவதும் இழுக்கன்றோ?" என்று கூறி இடித்துரைத்தார். அப்போது தண்டபாணி ஆண்டு பதினாறு கூட நிரம்பப்பெறாத இளைஞராக இருந்தார். ஆயினும்

தன்மான உணர்ச்சி அவருக்கு மிகுதியாக இருந்தது. அத ஞல் மனம் வருந்திஞர்.

அயல்நாடடைதல்

தண்டபாணி நாட்டைவிட்டே வெளியேறுவதென்று முடிவு செய்தார். இரங்கூனில் இருந்த தம் மைத்துனரைப் பார்க்க விரும்புவதாகக் கூறி விடைபெற்றுக்கொண்டு இரங்கூன் சென்ருர். தண்டபாணிக்கு ஏற்ற தொழில் அங்கு அகப்படவில்லை. சின்ஞள் அங்கிருந்துவிட்டுப் பிறகு பிஞங்கிற்குச் சென்ருர். அங்கு இவருடைய ஆங்கில அறிவை ஓர் ஐரோப்பிய பாடசாலைத் தலைவர் கண்டார். தம் பள்ளியிலே ஓர் ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். பிஞங்கில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட தண்டபாணி நீண்ட ஒரு விடுமுறைக் காலத்திலே நாகைக் குத் திரும்பிஞர்.

திருமணமும் சென்னை வாழ்வும்

தண்டபாணிக்கு 1911-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு வெளிநாட்டிற்குப் புறப்பட வில்லை. தமது முயற்சியால் பொருள் தேடி வாழ்க்கையை நடத்த விரும்பிஞர். நாகையை விட்டுச் சென்னையை அடைந்தார், தமக்கு ஏற்ற தொழிலைத் தேடிஞர். குமார சாமி நாயுடு அண்டு சன்ஸ் உரிமையாளர் சயராம் நாயுடு, ஆநந்த போதினி உரிமையாளர் நா. முனிசாமி முதலியார் ஆகியோர் அவ்வப்பொழுது இவருக்கு உதவி புரிந்தனர். அந் நாளில் இவர் புதுக் கதைகள் பலவற்றை எழுதி வருவாய்க்கு வழியேற்படுத்திக்கொண்டார்.

பவானந்தர் கழகம்

தண்டபாணி முன்னரே மறைமலையடிகளை அறிந்திருந் தார். ஆகவே மறைமலையடிகளையடுத்து நூல்கள் பலவற்

றைப் பாடங் கேட்கலானார். இந் நிலையில் புலவர் பெரு மக்களின் நட்பும் தமிழ்நூற் பயிற்சியில் ஆர்வமும் இவருக் குண்டாயிற்று. மறைமலையடிகள்பால் சில நூல்களைக் கற்றவளவில்தானே நல்ல புலமையடையப் பெற்றார். அந் நாளில் சென்னை ஊர்காவல்துறைத் துணை ஆணையாளராக (டிபுடி கமிஷனர் ஆப் போலீஸ்) இருந்த சரவணபவானந்தம் பிள்ளையவர்கள் தம் பெயரால் கழகம் ஒன்று நிறுவித் தண்டமிழ் மொழியில் உள்ள பண்டைத் தமிழ் நூல்கள் பலவற்றை வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். இத் தகைய சமயத்தில் சரவணபவானந்தர் தண்டபாணிப்பிள்ளை யவர்களைக் கண்டார். இவருடைய தமிழ்நூற் புலமையை யும் ஆங்கிலநூற் பயிற்சியையும் உணர்ந்தார். தம்மிடமே வேலைக்கு அமர்த்திக்கொண்டார். அதுமுதல் பிள்ளையவர் கள் பவானந்தர் கழகத்தில் ஆசிரியராக இருந்துகொண்டு, யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பிய பொருளதிகாரம், இறையனார் அகப்பொருள், நன்னூல் உரை, திருவாசகம் திருக்கோவையார் முதலிய நூல்கள் வெளிவருதற்கு ஆவன செய்தார்.

கதைகள் எழுதுதல்

பவானந்தர் கழக வருவாய் பிள்ளையவர்களுடைய செலவுக்குப் போதியதாக இல்லை. ஆகவே வேறு முயற் சிகளாலும் பொருள்தேட வேண்டியது இன்றியமையாத தாயிற்று. கற்பனையாகக் கதைகள் எழுதவதினும் ஆங் கிலக் கதைகளைத் தமிழ் நாட்டிற்கு ஏற்ற வகையில் அமைப் பதினும் இவர் முன்னரே தேர்ந்திருந்தார். ஆகவே அத் திறமையையும் இவர் இப்பொழுது பயன்படுத்தினார்.

உரையாசிரியர்

இவர் பவானந்தர் கழகத்தில் வேலை பார்த்துக்கொண் டிருந்தபோது, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக

அமைச்சர் திருவரங்கனார், திருக்கருவை பதிற்றுப்பத் தந்தாதிக்கு உரை ஒன்று எழுதுமாறு கேட்டுக்கொண்டார். இவர் அவ்வாறே சிறந்த உரை ஒன்று எழுதிக் கொடுத்தார். அவ்வுரை திரு வி. கலியாணசுந்தர முதலியார் முதலிய அறிஞர்களால் புகழ்ந்து போற்றப்பெற்றது.

பிறகு திருக்குறளுக்கு விளக்கவுரை ஒன்று எழுதுமாறு திருவரங்கனார் கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்கி இவர் திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதத் தொடங்கினார். இவ்வுரை அறத்துப்பால் முழுவதுக்கும் எழுதப்பட்டது.

இறுதி

பொருட்பாலுக்கு இவர் உரை வகுத்துக்கொண்டிருந்தபோது உடல்நோய், மனநோய், வறுமைநோய் முதலியன இவரைப் பற்றின. அவைகளிலிருந்து இவர் மீளாமலே தமது முப்பத்தொன்றும் அகவையில் 1922-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் இறைவன் திருவடி நீழலை எய்தினார்.

இயற்றிய நூல்கள்

1. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி உரை
2. திருக்குறள் அறத்துப்பால் விருத்தி உரை
3. சதாநந்தர்
4. ஏகம்பஞ்சசதம்
5. கலாசுந்தரி
6. மாயாவதி
7. கௌதமபுத்தர்

முதலியன இவர் இயற்றிய நூல்கள்.

பண்பு நலம்

"அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்பது பெரியோர் மொழி. தண்டபாணிப் பிள்ளை இதற்கோர்

எடுத்துக்காட்டாக அமைந்து நின்றார். உளத் தூய்மையும் தந்நலங் கருதாத் தன்மையும் இவருக்குச் சிறப்பாக அமைந்து நின்றன. சாதி சமய வேறுபாடுகளை இவரிடம் காண்பது அரிது. பணக்காரர்களைவிடப் பண்பாளர்களையே இவர் பெரிதும் விரும்புவார். இவர் தமது வருவாயின் பெரும் பகுதியைப் புதுநூல்கள் வாங்குதற்குச் செலவு செய்தார். இவருடைய வறுமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆயிற்று.

---

## அ. சுப்பிரமணிய ஐயர்

### தோற்றம்

நாட்டு விடுதலைக்காக உழைத்த தமிழறிஞர்களில் வ. வே. சுப்பிரமணிய ஐயரும் ஒருவர். சுப்பிரமணிய ஐயர் திருச்சி என வழங்கும் திரிசிரபுரத்தை ஒட்டியுள்ள வரகநேரி என்னுஞ் சிற்றூரிலே 1881-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தார். ஐயருடைய தந்தையார் பெயர் வேங்கடேச ஐயர். தாயார் பெயர் காமாட்சி அம்மையார். ஐயருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் வேங்கட சுப்பிரமணியன் என்பது.

### கல்விப்பயிற்சி

ஐயருடைய தந்தையாராகிய வேங்கடேச ஐயர். ஆங்கிலம் கற்றவர். ஐரோப்பிய முறையில் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தவர். தம்முடைய மகனுக்கு முதலில் தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கித் தமிழ் மொழியைக் கற்பித்தார். பிறகு கிறித்துவ மதப் பள்ளிக்கு அனுப்பி ஆங்கிலக்கல்வி கற்க ஏற்பாடு செய்தார். இலத்தீன் மொழியையும் அய்யர் ஆங்கில

மொழியோடு கற்ருர். ஐயருக்குக் கல்வியில் தளராத ஊக்கமும் ஏக்கமும் இருந்தபடியால் மிக இளம்பருவத்திலேயே, அஃதாவது 1893-ஆம் ஆண்டிலேயே மெட்ரிகுலேஷன்தேர்வில் மாகாணத்தில் ஐந்தாவதாகத் தேர்ச்சி பெற்ருர். பிறகு கல்லூரியிற் சேர்ந்து படித்தார். 1899-ஆம் ஆண்டில் பி. ஏ. கல்வி கற்றுத்தேறினர். பின்னர் 1901, 1902-ஆண்டுகளில் சட்டக் கல்லூரியில் படித்து வழக்கறிஞரானர். முதன்முதலாகத் திரிசிரபுரத்தில் வேலையும் பார்த்துப் பொருளீட்டத்தொடங்கினர். ஆங்கில நூல்களைக் கற்றதோடு ஐயர் மனநிறைவு கொள்ளாமல் கம்பராமாயணம் திருக்குறள் முதலிய தமிழ் நூல்களையுங்கற்றுத் தமிழின்பத்தையும் நுகர்ந்தார்.

பிறகு ஐயர் இரங்கூன் சென்று அங்கு சில காலந் தங்கித்தொழில் புரிந்தார். ஐயருக்கு அதற்கு முன்னரே திருமணமாகிப் பெண் குழந்தை ஒன்றும் இருந்தது. இரங்கூனில் இருந்த ஐயர் பாரிஸ்டர் பட்டம் பெற எண்ணினர். தம்முடைய மனைவியையும் மகளையும் உறவினர் சார்பில் இரங்கூனிலேயே விட்டுவிட்டுப் புறப்பட்டு இலண்டன் நகருக்குச் சென்ருர்.

### இலண்டனில் வாழ்க்கை

இலண்டனில் இந்திய விடுதி ஒன்றில் ஐயர் தங்கினர். அங்கிருந்து கல்வி கற்ருர். அப்பொழுது அங்கே விநாயக சவர்க்கார், டாக்டர் சௌந்தரராசன், நிரஞ்சன பாவலர் முதலியோர் இருந்தனர். சவர்க்கார் வட நாட்டிலே நாசிக் என்னும் ஊரிலே தோன்றியவர்; மராட்டியர். ஆங்கிலத்திலும் மராட்டி மொழியிலும் அறிஞர். விறுவிறுப்பான சொற்பொழிவாளர். நாட்டுத்தொண்டையே

தமது கடமையாகக்கொண்டவர். இந்து சமயக்கொள்கைக்காகத் தமது உயிரையும் விடக்கூடியவர். இத்தகைய அவர் அங்கே பாரிஸ்டர் பட்டத்திற்காகப் படித்துக் கொண்டிருந்தார். ஐயர் சவர்க்காரோடு சேர்ந்தவுடன் சவர்க்காருடைய நாட்டுப் பற்று ஐயரையும் பற்றிக் கொண்டது. ஐயரும் பெரும் புரட்சி வீரராக மாறி விட்டார். இந்தியாவில் இருந்து இங்கிலாந்திற்குக் கல்வி கற்க வருபவர்கட்கு நாட்டுப் பற்றை உண்டாக்குவதே அவர்களுடைய முதன்மையான வேலையாக இருந்தது.

அங்கு கூடியிருந்த வீரர்கள் வெறும் வாய் வீச்சு வீரர்களாக இருக்கவில்லை. வலுக்கட்டாயமாகப் போர் புரிந்து நாட்டைக் கைப்பற்றவேண்டும் என்பதே அவர்களுடைய கொள்கையாக இருந்தது. காந்தியடிகளாரின் அறப்போரில் கத்தியின்றி ரத்தமின்றிச் செய்யும் பொறுமைப் போரில் அவர்களுக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. ஆகவே அவர்கள் துப்பாக்கி சுடுதல் முதலிய படைக்கலப் பயிற்சிகள் செய்து விடுதலைப் போருக்குத் தங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார்கள்.

### நாட்டுப் பற்று முறுகுதல்

நாட்டுப்பற்று ஐயருக்கு நாளுக்குநாள் முறுகிக் கொண்டே இருந்தது. ஆங்கிலேயருடைய அடிமைப் பிடியில் இருந்து பாரதநாட்டை விடுவித்தற்கு எத்தகைய போராட்டத்தையும் மேற்கொள்ளலாம் என்பதே ஐயர், சவர்க்கார் முதலியோருடைய உறுதியான முடிவாக இருந்தது. அந்நாளில் அங்கு வந்த பாரதத்தாயின் அருந்தவ மக்களான காந்தியடிகள், கோபாலகிருட்டின கோகலே, இராமச்சந்திரதத்தர், விபின சந்திரபாலர், லாலாஜி, முதலியோரைப் பார்த்து அவர்கட்கும் தங்களுடைய

கொள்கையைப் போதிக்க முயன்றனர் ஐயரும் சவர்க்காரும். ஆனால் அவர்களோ இவர்களுடைய துடிதுடிப்புக்கு இடங்கொடுக்காமல் மறுமொழி கூறியனுப்பினர்.

விடுதலை வீரர்கள் சிதறுதல்

சவர்க்கார், ஐயர் ஆகியோருடைய கூட்டத்தில் எல்லோருக்குமே வலுக்கட்டாயத்தில் மிகுந்த நம்பிக்கையாகையால் இவர்களை எப்பொழுதும் அரசினர் கடுமையாகக் கண்காணித்துக்கொண்டிருந்தனர். நாளடைவில் கண்காணிப்பும் தொல்லையும் மிகுதிப்படவே விடுதலை வீரர்கள் மூலைக்கொருவராகப் பிரியலாயினர். இங்கிலையில் இவர்களின் கூட்டத்தைச் சேர்ந்த மதனலால் டிங்கரா என்பவன் இதுவரையில் வாய்ப்பேச்சால் எல்லாம் செய்து கொண்டிருந்தோம்; இனிமேல் செய்கையில் இறங்க வேண்டும் என்று முடிவு செய்தான். இந்தியச் சிற்றரசு நாடுகளில் வேலை பார்த்தவனும் பிறகு இலண்டனை அடைந்து இந்திய அமைச்சருக்கு இந்திய அரசியல் செயலாளராக இருப்பவனும் ஆகிய சர். கன்ஸன் வைலி என்பவனைச் சுட்டுக்கொலை புரிந்து விட்டான். இந்தியாவிலும் இரண்டொரு கொலைகள் விழுந்தன. விடுதலை வீரர்களைப் பிடித்துத் தண்டிப்பதற்கு அரசினர் பலமாக வேலை செய்தனர். விநாயக சவர்க்கார் பல தொல்லைகளையடைந்தார். ஐயர் பாரிஸ் முதலிய இடங்கட்குத் தப்பிச் சென்று பிறகு புதுச்சேரி வந்து சேர்ந்தார்.

புதுவையில் வாழ்வு

அப்போது புதுச்சேரியில் நாட்டு விடுதலையில் நோக்கங்கொண்டுழைத்த பெரியார்களாகிய அரவிந்தர், சுப்பிரமணிய பாரதியார் முதலியோர் தங்கியிருந்தனர். ஐயர் அங்கு சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது நூல்

கள் எழுதுதல் கதைகள் எழுதுதல் முதலிய வேலைகளைச் செய்தார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அங்கு வந்தவுடன் ஐயர் தம் மனைவியையும் அங்கு அழைத்துக்கொண்டார். அந்நாளில் புதுச்சேரியிலும் ஆங்கில அரசினரின் ஒற்றர்கள் தொல்லை மிகுதியாக இருந்தது. அத்தொல்லைகளையெல்லாம் ஐயர் ஒரு பொருளாக மதிக்கவில்லை. வழக்கம்போலவே தமது காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பழியோரிடம் பாவமோரிடம்

அந்நாளில் வாஞ்சி என்பவன், ஆஷ் என்னும் பெயருடைய நெல்லைமாவட்ட முதல்வனை மணியாச்சியில் புகைவண்டியில் சுட்டுக்கொன்று விட்டான். ஆஷ் வெள்ளைக்காரன். அவனுடையகொலைக்கு ஐயரே மூலகாரணம் என்று இந்திய அரசாங்கத்தினர் எண்ணினர். ஐயரைப் புதுச்சேரியிலிருந்து பிடித்து வந்து தண்டித்துவிட வேண்டும் என்று மிக முயன்றனர். ஆனால், அம்முயற்சி பலிக்கவில்லை.

வெளியேறுதல்

1914-ஆம் ஆண்டில் ஐரோப்பியப் போர் தொடங்கியது. அது 1919-ஆம் ஆண்டில் முடிந்தது. உடன்படிக்கை ஒன்று நடந்தது. 1920-ல் இந்திய அரசியல் குற்றவாளிகள் மன்னிப்புப்பெற்றனர். புதுவையில் இருந்த விடுதலை வீரர்கள் வெளிப்படத்தொடங்கினர். சுப்பிரமணிய பாரதியார் சென்னையை அடைந்தார். ஐயர் காசி முதலிய வடநாடுகளுக்குப் பயணம் புறப்பட்டார். நாசிக், பஞ்சவடி, சபர்மதி, பூனா, வடமதுரை, அயோத்தி, அரித்துவாரம், பிரயாகை கயா முதலிய இடங்களுக்குச்

சென்றார். பலவிடங்களினும் இருந்த குருகுலங்களைப் பார்வையிட்டார்.

### தேசபக்தன் ஆசிரியர்

1917-ஆம் ஆண்டில் தேசபக்தன் என்னும் பத்திரிகை தொடங்கப்பெற்றது. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அதனுடைய ஆசிரியராக அமர்ந்து அருந்தொண்டாற்றினார். அதனால் அப்பத்திரிகை சிறந்து மிளிர்ந்தது. 1920-ஆம் ஆண்டில் திரு. வி. க. அப்பத்திரிகையின் ஆசிரியர் வேலையைவிட்டு விலகினார். அப்பொழுது ஐயர் அந்தப் பத்திரிகையின் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு சிலகாலம் பார்த்து வந்தார்.

### குருகுலம்

வடநாட்டுப் பயணத்தின்போது பலவிடங்களினும் குருகுலங்களைப் பார்த்த ஐயர் தமிழ் நாட்டினும் ஒரு குருகுலத்தை ஏற்படுத்த எண்ணினார். அதன்பொருட்டு இடம் பொருள் முதலியவைகளை நாடியிருந்தார். தாமிர வருணியாற்றிற்குத் தெற்கே மூன்றுகல் தொலைவில் சேரமாதேவி என்னும் ஊர் அமைந்துள்ளது. அவ்வூரின் எல்லையில் முப்பது ஏக்கர் பரப்புள்ள இடம் ஒன்றை அன்பர்களின் உதவியைக்கொண்டு வாங்கி அந்த இடத்திலே குருகுலத்தை அமைத்தார். குருகுலம் நல்ல முறையில் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அக்குருகுலத்திற்கு மிகுதியான பொருளும் அமைதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. சிறிய செயல் ஒன்றினால் குருகுல வளர்ச்சி தடைபட்டது. பல அன்பர்கள் குருகுலத்திற்குப் பகைவர்களாகித் தொல்லை கொடுக்கலாயினர். போர் பத்திரிகைப் போராக எழுந்தபடியால் செய்தி நாடு முழுவதும் பரவிவிட்டது. குருகுலத்தில் பணிபுரிந்

திருந்த சுத்தானந்த பாரதியார் முதலியோர் வேற்றிடஞ் சென்றுவிட்டனர். இந்நிலையில் ஐயர் குருகுலத்தை விடாப்பிடியாக நடத்திக்கொண்டிருந்தார்.

இறுதி

ஐயருடைய முதற்பெண் இறந்துபோனாள். பிறகு சுபத்திரா என்னும் பெண்ணும் கிருட்டிணமூர்த்தி என்னும் ஆணுந் தோன்றினர். 1925-ஆம் ஆண்டில் குருகுல மாணவர்கள் பாபநாசம் நீர்வீழ்ச்சியைப் பார்க்கச்சென்றனர். ஐயருடைய மகள் சுபத்திரா அப்போது மங்கைப் பருவத்தினளாக இருந்தாள். அவளும் பாபநாச நீர்வீழ்ச்சியைப் பார்க்கவேண்டும் என்று வற்புறுத்தியதால் ஐயர் அவளை நீர்வீழ்ச்சிக்கு அழைத்துக்கொண்டு சென்றார்.

மாணவர்கள் இயற்கையழகைக் கண்டுகளித்தனர். அருவியில் நீராடி இன்புற்றனர். மாணவர்கள் அருவியின் இருபக்கங்களுக்கும் ஒருவர் கையை ஒருவர் பற்றியவாறு நடந்து சென்றனர். வழுக்கும் பாறைகளில் அவர்கள் அங்கும் இங்கும் போய்வந்து கொண்டிருந்தனர். சுபத்திரா தானும் அருவியைக் கடந்துசெல்லவேண்டும் என்றாள். அஃது ஆபத்தாக முடியுமென்று கூறிச் செல்லப்படாது என்று கண்டித்தார் ஐயர். "ஊழிற்பெருவலி யாவுள ?" என்னும் பொய்யில் புலவர் பொன்மொழி வீணாகுமா? போய்த்தான் தீரவேண்டும் என்றாள் மகள். ஐயர் மகளுடைய கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு சென்றார். இடையே ஒரு பாறையில் நிறுத்தினார். கால் வழுக்கிற்று. அருவியின் திறந்த வாயில் அம்மங்கை, "அப்பா!" என்னும் அலறலுடன் வீழ்ந்தாள். ஐயர், "அம்மா!" என்று அலறிக் கொண்டு அவளைத் தாவிப்பிடிக்க முயன்றார். மறுகணமே அவரும் அருவியில் அடித்துச்செல்லப்பட்டார். இவ்வாறு

தந்தையும் மகளும் அவ்வருவிக்கு இரையாயினர். 1881-ஆம் ஆண்டில் தோன்றிய ஐயர் 1925-ஆம் ஆண்டில் தமது நாற்பத்து நான்காம் அகவையில் இவ்வாறு இயற்கை எய்தினர்.

ஐயர் எழுதிய நூல்கள்.

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. கமலவிசயம்
3. காங்கேயன்
4. குளத்தங்கரை அரசமரம்
5. அமேஸன் ழக்கேன்
6. சந்திரகுப்த சக்ரவர்த்தி
7. புக்கர் வாஷிங்டன்
8. தன்னம்பிக்கை
9. எதிரொலியாள்
10. இராமாயண ஆராய்ச்சி (ஆங்கிலம்)
11. திருக்குறள் (அரியபெரிய ஆங்கில மொழிபெயர்ப்பு.)

கம்பராமாயணம் பாலகாண்டத்தைச் சொற்பிரிவு செய்து ஐயர் சீரிய முறையில் பதிப்பித்து வெளியிட்டார். குருகுலத்தில் இருந்து பாலபாரதி என்னும் பத்திரிகையையும் வெளிப்படுத்தினர்.

---

## ௧௦. கிருட்டிணமாச்சாரியர்

**பிறப்பு**

தொண்டை நாட்டிற் சிறந்த சிவப்பதியாக விளங்குவதும், "பாவிகள் காணுக் கழுகுசூழ் பறம்பு" என்று பெரியோர்களாற் புகழ்ந்தோதப்பெற்றதுமாகிய திருக்கழுக்குன்றத்திற்கு மூன்றுகல் தொலைவில் உள்ள ஒரகடம் என்னும் சிற்றூரில் 1863-ஆம் ஆண்டிற்பிறந்தார் சே. கிருட்டிணமாச்சாரியார். இவருடைய தந்தையார் பெயர் இராம ஐயங்கார்.

கல்வி

கிருட்டிணமாச்சாரியார் இளமைப்பருவத்தில் முதலாவதாகத் தம் தந்தையாரிடத்தில் கல்விகற்கத் தொடங்கினார். பிறகு திருக்கழுக்குன்றத்தில் பள்ளி ஆசிரியராக இருந்த மாடபூசி கோவிந்தாச்சாரியர் என்பவரிடம் சில ஆண்டுகள் தமிழ்மொழி இலக்கண இலக்கியங்களைக் கற்றார். அதே சமயத்தில் தந்தையாரிடம் தமது வைணவ சமயத்துக்குரிய நூல்களையும் கற்றுணர்ந்தார். பிறகு சென்னையை அடைந்து அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக இருந்த புன்னைமாடபூசி சீனிவாசாசாரியார் என்பவரிடம் மேலும் பல இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

உரைகள் வெளியிடல்

இவர் கற்று நூலாராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கும் போது வை. மு. சடகோபராமாநுசாசாரியருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. இருவரும் கலந்து எண்ணினர். 1890-ஆம் ஆண்டுமுதல் சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குரிய பாடப்புத்தகங்களுக்கு உரையெழுதி வெளியிடத் தொடங்கினர். மாணவர்கள் அவ்வுரையை விரும்பி வாங்கிக் கற்றுப் பெரும்பயனடைந்தனர். அதுமுதல் பாடப்புத்தகங்கட்கு உரையெழுதி வெளியிடும் வேலையை முப்பது ஆண்டுகளுக்குமேல் நீடித்து நடத்திப் புகழ் பெற்றனர்.

ஆசிரியத்தொழில்

1893-ஆம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டை உவெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கி அவ்வேலையை 1916-ஆம் ஆண்டுவரை சிர்த்தியுடன் பார்த்துவந்தார். 1910-ஆம் ஆண்டில்

வை. மு. சடகோபராமாநுசாசாரியர் காலஞ்சென்றமை யின் அவருடைய உடன்பிறந்தார் வை. மு. கோபால கிருட்டிணமாச்சாரியாரைத் துணைகொண்டு 1923-ஆம் ஆண்டுவரை உரையெழுதுந் துறையில் வேலை செய்தார்.

### நன்னூற்காண்டிகையுரை

1896-ஆம் ஆண்டில் இவரும் வை. மு. சடகோப ராமாநுசாசாரியருமாகச் சேர்ந்து நன்னூலுக்குப் புதிய காண்டிகை உரையொன்று மாணவர்களுக்கு நன்கு விளங்கத்தக்கவாறு எளிய முறையில் எழுதி வெளியிட் டனர். அவ்வுரை அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கல்விச் சாலைகளினும் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப் பட்டது. அவ்வுரை சிறந்து பதினேழாம் பதிப்பு வரை வந்திருக்கின்றது.

### வேறு நூல்கள் வெளியிடுதல்

இவர் சமய நூல்களையும் நன்கு ஆராய்ந்து திருத்த மான பதிப்புக்களாக வெளியிட்டார். மேலும் அட்டப் பிரபந்தம், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம் வில்லிபாரதம் ஆகிய நூல்கட்கும் சிறந்த உரையெழுதி வெளிப்படுத்தினார். இவருடைய உரை எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

### இறுதி

கல்வியறிவினாலாகிய பயன் பிறர்க்கு உதவி செய்த லென்னும் உண்மையினை நன்குணர்ந்து, அதற்குத்தக்க வாறு அரிய தமிழ்த்தொண்டு செய்திருந்த இவர், தம் முடைய அறுபத்துமூன்றும் அகவையில் 1926-ஆம் ஆண்டு சித்திரைத் திங்களில் வைகுண்ட பதவிபெற்றார்.

## கo. குமாரசாமிப் பிள்ளை

### தோற்றம்

திருக்கோவலூர்க்கு அண்மையில் உள்ள மணம் பூண்டியில், பார்க்கவ குலத்தில் தெய்விகன்மரபில் மெய்ப் பொருள் நாயனார் வழியில் ம. ரா. குமாரசாமியார் தோன் றினர். தந்தையார் பெயர் இராமசாமிப் பிள்ளை. இராமசாமிப் பிள்ளை திருக்கோவலூரில் புகழ்பெற்ற வழக்கறிஞர்.

### கல்வி

குமாரசாமியார் இளமையில் ஆங்கிலப்பள்ளியில் கல்வி பயின்றார். குமாரசாமியாரை நன்னெறியில் திருப் பியவர் இராமலிங்க அடிகளாரின் அடித்தொண்டராக விளங்கிய கந்தசாமிப் பிள்ளை என்னும் பெரியார். முதலில் குமாரசாமியார் தாமே தமிழ் நூல்களைக் கற்று ஆராயத் தொடங்கினர். திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோவலூர் ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞானியாரடிகள் பேரறிஞர் என்பதை உணர்ந்தார். அவரை ஆசிரியராகக்கொண்டு தமிழ் நூல்களை நன்கு கற்றார். ஞானியாரடிகளிடம் கல்வி கற்பவர்கள் சீர்த்தியுடன் சிறந்து திகழ்தல் இயல்பு. அப்பேறு குமாரசாமியார்க்குக் கிட்டியது. குமாரசாமியார் நல்ல அறிவாளியானார்.

### தொண்டு

குமாரசாமியார் தண்டமிழ்த்தொண்டு செய்தலைத் தமது தலையாய கடமையாகக்கொண்டார். இளமையிலேயே இவருக்குத்தொண்டு வேட்கை உண்டாகிவிட்டது. மணம் பூண்டியில் தொண்டாற்றத்தொடங்கினர். "மணம்பூண்டி பாலபக்த சனசபை" "பிரம்மஞான சங்கம்" முதலிய சங்கங்கள் குமாரசாமியாரால் ஏற்படுத்தப்பட்டன. பால

பக்த சனசபை இறைவழிபாடு கடவுட்பக்தி முதலிய கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு விளங்கியது. பிரம்மஞான சங்கம் மெய்யறிவுத்துறையில் வேலை செய்தது. இவைகளை யன்றிப் பார்க்கவ குல முன்னேற்றத்தைக் கருதிப், "பார்க்கவ குல சங்கம்" என்னும் சங்கமும் குமாரசாமியாரால் அமைக்கப்பெற்றது. இவ்வாறு தமது ஊரில் சங்கங்கள் அமைத்துத் தொண்டு செய்ததோடு குமாரசாமியார் அமைந்துவிடவில்லை. குமாரசாமியாரின் சொற்பொழிவைப் பெறாத சங்கங்களோ கழகங்களோ அவைகளோ தமிழ் நாட்டில் இல்லை.

சொற்பொழிவு

குமாரசாமியாருடைய சொற்பொழிவு மிகவும் வியக்கத்தக்கது. இவருடைய சொற்பொழிவு எதுகைமோனை நயங்களும் நகைச்சுவையும் சொல்லடுக்குகளும் அமையப் பெற்றுச் சிறந்து விளங்கும். கடன்மடை திறந்தாற் போல் தங்குதடையின்றிப் பேசுவார். எல்லோரும் சொற்பொழிவாளரையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். கால்மணி அரைமணியோடு தமது சொற்பொழிவை நிறுத்தமாட்டார். நீண்டநேரம், அஃதாவது இரண்டு மூன்று மணிநேரம் பேசுவார். இரண்டு மூன்றுமணி நேரமும் அவருக்கு இரண்டு மூன்று நிமிடங்களாகத் தெரியும். சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கும் நேரங்கழிவதுதெரியாது. சொற்பொழிவு நடந்துகொண்டிருக்கையில் பத்திரிகைபடித்தல், உரையாடல், எழுந்து வெளியேபோதல் அல்லது கூட்டத்தைவிட்டு அடியோடு சென்று விடுதல் இன்னோரன்ன செயல்கள் இவருடைய சொற்பொழிவு நடந்துகொண்டிருக்கும் பொழுது நிகழமாட்டா. கூட்டம் கலைந்துவிடா திருக்கவேண்டி இவரு

டைய சொற்பொழிவை இறுதியில்தான் சங்கத்தினர்கள் குறிப்பிட்டிருப்பார்கள்.

பண்பு நலம்

குமாரசாமியார் குணநலம் உடையவர். அவருடைய இயற்கைத் தன்மை குழந்தைகளின் இயற்கைத் தன்மையைப்போல விளங்கும். அவர் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் இருப்பார். கடுகடுத்த முகத்துடன் இருத்தல் கடுஞ்சொற் கூறுதல் முதலியவைகளை இவரிடம் காண்பது அருமை. இவர் எல்லோரிடமும எளிதாகப் பழகும் இனியநீர்மை அமையப் பெற்றவர். இவரோடு ஒருமுறை பழகி உரையாடியவர் மேன்மேலும் பழகி உரையாடுதலை விரும்புவர். இவருடைய பண்புநலம் ஞானியாரடிகட்கு மிகவும் பிடித்திருந்தது. பல சமயங்களில் ஞானியாரடிகளுடன் சென்று அவர்கட்கு ஆவனபுரிந்தார். குமாரசாமியாருடைய வாழ்நாள்கள் யாவும் சொற்பொழிவிலேயே கழிந்தன. இவருடைய செவியுணவை மாந்துதற்கு மக்கள் கொண்டிருந்த பேரவா வியக்கத்தக்கது.

பொது நோக்கு

கண்மணி நீறு முதலியவைகளைக் குமாரசாமியார் அணிந்து சைவப்பழம்போல் கண்ணுக்குக் காட்சியளிப்பினும், அவருடைய கொள்கை பல சமயத்தினர்க்கும் ஏற்பப் பொதுநோக்குடையதாக விளங்கும். சாதிவேறுபாடு சமயவேறுபாடு முதலியவைகளை இவர் எந்தநாளும் பின்பற்றியதில்லை. மற்றவர்களைப்போல் தீண்டத்தகாதவர்களை வெறுத்தொதுக்கியதில்லை. காந்தியடிகளுடைய கொள்கையிலும் இவருக்குச் சிறந்த பற்று அமைந்திருந்தது.

இறுதி

இவர் உடலை ஒருபொருட்படுத்தாமல், அழைக்குமிடங்கள் எல்லாவற்றிற்கும் தட்டாமற் சென்று பெருஞ்

சொற்பொழிவு செய்தலையே தமது கடமையாகக்கொண்டிருந்தார். நாற்பதாவது அகவை முதற்கொண்டே குமாரசாமியாரை நோய் பற்றிக்கொண்டது. நோயினால் வருந்தியிருந்த காலத்திலும் இவர் தமது சொற்பொழிவைக் குறைத்துக்கொண்டாரல்லர். கற்றவர் சுவையினை முற்றவும் உணர்ந்த காலன் 1929-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நாற்பத்தெட்டாம் அகவையில் இவரை, உண்டு மகிழ்ந்தனன். இவருடைய பிரிவு அறிஞர்கள் அனைவருக்கும் மிகுந்த கலக்கத்தையளித்தது.

---

## கக. சரவணபவானந்தம் பிள்ளை

### பிறப்பு

சென்னைமாநகரிலே வேளாண்குடியிலே சரவணபவானந்தம் பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் முத்துச்சாமிப் பிள்ளை, தாயார் பெயர் சந்திரமதி.

### கல்வியும் அலுவலும்

கற்கவேண்டிய கல்வியை நன்றாகக் கற்று விளங்கிய இவர், இங்கிலாந்திற்குச் சென்று பாரிஸ்டர் பட்டப்படிப்புப் படிக்க எண்ணினார். ஒழுக்கமும் பழையபழக்க வழக்கமுமே உயிரெனமதித்த இவருடைய தாயார் இங்கிலாந்திற்குச் சென்றால் குலச்சிறப்புக் கெடும் என்று நினைத்து மேல்நாடு செல்லக்கூடாதெனத் தடுத்தார். தாய்சொல் தட்டாதசரவணபவானந்தர் மேனாடுசெல்லும் எண்ணத்தை அடியோடுவிட்டொழித்தார். நகரக் காவல்படைத்தலைவர் (போலீஸ் கமிஷனர்) நகரக்காவல் படையில் விசாரணைச் செயலாளராக ஏற்படுத்தினார். பவானந்தர் அந்தவேலையைத் திறமையாகப் பார்த்துப் புகழ்பெற்றார். கொலை,

கொள்ளை, பொய்க் கையெழுத்து, மோசம் முதலிய சிக்கலான வழக்குகளைக் கண்டுபிடித்துத் தம்முடைய நுண்ணறிவால் உண்மையை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தினர். இதனால் இவருடைய மேலதிகாரிகளும் நீதிமன்றத் தலைவர்களும் இவரைப்பாராட்டினர்கள்.

சட்ட அறிவு

இவர் சட்டநூல்களைக் கற்றுத் தேர்வு எழுதித் தேருதவராக இருந்தும் சட்டநூல்களைத் தாமே கற்றுணர்ந்து, சிறிய சட்டநூற் பேரறிஞராகச் சிறந்து விளங்கினர். எப். எல். பி. எல் சட்டப்பரீட்சைகளுக்குரிய முப்பது நூல்களை ஆராய்ந்தெழுதிப் பதிப்பித்தார்.

1904-ஆம் ஆண்டு முதல், 1912-ஆம் ஆண்டுவரையில் சென்னை நகரக் குற்றச்செய்தி விசாரணை வகுப்புத் தலைவராக அமர்ந்து அரசாங்கத்திற்கு அரியபணி புரிந்தார்.

மெய் காப்பாளர்

வேல்ஸ் இளவரசர் 1906-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் சென்னைக்குவந்தபோது, அவருக்கு மெய்காப்பாளராக இருக்கும் பொறுப்பை இவர் ஏற்றுத் திறமையாகச் செயலாற்றினர். இவரது செயலில் மனநிறைவுகொண்ட இளவரசர் விருதுப்பதக்கம் ஒன்றைத் தம்முடைய கையினலேயே இவருக் கணிந்தார். இவர் நகரக்காவல் படையில் முப்பத்தைந்தாண்டுகள் வரையில் பணிபுரிந்ததை அரசாங்கத்தினரும் பாராட்டினர்கள்.

பவானந்தர் கழகம்

நகரக் காவற்படை அலுவலிற் சேர்ந்து வேலைபார்த்த இவர் தமது காலமெல்லாவற்றையும் அவ்வலுவலிலேயே செலவிட்டுவிடவில்லை. உலகில் தமது புகழை நிலைநாட்டிச் செல்வதற்கான அரும்பெரும் பணிகளினும் கருத்துச்

செலுத்தினர். அச்சிடப்பெறாமலிருந்த இலக்கண இலக்கிய நூல்களை அச்சிற்பதிப்பித்து வெளியிட எண்ணினர். தமது பெயரால் "பவானந்தர் கழகம்" என்னும் கழகம் ஒன்றை ஏற்படுத்தினர். தகுந்த நூல்களைத் தேடித் தொகுத்தார். அறிவுசால் புலவர்களைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டார். இதன் பொருட்டு இவர் ஓலைச் சுவடிகளையும் அச்சான பழைய புத்தகப் பிரதிகளையும் முப்பதாண்டுகளாகத் தொகுத்தார். தமிழ் மொழியினிடத்தும் தமிழரிடத்தும் இவருக்கிருந்த அன்புப் பெருக்கை அளவிட்டுரைக்க முடியாது.

கலைத்தொண்டு

தமிழ் இலக்கணங்களில் பழமை வாய்ந்தனவும் சிறந்தனவுமான தொல்காப்பியப் பொருளதிகாரம், யாப்பருங்கல விருத்தியுரை, இறையனர் அகப்பொருள் உரை, பேரகத்தியத்திரட்டு, இராமாநுசகவிராயர், சங்கர நமச்சிவாயப் புலவர், சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்களின் உரைகளைத் தழுவி எழுதப்பெற்ற நன்னூல் காண்டிகை உரை முதலியவைகளைத் தம் பொருளைக்கொண்டு வெளியிட்டிருக்கின்றார். இவரால் இயற்றப்பெற்ற நாடகங்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் பல. இவரால் இயற்றப்பட்ட நாடகங்கள் இலண்டன்மாநகரத்தில் ஐந்தாம் சார்ச் அரசரின் முன்பு நடித்துக்காட்டப்பெறும் பெருமையினையும் பெற்றது. மேற்கூறப்பட்ட நூல்களைத் தவிரத் திருவாசகம் திருக்கோவையார் முதலிய வேறுபல நூல்களும் இவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் பணி

சென்னைப் பல்கலைக் கழகத்தின் திராவிட வாசக சங்கத்திற்குத் தலைவராகவும், மேற்படி பல்கலைக்கழக

அதிகாரிகளால் ஏற்படுத்தப்பெற்ற திராவிடச் சொற்றொடர் ஆக்கச் சங்கத்தின் அங்கத்தினராகவும் இருந்தார். தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைவராக இருந்தார். இவர் இயற்றிய நூல்களில் பல பல்கலைக் கழகச் சார்பில் நடைபெறும் கல்லூரிகளின் மாணவர்களுக்கும், உயர்தரப்பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் பன்முறை பாடப்புத்தகங்களாக அமைக்கப் பட்டன. இவர் தலைவராகவும் அங்கத்தினராகவும் அமர்ந்து தொண்டாற்றிய கலைக்கழகங்களும் அவைகளும் பல வாகும்.

நன்கொடை

இவர் அரசாங்கத்தாரால் பெற்ற பட்டங்களும் பரிசுகளும் பல. 1889-ஆம் ஆண்டில் அலுவலிற்சேர்ந்த இவர் படிப்படியாக உயர்ந்து, 1909-ஆம் ஆண்டில் போலீஸ் அஸிஸ்டெண்டு கமிஷனர் பதவியையும், 1918-ஆம் ஆண்டில் டெபுடி கமிஷனர் பதவியையும் அடைந்தார். இவர் அரசாங்கத்திற்குச் செய்த தொண்டுகளுக்காக 1922-ஆம் ஆண்டில் சாகீர் ஒன்று வழங்கப்பட்டது.

இறுதி

இவர் குடும்ப வாழ்க்கையிற் புகாமல் தனித்த வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார். சிறந்த கலையுணர்வும் இனிய குணமும், வணங்கிய வாக்கும் நுணங்கிய கேள்வியும் இவரிடம் அமைந்திருந்தன. இவர் தாம் தேடிய பொருளையெல்லாம் தமது கழகத்திற்கே உரிமைப்படுத்தி நூல் வெளியீடுகட்குப் பயன்படுத்தினர். இவ்வாறு சிறந்து விளங்கிய இவர், 1932-ஆம் ஆண்டு மே மதியில் இருபதாம் நாளில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

## கஉ. விருதை. சிவஞான யோகிகள்

### தோற்றம்

கொங்கு நாட்டில் உள்ள அவிநாசி என்னும் சிவப் பதியிலே 1840-ஆம் ஆண்டில் சிவஞானயோகிகள் பிறந்தார். சிவஞானயோகியாரின் தந்தையார் பெயர் இராமசாமிப் பிள்ளை. தாயார் பெயர் கிருட்டிணம்மையார்

### கல்வி

சிவஞானம் என்பது பிள்ளைப் பருவத்தில் இடப் பட்ட பெயர். யோகி என்பது பிற்காலத்தில் யோக நிலைமையில் தேர்ச்சி பெற்றமையால் உண்டான சிறப்புப் பெயர். சிவஞானத்திற்கு அகவை மூன்று நிரம்பிய காலத்தில் தந்தையார் திடீரென்று விண்ணுலகம் சென்றார். மேலும் இரண்டோர் ஆண்டுகள் சென்றன. "தந்தையார் போயினர் தாயரும் போயினர்" என்ற தற்கேற்பத் தாயாரும் விண்ணுலகம் சென்றார். சிவஞானம் தம்முடைய மாமன்மார்களின் ஆதரவில் வளர்ந்தார். "தந்தையொடு கல்விபோம்" என்பது பெரியார் வாக்கு சிவஞானத்திற்குத் தந்தையோடு கல்வி போய்விடவில்லை. மாமன்மார்கள் மனம் வைத்துப் பள்ளியிற் சேர்த்துக் கல்வி கற்கச் செய்தனர். சிவஞானம் மிகுந்த ஊக்கத் துடன் படிக்கத்தொடங்கிச் சிறிது ஆங்கிலமும் தமிழும் கற்றுக்கொண்டார். அகவை எட்டு நிரம்பியது. பிறகு சிவஞானத்தின் இளையமாமனர் ஒருவர் நீலகிரி மலைமேல் உள்ள குன்னூரிலே வாழ்ந்திருந்தார். அவர் சிவஞானத்தை அங்கு அழைத்துக்கொண்டுபோய் மேலும் நன்றாகக் கல்வி கற்கச் செய்தார். சிவஞானம் இயற்கையிலேயே நுண் ணுர்ணவு பொருந்தியவராக இருந்தார். அதனல் கல்வி யறிவு மிக எளிதாகவே பொருந்தியது. அவ்வூரில் இவர்

கண்ட மலைவளக் காட்சிகள் இவருடைய அறிவிலே கிளர்ச்சியை உண்டாக்கியது.

பெரியார் தொடர்பு

பல்லடம் என்ற ஊரில் சிவஞானத்தின் வேறொரு மாமனார் வாழ்ந்திருந்தார். சிவஞானம் அவ்வூருக்குச் சென்று அங்குச் சில திங்கள் தங்கநேர்ந்தது. அவ்வூரிலே அருளானந்த அடிகள் என்னும் பெயருடைய பெரியார் ஒருவர் எழுந்தருளியிருந்தார். அவர் அருட்டிறம் அமையப்பெற்றவர். அவருடைய புகழ் அவ்வூரிலே சிறந்து விளங்கியது. சிவஞானம் அப்பெரியாரைக் கண்டு வணங்கிப் போற்றினார். அவரிடம் அடிக்கடி சென்று அருளுரைகள் பெற்றார்.

அலுவலும் மருத்துவப் பயிற்சியும்

வாழ்க்கையை நடத்துதற்கு ஏதேனும் ஓர் அலுவலை மேற்கொள்ளுதல் நலம் என்று எண்ணினார். வெல்லிங்டன் என்னும் ஊரையடைந்து ஒரு பெரும் வணிகரிடத்திலே வேலைக்கு அமர்ந்தார். அந்நாளில் சச்சிதானந்த அடிகள் என்னும் பெரியார் ஒருவருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. சச்சிதானந்த அடிகள் சித்த மருத்துவத்திலே சிறந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். சிவஞானம் அந்தப் பெரியாரிடம் மருத்துவக் கலையை நன்கு கற்றுத் தேறினார். அப்பெரியாரைப் புகழ்ந்து,

"கச்சிருக்கும் தோளுடையார் காதல்வலைப்
பட்டேனைக் கழிக்கா தாண்ட
நச்சிருக்கும் களத்தானே நல்லோர்கள்
தமைப்பணியும் நலம்ஒன் றில்லாப்
பிச்சிருக்கும் உளத்தனெனைச் சித்தமுறை
பலபயிற்றிப் பெரிய பட்சம்
வச்சிருக்கும் குணக்குன்றே அருள்சச்சி
தானந்த மருத்வ தேவே."

என்னுஞ் செய்யுளொன்றைப் பாடிப் போற்றினர். மேலும் அப்பெரியாரிடம் யோகப் பயிற்சியும் பெற்று யோகஞ் செய்யவும் தொடங்கினர். அதுமுதல் இவருடைய பெயர் சிவஞானயோகி என வழங்கியது.

நன்னெறியை நாடல்

இவர் அடிக்கடி பெரியோர்களுடைய கூட்டுறவை மேற்கொண்டிருந்தபடியால் இவருடைய உள்ளம் நன்னெறியை நாடத் தொடங்கியது. தாம் பார்த்து வந்த வேலையை உதறினர். உடுமலைப் பேட்டை வட்டத்தில் உள்ள மடத்துக்குளம் என்னும் ஊரையடைந்தார். சிவ பூசை தேவார திருவாசகம் ஓதல் முதலிய செயல்களை மேற்கொண்டிருந்தார்.

கவிச்சிங்கத்திடங் கல்வி கற்றல்

பிறகு மடத்துக்குளத்தை விட்டு பழனியம்பதியை அடைந்தார். அந்நாளில் பழனியில் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் தங்கியிருந்தார். அவர் புறக்கண் பார்வையை இழந்தவராயினும் அகக்கண் பார்வையை அனைவரும் வியக்குமாறு பெற்றவர். பெரும் புலவர். ஒருமுறை கேட்டதை மறுமுறை அப்படியே கூறக்கூடிய ஆற்றல் அமையப் பெற்றவர். அவருடைய பெருமையை நன்கு அறிந்த சேதுபதி மன்னர் அவருக்குக் கவிச்சிங்க நாவலர் என்று சிறப்புப் பெயர் கொடுத்துப் பெருமைப்படுத்தினர். கவிச்சிங்க நாவலருடைய பெருமையை நன்குணர்ந்த சிவ ஞானயோகி அவரிடம் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் நன்கு கற்றுத் தேறினர். பிறகு பல சிவப் பதிகட்குச் சென்று இறைவழிபாடு செய்து விருதுப் பட்டியை அடைந்து அங்குத் தங்கினர். அங்கு ஒரு மருத்துவ சாலையை அமைத்து மக்களுக்கு மருத்துவஞ் செய்து நோய் தீர்க்கும் செயலை மேற்கொண்டிருந்தார்.

திருப்பணி

அவ்வூரில் இருந்த சிவன் கோயில் பழுதடைந்திருந்தது. இவர் அக் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய எண்ணினார். பலரிடமும் பொருள் திரட்டினார். திருப்பணிக்குப் பொருள் திரட்ட இவர் ஒரு புதுமையான வழியை மேற்கொண்டார். மண் கலயங்கள் இரண்டாயிரஞ் செய்வித்தார். கோவிலுக்குக் கும்பிட வருபவர்கள் வீடுகளிலெல்லாம் வீட்டிற்கு ஒவ்வொரு கலயம் கொடுத்தார். சமையலுக்கு அரிசி எடுக்கும்போது நாள்தோறும் ஒவ்வொரு பிடி அரிசியைக் கலயத்தில் போட்டுக் கலயத்தை நிரப்பித் தம்மிடம் தருமாறு ஏற்பாடு செய்தார். இதனால் திங்கள்தோறும் ஐம்பது ரூபா முதல் இருநூறு ரூபாய் வரை பொருள் சேர்ந்தது. இதனைக் கொண்டு திருமதில், கோபுரம், மலர்ப்பொழில் முதலியன அமைத்துத் திருப்பணி செய்தார்.

மழைபொழியப் பாடல்

அடிக்கடி மழை பெய்யாமையால் பயிர்கள் வாடிக் காய்ந்தன. குடி தண்ணீரும் அகப்படாமல் மக்கள் அல்லலுற்றனர். ஒருநாள் சிவஞான யோகிகள் அறுமுகக் கடவுள் திருமுன் வழிபாடு செய்து கொண்டிருந்தனர். வழிபாட்டிற்கு வந்த அன்பர்கள் சிலர் சிவஞான யோகிகளைப் பார்த்து, “மழையில்லாக் கொடுமையைப் போக்கியருளும்படி முருகப் பெருமானை வேண்டுங்கள்” என்று கேட்டுக் கொண்டனர். இவரும் முருகனை வேண்டியதுடன் பாக்கள் சிலவற்றையும் பாடினார். எல்லோரும் இறும்பூதடையுமாறு விரைவிலே நல்ல மழை பொழிந்தது. அன்பர்கள் சிவஞான யோகிகளின் பெருமையைப் போற்றிப் புகழ்ந்தனர்.

அறிவுமிக்க ஆன்

அக்கோவிலிலே ஓர் ஆன் (பசு) இருந்தது. அது தெய்வத் திருவருளால் நல்லறிவு பெற்று விளங்கியது. அது கோவிலின் உட்சுற்றைப் பலதடவை சுற்றிவரும். கோயிலுக்குள்ளேயே தங்கியிருக்கும். சில சமயங்களில் வெளியே போய்த் தோட்டங்களில் புல்மேயும். புல்லைத் தவிர வேறு எந்த உணவுப் பயிரையும் பூஞ்செடியையும் முகந்துகூடப் பார்க்கமாட்டாது. ஆகவே அந்த ஆவை எந்தத் தோட்டக்காரரும் வெருட்டுவதில்லை. பலர் அந்த ஆவைக் கும்பிட்டு வாழைப்பழம் முதலியவைகளைக் கொடுப்பார்கள். திருவாதிரைநாள் அன்று கோவில்காரர்கள் அந்த ஆவை அழைத்துவந்து ஆ வழிபாடு செய்வார்கள். இந்த ஆவானது ஒருநாள் யோகிகள் வைத்துக் காப்பாற்றிவரும் பூம்பொழிலுக்குட் சென்று புல்மேய்ந்து கொண்டிருந்தது. யோகிகள், ஆ பூம்பொழிலை மேய்ந்து அழித்துவிடுமே என்று எண்ணிக் கடுஞ்சினங் கொண்டார். "உனக்கு மேய வேறிடம் அகப்படவில்லையா? பூம்பொழிலை நாசமாக்கிவிட்டுப் போதற்கா இங்கு வந்து புகுந்திருக்கின்றனை. போ வெளியே" என்று சுடுமொழிகள் சில சொன்னார். உடனே அந்த ஆ பூம்பொழிலை விட்டு வெளியே போய்விட்டது. பிறகு அஃது அப்பொழிலை எட்டியே பார்ப்பதில்லை. கோவிலுக்குள் வழக்கம்போல் வந்து தங்குவதும் இல்லை. ஆதிரைநாளில் ஆவைக் கோவிலுக்குள் கொண்டுசென்று வழிபட முயன்றனர். எவ்வளவோ முயற்சிசெய்தும் ஆவைக் கோயிலுக்குள் கொண்டுசெல்ல முடியவில்லை. இச் செய்தியைக் கோயிற்கணக்கர் யோகிகட்குத் தெரிவித்தார். அப்போது தான் யோகிகட்கு உண்மை புலனாயிற்று. நாம் அன்று இதனை வைதபடியினாலேதான் அஃது இவ்வாறு மனங்

கலங்கி உளந்திரிந்து வருந்தி நிற்கிறது என்று உணர்ந்தார். உடனே இறைவன் திருமுன்பு சென்று, "பெருமானே என்னுடைய குற்றத்தை மன்னித்துத் திருவருள் புரிதல் வேண்டும். நான் அந்த ஆவின் மெய்யுணர்வினை உணர்ந்து கொள்ளாதபடியினால் தவறுதலாக ஏதோ கூறிவிட்டேன். அது நாளைமுதல் பூம்பொழிலுக்குட்சென்று மேயுமாறு திருவருள் புரிதல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இறைவன் திருவருளால் அவ் ஆ மறுநாள் பூம்பொழிலுக்குச் சென்று புல் மேய்ந்ததுடன் வழக்கம்போல் கோவிலுக்குள்ளும் சென்று தங்கியது.

### பலவூர்ப் பயணம்

பிறகு யோகியார் பல ஊர்களுக்குச் சென்றார். ஒவ்வோர் ஊரிலும் இறைவனுக்குப் பாமாலை பாடினார். செட்டிநாடு சென்று திருப்பணிக்குப் பொருள் திரட்டினார். அப்பொருளைக்கொண்டு திருப்பணிகள் பலசெய்தார்.

### வடமொழி கற்று நூல் இயற்றல்

பிறகு எட்டயாபுரம் சென்றார். அப்பொழுது அவ்வூரிலே குருநாதக் கலைஞர் என்னும் பெயருடைய வடமொழிப் புலவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். யோகியார் குருநாதக் கலைஞரை வடமொழியாசிரியராகக்கொண்டு வடமொழி நூல்களை நன்கு கற்றார். அவருடைய உதவியைக் கொண்டு பதஞ்சலி யோகசூத்திரம் பிரம சூத்திரம் ஆகிய வடமொழி நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்தார்.

### சித்தாந்தம் கற்றல்

அவர் பல சிவப்பதிகளினும் இறைவழிபாடுசெய்து பாமாலைகள் பாடிக்கொண்டு சென்னையை அடைந்தார். அப்பொழுது அங்கே சைவசித்தாந்த சண்டமாருதமாகச்

சோமசுந்தர நாயகர் என்பவர் விளங்கியிருந்தார். அவ ருடைய பெருமையை நன்கு உணர்ந்த யோகியார் நாயகரை ஆசிரியராகக்கொண்டு சைவசித்தாந்த நூல்கள் பலவற்றைக் கற்றுத்தேறினர்.

பாரதிப் பட்டம்

பாரதியார் என்றால் தேசியகவி சுப்பிரமணிய பாரதி யார் என்று எல்லோரும் நன்கு உணர்வர். ஆனல் பாரதி யாருக்கு அப் பட்டப்பெயர் எவரால் கொடுக்கப்பட்ட தென்பது பெரும்பாலார்க்குத் தெரியாது. சுப்பிரமணிய ஐயருடைய பாடல்களைக்கேட்டு மகிழ்ந்த சிவஞான யோகி கள்தாம் பாரதியார் என்னும் சிறப்புப் பெயரை வழங்கி னர்.

கோவிற்பட்டியில் இறுதி

இறுதியில் யோகிகள் கோவில்பட்டியை அடைந்து ஆண்டே நிலையாகத் தங்கினர். சித்த வைத்தியசாலை, திருவிடர் கழகம் முதலியவைகளை அமைத்துக்கொண்டு மக்களுக்கு நன்மைகள் பல செய்தார். அவ்வூரிலேயே எண்பத்து நான்காவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இயற்றிய நூல்கள்

1. செப்பறை வெண்பா
2. நெல்லையந்தாதிமாலை
3. திருச்செந்திற்சிலேடை வெண்பா
4. பதஞ்சலி யோகசூத்திர மொழிபெயர்ப்பு
5. பிரமசூத்திர மொழிபெயர்ப்பு
6. தமிழ்மொழியும் சிவநெறியும்
7. தமிழர் தொன்மை
8. வேதாகம உண்மை
9. கீதாமிர்த மஞ்சரி

10. சிவகான விளக்கம்
11. சுவேதாசுவதர உபநிடத மொழிபெயர்ப்பு
12. தமிழும் மருத்துவமும்
13. தமிழக வொழுக்கம் என்னும் மக்கட் சட்டம்
14. கோயில்பட்டிப் புராணம்
15. தேவோபாசனதீபம்

முதலியன. இவர் இயற்றிய நூல்கள், பதிகங்கள் முதலியவைகளை ஒன்றுதிரட்டி புத்தகமாக யோகிகளே வெளியிட்டுள்ளார்.

---

## கூ. இருக்கம். ஆதிமூல முதலியார்

*பிறப்பு*

சென்னை இராயப்பேட்டையில் 1866 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தெட்டாம் நாள் இருக்கம் ஆதிமூல முதலியார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கனகசபை முதலியார். தயார் பெயர் சொக்கம்மாள்.

*கல்விப்பயிற்சி*

இவர் முதலில் தெலுங்குப் பாடசாலையில் கல்வி பயிலத் தொடங்கினர். பிறகு இவருடைய தந்தை இவருக்குத் தமிழ்ப் பாடப் புத்தகம் முதலியவைகளைக் கற்பிக்கத்தொடங்கினர். பிறகு ஆதிமூலம் தாமே தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்த தமிழ்ப் பயிற்சி உடையவராகத் திகழ்ந்தார். இவருடைய தமிழறிவைப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் பார்த்து வியப்படைந்தார். தமிழ்ப்புலவர் பள்ளிக்கு வராத நாட்களில் இவரையே தமிழ்ப் பாடங்களை நடத்துமாறும் செய்தார். அத்தகைய சமயங்களில் ஆதிமூலனர் தமிழின் அருமை

பெருமைகளை மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களைத் தம் வழிப்படுத்துவார்.

தமிழுந்தெலுங்கும்

ஆதிமூலனார் தமிழையே பெரிதும் விரும்புதலைப் பள்ளியின் தலைமையாசிரியர் அறிந்தார். அவர் ஒருநாள் ஆதிமூலனார் வகுப்பு மாணவர்களைப் பார்த்துத் "தமிழ் சிறந்ததா? தெலுங்கு சிறந்ததா?" என்று விளையாட்டாகக் கேட்டார். அப்பொழுது தெலுங்கு மாணவன் ஒருவன் விரைவாக எழுந்து "தெலுங்கு தேட்ட அரவம் அத்வானம்" (தெலுங்கு தெளிவு தமிழ் மோசம்) என்று கூறினான். இதனைக் கேட்ட மற்றைத் தெலுங்கு மாணவர்கள் மகிழ்ச்சியடைந்து கலகலவென்று நகைத்தார்கள். உடனே ஆதிமூலனார் எழுந்து, "தமிழ் தங்கம் வடுகுவல்லக்காடு" என்றார். இதனைக் கேட்டுத் தமிழ் மாணவர்கள் யாவரும் மகிழ்ந்து நகைத்தார்கள்.

வைணவத் தமிழாசிரியர்

ஆதிமூலனாருடைய பள்ளியில் ஐயங்கார் ஒருவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் எப்பொழுதும் சைவ சமயக் கடவுளரைத் தாழ்வாகப்பேசி இழிவு படுத்திக் கொண்டேயிருப்பார். ஒருநாள் ஆதிமூலனார் அந்த ஐயங்கார்ப் புலவரைப் பார்த்து, "எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தாலும் மெய்யறிவு தோன்றாமல் பிறசமயக் கடவுளரை வைது கொண்டிருப்பவர்கள் அறிவற்றவர்களே யாவார்கள். சைவமும் வைணவமும் இந்து சமயத்தின் இருகண்கள். சைவர்கள் திருமாலைக் குறித்துத் தாழ்வாகப் பேசுவதில்லை. தங்கள் பிள்ளைகளுக்கு நாராயணன், கோவிந்தன், இராமசாமி, கோபாலன் இவ்வாறெல்லாம் வைணவ சமயப் பெயரை வைக்கிறார்கள். ஆனால், எந்த வைண

வரும் சைவசமயப் பேர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு வைப்பதில்லை. சைவர்கள் பெருமாள் கோயிலுக்குப் போய்க் கடவுளை வழிபடுவதைப்போல் வைணவர்கள் சிவன் கோயிலுக்குப்போய் இறைவனை வழிபடுவதில்லை. இதிலிருந்து சைவர்கள் அறிவு தெளியப் பெற்றவர்கள் என்பது நன்கு விளங்குகிறது'' என்று அவ் வைணவப் புலவருக்கு அறிவுரை கூறினார். அதிலிருந்து அப்புலவர் சைவ சமயக் கடவுளை இகழ்ந்து பேசுவதை நிறுத்திவிட்டார்.

### பொது நலப் பணிகள்

இவர் சபைகள் பலவற்றை அமைத்து அவைகளில் சைவசமய வளர்ச்சிக்கான சொற்பொழிவுகளை நிழ்த்தினார். திருமயிலையில் ஆண்டுதோறும் நிகழும் திருவிழாவில் பேரவைகள் கூட்டிச் சொற்பொழிவுகள் செய்தார். அறுபத்துமூன்று நாயன்மார்களும் தெருவில் எழுந்தருளுதற்கு விமானங்கள் செய்ய எண்ணினார். அதன் பொருட்டுப் பலரிடம் இருந்தும் பொருள் திரட்டி விமானங்கள் செய்வித்தார்.

### ஒற்றியூரில்பணி

இவரும் இவருடைய நண்பர்கள் பலரும் திருவொற்றியூருக்குச் சென்று மண்வெட்டி கட்டப்பாறை முதலியவைகளைத் தங்கள் கையிலெடுத்துத், தெரு, திருக்கோயில், பூம்பொழில் முதலியவைகளில் திருநாவுக்கரசரைப்போலத் திருத்தொண்டுகள் பல செய்தார்கள்.

### சிவனடியார் திருக்கூட்டம்

ஆதிமூலனாரும் அவருடைய நண்பர்கள் பலரும் ஒன்று சேர்ந்து, **சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்**'' எனப் பெயரிய திருக்கூட்டம் ஒன்றை அமைத்தார்கள். எல்

லோரும் ஒருங்குகூடிப் பல சிவப்பதிகட்குஞ் சென்று இறை வழிபாடு செய்தல், சைவசமயச் சொற்பொழிவுகள் செய்தல் முதலியவைகளைச் செய்தார்கள், இதனால் ஆங்காங்கிருந்த மக்கள் சைவசமயப் பெருமையை உணர்ந்து கடவுள் வழிபாடு முதலியவைகளிலே ஈடுபட்டு நன்னெறிப் பட்டார்கள்.

கலைத்தொண்டு

ஆதிமூலனார் சைவசமய வளர்ச்சிக்குப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கவேண்டும் என்று எண்ணினார். "சைவம்" என்னும் பெயருடைய திங்கள் வெளியீடு ஒன்றைத் தாமே ஆசிரியராக இருந்து நடத்தினார். காரைக்குடி சொக்கலிங்கையா, சிவபாத சுந்தரம்பிள்ளை, சூளை சோமசுந்தர நாயகர், தஞ்சை கே. எஸ். சீநிவாசபிள்ளை, ஆ. ஈ. சுந்தரமூர்த்திப்பிள்ளை, த. கைலாசபிள்ளை முதலிய பேரறிஞர்கள் இப்பத்திரிகையில் சைவசமயத்தைப் பற்றிக் கட்டுரைகள் பல எழுதினார்கள். ஆதிமூலனாரும் அவ்வப்போது சிறந்த கட்டுரைகள் எழுதி வெளிப்படுத்தினார்.

தொண்டு

ஆதிமூலனார் சிவனடியார் திருக்கூட்டத்தை ஊர் ஊராக நடத்திச் சென்றதைப்போல் இவருக்கு முன்பு யாருஞ் செய்ததில்லை. இவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே இக்காலத்தில் திருக்கூட்டங்கள் ஏற்பட்டுச் சிவப்பதி வழிபாட்டிற்குச் செல்லுகின்றன. திருக்கூட்டத்தினர் ஓதி உணர்ந்து இறைவனை வழிபடும் பொருட்டுப் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் அரிய பாடல்கள் பலவற்றைத் திரட்டி ஒன்றுபடுத்திப் "பன்னிரு திருமுறைத் திரட்டு" என்னும் பெயருடன் வெளிப்படுத்தினார். இதற்குப் பின்னரே பலரும் திருமுறைத்திரட்டுகள் திரட்டி

வெளியிடும் பணிகளில் ஈடுபட்டனர். இவருடைய திருக் கூட்டத்திலே, கயப்பாக்கம்-சதாசிவச்செட்டியார், ஈக்காடு இராசரத்தினமுதலியார், காட்டூர் வேங்கடாசலமுதலியார் முதலிய பல அன்பர்கள் இருந்தனர். இவர் சைவசமயத் திற்குஞ் செந்தமிழ் மொழிக்கும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் உரிமைப் படுத்திச் செய்த தொண்டு மிகவும் போற்றற்பாலதாகும்

---

## கசு. பேரம்பலப் புலவர்

தோற்றம்

ஈழநாட்டில் யாழ்ப்பாணத்து வேலணையூரில் வேளா ளர் குலத்தில் பேரம்பலப் புலவர் பிறந்தார். பேரம்பலப் புலவர் தோன்றிய காலம் 1859-ஆம் ஆண்டு (ஆங்கிலம்) தைத் திங்கள் 21-ஆம் நாள். இவருடைய தந்தையார் பெயர் கோணமலை. தாயார் பெயர் சிவகாமியம்மை.

கூத்தப்பிரான் திருவருள்

கோணமலையாருக்கு நான்கு பெண்மக்களும் ஓராண் மகனும் தோன்றினர். ஆண்மகனுக்குத் தாமோதரன் என்று பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்தார். உரிய காலத்திலே கல்விப் பயிற்சியையுஞ் செய்வித்தார். தாமோதரன் நன்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த நாளிலே தனது பன்னிரண்டாம் அகவையில் காய்ச்சல் நோயினால் விண்ணுலகேகினன். ஒரே மைந்தனை இழந்த தந்தையார் பெருந் துன்பமடைந்தார். அவருடைய மகப் பிரிவுத் துன்பம் மாற்றுதற்கரியதாக இருந்தது. இறைவழிபாடு செய்ய எண்ணினார். ஊரைவிட்டுப் புறப்பட்டார். இராமேசுரம் திருவாலவாய் முதலிய சிவப்பதிகளை வணங்கிக்கொண்டு

திருத்தில்லையை அடைந்தார். கூத்தப்பிரானைப் போற்றி வணங்கினார். "அம்பலவாணனே! அடியேன் அரும் பெறற் புதல்வனை இழந்து பெருந் துன்படைந்து வாடுகின்றேன். வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே அளிக்கும் வித்தகனே! என் அருமைச் செல்வனை மீளவும் எனக்குத் தந்தருளுதல் வேண்டும். இன்றேல் தேவரீருடைய திருமுன்பே உயிரை ஒழிப்பேன்," என்று கூறி ஏத்தி வணங்கினார். தில்லையிலேயே தங்கிக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுத் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களை ஓதிக்கொண்டிருந்தார். பொன்னம்பலவாணர் கோனாமலையின் மனங்கோணாமல் திருவருள் செய்ய நினைந்தார். ஓர்நாள் இரவிலே அந்தண வடிவுடன் கோனாமலையின் கனவில் தோன்றினார். "அன்பனே! உன்னுடைய பிள்ளை உன் அறுபதாம் அகவையில் உன்னிடம் வந்து சேருவான். அவனுக்குப் பேரம்பலம் என்று பெயரிடுவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினார். உடனே கோனாமலை உறக்கம் நீங்கி எழுந்தார். அம்பலவாணரின் அருட்டிறனை எண்ணி எண்ணி உளம் மகிழ்ந்தார். கோயிலையடைந்து வழிபாடு செய்தார். பின்னுஞ் சிலநாள் அங்கிருந்துவிட்டுத் தமது ஊரையடைந்தார். உற்றார் உறவினர் முதலிய யாவரிடமும் திருவருட்டிறத்தை உரைத்து மகிழ்ந்திருந்தார். அதன் பிறகுதான் முற்கூறியவாறு பேரம்பலம் பிறந்தார். தந்தையார் இறைவன் கட்டளைப்படி குழந்தைக்குப் பேரம்பலம் என்று பெயரிட்டுச் சிறப்போடு வளர்த்துச் செய்ய வேண்டிய பிள்ளைச் சடங்குகளையுஞ் செய்தார்.

**கல்வி**

ஐந்தாம் ஆண்டிலே பேரம்பலத்தைப் பள்ளியில் வைத்து எழுத்தறிவிக்கச் செய்தார். பேரம்பலம் மிகு

விரைவாகவும் திறமையாகவும் கல்வியை நன்கு கற்றார். இவருடைய கல்வித் திறத்தைக் கண்டு எல்லோரும் போற்றினர்.

செய்யுள் இயற்றுதல்

அம்பலவாணன் அருளால் தோன்றிய இவர் இளமைப் பருவத்தில்தானே பாவாணரானார். பன்னிரண்டாவது அகவையில் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண் டிருந்தார். தம் நண்பன் ஒருவனிடம் இருந்து அகர வரிசை நூல் ஒன்றை இரவலாகப்பெற எண்ணினார்.

"சாந்தலிங்கம் என்றிச் சகம்பழிச்ச வாழ்வுகூர்
சாந்தலிங்க சோதிடநற் சாகரமே—ஓர்ந்தும்
அகராதி தன்னை அனுப்புஞ் சிலசொல்
தகவாக நானுணரத் தான்"

என்னுஞ் செய்யுளை எழுதி நண்பன் ஒருவன் மூலமாக அனுப்பினார்.

இலக்கியப் பயிற்சி

இலக்கண இலக்கியப் புலவர் கனகசபைப் பிள்ளை என்பவர் பேரம்பலத்தின் கூரிய அறிவை உணர்ந்தார். இவரை வலிந்தழைத்து நிகண்டு, பாரதம், நைடதம், நன்னூல் விருத்தியுரை முதலிய நூல்களைப் போதித்தார். பிறகு கந்தப்பிள்ளை என்பவரிடத்தில் தேவாரம், திருவாசகம், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கண இலக்கியங்கள், சித்தாந்த நூல்கள் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். சோதிடம் வல்லாரிடத்தில் சோதிட நூல்களையும் கற்றுணர்ந்தார்.

அலுவல் பார்த்தல்

இவருடைய கல்விப் புலமையை நன்குணர்ந்த நொத்தாரிஸ் முருகேசு என்பவர், இவரைத் தமக்கு எழுத்தாள

ராக அமர்ந்து வேலை பார்க்குமாறு கேட்டுக்கொண்டார். பேரம்பலமும் சின்னாள் அத்தொழிலை மேற்கொண்டிருந்தார். பிறகு வேளாண் தொழில் செய்வதிலும், விரும்பியவர்கட்கு நூல்களைக் கற்பிப்பதிலும் ஊரை நன்னிலைப் படுத்துவதினும் தமது காலத்தைச் செலவிட்டார்.

மணமும் மக்கட்பேறும்

இவர் பெரியநாச்சிப்பிள்ளை என்னும் மங்கையை முதல் மனைவியாகவும், வள்ளியம்மைப்பிள்ளை என்னும் மாதை இரண்டாம் மனைவியாகவும் மணந்தார். இரண்டு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களுந் தோன்றினர்.

நூல்கள் இயற்றல்

பேரம்பலத்தின் புகழ் நாள்தோறும் வளர்ந்தது. செல்வர்கள் பலர் இவரைத் தமக்கு நண்பராகக் கொண்டனர். குமாரசாமிப் பிள்ளை, நமசிவாய தேசிகர், வண்ணை வைத்தியலிங்கம் பிள்ளை முதலிய புலவர்கள் பேரம்பலப் புலவரின் பெருமையைப் பாராட்டினர். இவர் தனிப் பாடல்கள் பல பாடியிருப்பதுடன், வேலணை இலந்தைக் காட்டுச் சித்தி விநாயகர் இரட்டைமணி மாலை, வண்ணைச் சிலேடை வெண்பா, கடம்பர் யமக வந்தாதி, முத்துமாரியம்மை ஊஞ்சல் என்னும் நூல்களும் இயற்றியுள்ளார். இவரிடம் கற்ற வேலாயுத பிள்ளை, கனகரத்தினம், இரத்தினம் என்பவர்கள் சிறந்த அறிஞர்களானார்கள்.

இறுதி

பேரம்பலப் புலவர் தமது இறுதிக்காலத்தில் நாலைந் தாண்டுகள் துறவியைப்போல் இறைவழிபாடு செய்திருந்து, தமது எழுபத்தாறுவது அகவையில் 1935-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள், இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## ௬௫. வண்ணை. செல்லையா

### தோற்றம்

யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே 1878-ஆம் ஆண்டு ஆகஸ்டு இரண்டாம்நாள் (வெகுதானிய ஆண்டு ஆடித்திங்கள் ௧௯-ஆம் நாள்) செல்லையா பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வைத்தியலிங்கம் தாயார் பெயர் சிவியம்மாள்.

### கல்வி

செல்லையா இளமையில் அவ்வூரில் உள்ள பாடசாலையில் கல்விகற்கத் தொடங்கினார். நடுத்தரப் பாடசாலைக்குச் சென்று ஆங்கிலமும் கற்றார். அதன்பின் ஆறுமுகநாவலரின் மருகர் ந. ச. பொன்னம்பல பிள்ளையிடம் சில நூல்களைப் பாடங்கேட்டார். பிறகு ஏழெட்டாண்டுகள் இந்தியாவிற் சுற்றுப்பயணஞ் செய்து தம்முடைய கல்வியறிவைப் பெருக்கிக்கொண்டார். உரியகாலத்தில் திருமணமுஞ் செய்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டார்.

### தமிழாசிரியர்

1925-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரை ஈப்போ நகரில் திருவள்ளுவர் கலாசாலைத் தலைமையாசிரியராகஇருந்து பிறருக்குக் கல்வியறிவை ஊட்டினார். தாமும் பல நூல்களை ஆராய்ந்து கற்றுக்கொண்டார். பிறகு கொழும்பையடைந்து பலருக்குத் தமிழ் நூல்களைக் கற்பித்தார். நூல் வெளியிடுபவர்கட்கு உதவியாயிருந்து நூல்கள் வெளிவரச் செய்தார்.

### முருக வழிபாடு

இவர் முருக வழிபாட்டிலே இறுகிய மனம் உடையவராக இருந்தார். திருச்செந்தூர் முருகக் கடவுளுடைய

படத்தை எப்பொழுதும் தாம் படிக்கும் பலகையின்மீது வைத்துக்கொண்டிருந்தார். முருகக்கடவுள்மீது அவ்வப் பொழுது தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். அன்றி நூல்களும் செய்திருக்கிறார். மூலநோயால் துன் புற்று வருந்திய இவரை, அறுவை மருத்துவத்தின் பொருட்டு மருத்துவசாலைக்கு அழைத்துச் சென்றனர். அறுவை மருத்துவம் தொடங்குவதற்கு முன்பு,

நல்லைவாழ் வுகந்த நாயகா எளியேன்
நலிவுறு மூலநோய் தன்னால்
எல்லையில் துயருற் றேங்கிவா டுதலுன்
இருங்கரு ணைக்கிழுக் கன்றோ
வல்லையில் ஓர்கால் சத்திரம் இட்டு
மறித்துமிட் டுஞற்றவே மதித்தார்
ஒல்லையில் வந்தென் பக்கலில் இருந்தே
உறுதுணை புரிந்துகாத் தருளே.

என்னும் செய்யுளைப் பாடினார்.

**இரமணர்மீது அன்பு**

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த இரமணமக ரிஷிகள் மீதும் இவர் பேரன்புடையவராக இருந்தார். அவர்மீது பல பாடல்கள் பாடிப் போற்றினார்.

**கட்டுரைகள்**

ஈழகேசரி, இந்துசாதனம், தினகரன், தமிழ்நேசன், மகாவிசயலட்சுமி, இந்தியநேசன் முதலிய பத்திரிகைகளில் சமயம், வரலாறு, இலக்கியம், ஆராய்ச்சி முதலியவைகளைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினார். இவருடைய உரைநடை தெளிவுடையதாகவும் எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்கதாகவும் இருக்கும். இவர் காலக் கணித நூல் அறிவும் வாய்க்கப் பெற்றிருந்தார். எதிர்கால நிகழ்ச்சி

கள் பலவற்றை முன்னரேகூறி, அவை நிகழ்ந்த பின்னர் சிலரிடமிருந்து நன்கொடைகளும் பெற்றிருக்கிறார். சிறந்த தமிழ் அறிஞர்களுடைய பிறந்த நாட்குறிப்பை ஆராய்ச்சி செய்வதும், அவற்றைக் குறித்துக் கட்டுரைகள் வரைவதும் இவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

நூல்தொகுத்தல்

விலையுயர்ந்த நூல்களைத் தொகுப்பதில் இவர் எப்பொழுதும் கருத்துச் செலுத்தினார். தமது வருவாயின் பெரும்பகுதியை இதன்பொருட்டே செலவிட்டார். எவ்வளவு வறுமையான சமயத்திலும் அருமையான நூல் ஒன்றைக் கண்டுவிட்டால் அதனை வாங்காமல் விடமாட்டார்.

இறுதி

தமிழ்த்தொண்டிலும் முருகக்கடவுள் வழிபாட்டிலும் ஈடுபட்டுக் காலத்தைக்கழித்த இவர் 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் ஏழாம்நாள் முருகன் திருவடியை அடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. நல்லைச்சண்முகமாலை
2. ஈப்போ தண்ணீர்மலை வடிவேலர் மும்மணிக்கோவை
3. வண்ணைத் திருமகள் இரட்டைமணிமாலை
4. வண்ணைத் திருமகள் பதிகம்
5. அரிநாம தோத்திரம்
6. வண்ணை வேங்கடேசப்பெருமாள் ஊஞ்சல்
7. ஊஞ்சல் பதிகம்
8. நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம்
9. வடிவேலர் திருவிருத்தம்
10. வடிவேலர் ஊஞ்சல்பதிகம்
11. வடிவேலர் திருவருட்பத்து
12. மதுவிலக்குப் பாட்டு
13. ஒழுக்கமஞ்சரி

14. காந்தி இயன்மொழி வாழ்த்து
15. மதுமானிடக் கும்மி
16. பழமைப்பனுவல் ஐம்பானைந்து
17. கதிரை நான்மணிமாலை
18. இரமணமகரிஷி பஞ்சரத்தினம்
19. நாவலர் பதிகம்
20. ஆத்மாநுபவ தீபிகை
21. திருமால் அவதார நாமாவளி
22. பாலர் பாடல்
23. ஆராய்ச்சிக் கட்டுரைகள்

முதலியன.

---

## கஅ. முத்துத்தாண்டவராய பிள்ளை

தோற்றம்

தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள பரங்கிப்பேட்டையில் முத்துத் தாண்டவராய பிள்ளை 1868-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் இருபத்தெட்டாம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் அப்பாசாமிப் பிள்ளை. தாயார் பெயர் அன்னம்மையார்.

கல்வி

இவர் இளம்பிராயத்தில் தானே கற்கவேண்டியவைகளையெல்லாம் நல்லாசிரியரிடத்திலே கற்றுக் கல்வியறிவிற் சிறந்து விளங்கினார். இவரிடம் போதனைத் திறன் இயற்கையாகவே அமைந்திருந்தது. ஒருமுறை கேட்டதை மறுமுறை கேளாமலே எடுத்துரைக்கும் ஆற்றலும் அமைந்திருந்தது.

ஆசிரியத் தொழில்

முதன்முதலில் 1893-ஆம் ஆண்டில் தரங்கம்பாடி லூதரன் கல்லூரியில் தமிழாசிரியராக ஏற்படுத்தப் பெற்

ரூர். அதன்பிறகு 1916-ஆம் ஆண்டுமுதல் சீகாழி ஹாதரன் உயர்தரப் பாடசாலையில் தமிழாசிரியரானார்.

கலைத் தொண்டு

பள்ளிக்கூட ஆசிரியராக இருந்ததோடு அமையாமல் பலவழிகளினும் கலைத்தொண்டு செய்வதில் ஈடுபட்டார். பல ஐரோப்பியர்களுக்கு இவர் தமிழாசிரியராக இருந்து அவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்தார். அவர்களைக்கொண்டு செர்மன் முதலிய மொழிகளில் திருவாசகம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் சுபக்கம், பரபக்கம், தொல்காப்பியப் பொருளதிகாரம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், காரைக்கால் அம்மையார் நூல்கள், ஆண்டாள் திருப்பாவை, தாயுமானவர் பாடல் ஆகிய இவைகளை முழுதும் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார். தேவாரம், திவ்யபிரபந்தம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினத்தார் பாடல் முதலியவற்றுள் சில முதன்மையான பகுதிகளை மொழிபெயர்த்து வெளியிடச் செய்தார். தமிழ் ஆங்கில அகராதி ஒன்று வெளிவருதற்குத் துணை புரிந்தார். முகமதியர் மதப் புராணமாகிய சீறாப் புராணமும் இவருடைய உதவியால் உரையுடன் வெளிவந்தது. இவரிடத்தில் இருபதின்மர்க்கு மேற்பட்ட ஐரோப்பியர்கள் தமிழ் கற்றறிந்தனர். இவரிடம் தமிழ் கற்ற ஐரோப்பியர்கள் தமிழ் மொழியின் சிறப்பையும் பழந் தமிழரது சீர்த்தியையும் புகழ்ந்து அரியபெரிய ஆராய்ச்சி நூல்கள் பல எழுதி வெளியிட்டனர்.

பலவகை ஆராய்ச்சிகள்

தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்ததோடு மட்டும் அமையாமல், இந்நாட்டின் பழைய வரலாற்றை

அறிதற்கேற்ற தொன்மை ஆராய்ச்சிகளினும் ஈடுபட்டார். பல ஆராய்ச்சி நூல்களைப் படித்துணர்ந்தார். கற்காலத்துப் பொருள்களையும், கற்குவை, கைவண்டி, சமாதிக்கல், சுமை தாங்கி, கல் வளைவு, தாழிகள் முதலியவற்றையும் பழங்காலத்து நாணயங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தார். இவைகளைக் குறித்துப் பேரவைகளில் சொற்பொழிவுகள் பல செய்ததோடு பத்திரிகைகளினும் கட்டுரைகள் வரைந்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க காலத்தில் "ஏடு தேடல்" என்னும் பொருள்பற்றி அச் சங்கக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். பாண்டித்துரைத் தேவர் இவரை அச் சங்கத்தின் புலவர்களில் ஒருவராக ஏற்படுத்தினர்.

**கலை நிரம்பிய அறிஞர்**

இவர் திருப்பறியலூர்ப் புராணத்தை அச்சிட்டு வெளியிட்ட காலத்தில் திருவாவடுதுறை யாதீனத்தலைவர் அம்பலவாண தேசிகர் "கலை நிரம்பிய அறிஞர்" என்று புகழ்ந்து பாராட்டிப் பேசினர்.

**வித்வசிகாமணி**

இவருடைய கல்விப் புலமையை நன்குணர்ந்த தருமபுர ஆதீனத் தலைவர் இவரைக்கொண்டு திருமுல்லைவாயிற் புராணம் முதலிய அரியநூல்கள் பலவற்றை நன்கு ஆராய்ந்து திருத்தமான பதிப்பாக வெளியிடச் செய்தார். இவருடைய அறிவுடைமையைப் பாராட்டி வித்வசிகாமணி என்னும் சிறப்புப் பெயரை வழங்கினர்.

**நூல்கள்**

இவர் இளம்பருவத்தில்தானே நூல்கள் பல செய்யத் தொடங்கிவிட்டார்.

1. சிந்தாமணி விநாயகர் மாலை
2. சாதாக்கியத் திருமுறை
3. ஒருபா ஒருபஃது
4. பிள்ளையார் ஊசல்
5. ஐயனாரிதனார் மாலை
6. சாமியார் துதி
7. திருமகண்மாலை
8. முருகன் வருகைப் பத்து
9. தில்லையாடிப் புராணம்
10. வாருண மான்மியம்
11. பொய்யா விநாயகர் இருபா இருபஃது
12. வெள்ளை வாரணப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
13. வைத்திய நூல்
14. சோதிட நூல்
15. கார்மண்டல சதக உரை
16. மதுபான விலக்கு
17. சேதுபதி நாணயம்
18. காழிக் கல்வெட்டு

என்பன இவருடைய நூல்கள். இவருடைய நூல்களைப் போற்றிப் பொதுமக்கள் இவருக்குச் சிறப்புக்கள் பல செய்து பெருமைப் படுத்தினர்.

---

## கஎ. கோவிந்தசாமிப் பிள்ளை

**கல்வி**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராக இருந்த கோவிந்தசாமிப் பிள்ளை, திண்ணிய அறிவு நலமும் நுண்ணிய ஆராய்ச்சித் திறமையும் உடையவர். இவர் 1920-ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் சிறப்பாகத் தேறினார். பிறகு திரிசிரபுரம் செயின்ட் சோசப் கல்லூரியில் கல்வி பயின்று பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் தேறினார்.

### அலுவல்

முதலில் சென்னை சட்டசபைப் பிரிவில் வேலைபார்க்கத் தொடங்கினர். கல்வி வளர்ச்சியில் பணிபுரியவேண்டுமென்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. ஆகவே அண்ணாமலை நகர்க்குச் சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராக வேலைபார்க்கத் தொடங்கினர். மேலும் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்ள விரும்பினர். ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளினும் உள்ள நூல்கள் பலவற்றைப் படித்துச் சீரிய புலமை பெற்றார். இந்தியநாட்டு வரலாற்றினும் பிறநாட்டு வரலாற்றினும் வல்லவரானர். மேலும் கல்வெட்டுக்கள், பண்டைய பட்டயங்கள், செப்புத்தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்த செய்திகள், பழைமையான கோயில்களின்சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவைகளின் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு விளங்கினர்.

### ஓவியக்கலை

ஓவியங்களை எழுதுவதினும் சிறந்த வன்மைபெற்றிருந்த இவர் இருண்மிகுந்த குகைக்கோயில்கள் பலவற்றிற்குச் சென்று விளக்கொளி அமைத்துக்கொண்டு சுவரில் இருந்த ஓவியங்களை உள்ளவாறே ஏட்டில் எழுதித்தொகுத்தார். நாளடைவில் இத்தொழிலில் இவர் கைதேர்ந்தவரானர். இத்தொழிலின் திறமைதான் இவருடைய புகழை வடநாட்டிலும் தென்னட்டிலும் பரவச்செய்தது. ஈழநாட்டிற்குச்சென்று ஆங்கு இயற்றிய சொற்பொழிவுகளால் அந்நாட்டினும் சிறந்த புகழ்பெற்றார்.

### சித்தாந்தக் கலை

ஆங்கிலம் பயின்ற இவர் தமது காலம் முழுவதையும் ஆங்கில நூல்களைப் படிப்பதிலேயே செலவிடவில்லை. சங்க நூல்களை நன்கு பயின்றார். மெய்கண்ட சாத்திரங்கள்,

பன்னிரு திருமுறைகள் ஆகியவைகளையும் ஓதியுணர்ந்தார். சைவசித்தாந்தமாநாடுகட்குச்சென்று சொற்பொழிவாற்று தலையும் மேற்கொண்டார். சிறந்த கருத்துக்கள் பொதிந்து நயத்துடன் விளங்கிய இவருடைய சொற்பொழிவு எல்லாருடைய உள்ளத்தையுங் கவர்ந்தது. இவருடைய கட்டுரைகள் தமிழ்ப் பத்திரிகைகளினும் ஆங்கிலப் பத்திரிகைகளினும் வெளிவந்தன.

நாடகக்கலை

காவியப் பயிற்சியிலும் ஓவியப் பயிற்சியிலும் வன்மை பெற்று விளங்கிய இவர் இசைக் கலையிலும் சிறந்து விளங்கினர். தமிழ்நாட்டில் நாடகக்கலை மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்று எண்ணினர். பல்கலைக் கழக மாணவர்களோடு சேர்ந்து நாடகங்களில் நடித்தார். மாணிக்கவாசகருடைய வரலாற்றை நாடகமாக நடித்தற்கும் அதில் தாம் ஒரு கோலம் பூண்டு கொள்ளுதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். ஆனல், அது நடைபெருமலே போய்விட்டது.

ஞானியார் தொடர்பு

சைவசித்தாந்த நூல்களைக் கற்கத்தொடங்கியபிறகு ஞானியாரடிகளிடம் தொடர்புகொள்ளத் தொடங்கினர். ஞானியாருடைய மெய்யறிவாற்றலும் பேரறிவும் இவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. ஞானியார் மறைவு வரையில் அவருடைய அடித்தொண்டராக விளங்கினர்.

நூல்இயற்றக் குறிப்புக்கள்

தென்னிந்திய சிற்பக்கலை, தென்னிந்திய ஓவியக்கலை, தென்னிந்திய வரலாறு ஆகிவைகளைக் குறித்து நூல்கள் எழுதவேண்டுமென்று திட்டமிட்டு அதற்கு வேண்டிய குறிப்புக்களை யெல்லாம் தொகுத்துக்கொண்டிருந்தார்.

தமிழில் எழுதிய நாட்டு வரலாற்றின் முற்பகுதியை அண்ணுமலைப் பல்கலைக்கழகமே வெளியிடும் பொறுப்பேற்றுள்ளது.

பண்புநலம்

சிறந்த குணநலம் அமையப்பெற்றவர் இவர். சிறிது போது இவருடன் பழகினும் நீண்டகாலப் பழக்கம் பெற்றவரைப்போல் காணப்பெறுவார். இல்லத்திற்குச் செல்லும் நண்பர்கட்குத் தக்காங்கு விருந்துசெய்து மகிழ்விப்பார். நண்பர்கட்கு இவர் எழுதுங் கடிதங்கள் பண்புநலம் கனிந்ததாக விளங்கும். ஒரு நண்பருக்கெழுதிய கடிதத்தில், "கல்வியினும் இனிய நண்ப!" என்று அவரை விளித்தெழுதினர்.

இறுதி

பிஞ்சிற் பழுத்துச் சுவையுடன் இலங்கிய இவர் பெருமையைத் தமிழ் உலகம் அறியத்தொடங்கிய சமயத்தில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக ஏற்படுத்தப்பெற்று வேலையை ஏற்பதற்குள் 1941-ஆம் ஆண்டு சூன் திங்களில் காய்ச்சல் நோயினுல் தமது முப்பத்தெட்டாவது அகவையில் காலமானுர்.

---

## கடு. சோமசுந்தர தேசிகர்

தோற்றம்

கு. சோமசுந்தர தேசிகர் தஞ்சைமாவட்டத்திலே 1897-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினென்ரும் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் குருசாமித் தேசிகர். தாயார் பெயர் செல்லத்தம்மாள்.

### கல்வி

தேசிகர் இளமையிற் கற்கவேண்டிய கல்வியைக் கற்றார். பிறகு தமிழ்ப் புலவராதற்கு எண்ணித் திருவையாற்று அரசர் கல்லூரியிற் சேர்ந்து தென்மொழியும் வடமொழியுங் கற்றார். 1917-ஆம் ஆண்டில் தமிழ்ப் புலவர் தேர்வில் தேறிப் பட்டம் பெற்றார். ஆங்கிலத்தில் பி. ஓ. எல். தேர்விலும் தேறினார். ஆகவே, இவரிடம் மும்மொழித் திறமையும் செம்மையாக அமைந்திருக்கின்றது.

### ஆசிரியத் தொழில்

1918-ஆம் ஆண்டில் திருச்சியைச் சேர்ந்த முசிரி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்கு சில ஆண்டுகள் ஆசிரியராக வேலைபார்த்தார். இவருடைய நுண்ணறிவைக்கண்ட திருவையாற்றுக் கல்லூரித் தலைவர் இவரைத் திருவையாற்றுக் கல்லூரியிலேயே 1924-ஆம் ஆண்டில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினார்.

### மணமும் மக்கட்பேறும்

1919-ஆம் ஆண்டில் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. சட்டநாதன், விசுவநாதன், இராமநாதன், சந்திரசேகரன், திருஞானசம்பந்தன் என்னும் ஆண்மக்கள் ஐவரும் சிவகாமி என்னும் பெண்மகள் ஒருத்தியும் மக்கட் பேறாகத் தோன்றினர்.

### தமிழ்த்தொண்டு

இவர் பேராசிரியராக அமர்ந்து தமிழ்ப் புலவர்களை உண்டாக்கும் பணிபுரிந்ததுடன் கலைத்தொண்டிலும் கருத்துச் செலுத்தினார். வடமொழியில் உள்ள அவிபாகம் என்னும் நாடகநூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். பிரபுலிங்கலீலை முதலிய நூல்களுக்குக் குறிப்புரை எழுதினார். தமிழ்ப்பொழில், முதலிய பத்திரிகைகளில் அரிய

கட்டுரைகள் பல எழுதினர். சொல்லாற்றலில் நல்லாற்றல் படைத்தவராகலான் சங்கங்கள் பலவற்றில் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் புகழடைந்தார். 1930—36-ஆம் ஆண்டுகளில் பல்லாவரத்தில் நடைபெற்ற பொதுநிலைக் கழக விழாக்களில் அடிகளால் அழைக்கப்பெற்றுச் சொற்பொழிவாற்றினர். இவருடைய சொற்பொழிவை மறைமலையடிகளாரே போற்றிப் புகழ்ந்து பாராட்டினர். திருநெல்வேலியில் நடைபெற்ற மெய்கண்ட சாத்திர மாநாட்டில் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்கள் தலைமையில் 24—5—41-ல் போற்றிப் பஃறொடை என்னும் பொருள்பற்றி யாவரும் புகழும்படியாகப் பேசினர்.

பண்பு

நல்லாசிரியர்கட்குத் தொல்லாசிரியர்கள் நவின்ற நல்லிலக்கணங்கள் முற்றும் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. அரிய பொருள்களையும் மிக எளிதாகக் கூறும் ஆற்றல் இவரிடம் மிகுதியாக விளங்கியது. மாணவர்கள் குற்றஞ்செய்தாலும் அதனைக் குணமாகவே கருதுவார். குற்றத்தையுங் குணமாகக் கருதும் பான்மை இறைவனுடையது. இக்குணம் அமைவது அருமை. ஐயத்துக்கிடமான செய்தியை மாணவர்கள் எத்தனைமுறை திருப்பித் திருப்பிக் கேட்பினும் சிறிதுஞ் சலியாமல் மறுமொழி பகர்வார். ஓர் ஐயத்தை ஒருமுறைக்குமேல் கேட்பின் சீறிவிழும் ஆசிரியப் பெருந்தகைகள் நிறைந்துள்ள இவ்வுலகில் தேசிகரின் இச் சீரிய பண்பு போற்றத்தக்க தொன்று அன்றோ?

இறுதி

சீரிய நல்லியல்புகளெல்லாம் ஒருங்கே செறியப்பெற்ற இந்நல்லாசிரியர் நீண்ட வாழ்நாளைப் பெற்றிருக்கவில்லை.

நாற்பத்து நான்காம் அகவையில் 1941-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினொன்றாம் நாளில் சுரநோயின் கொடுமையால் யாக்கையைத் தமர்பால்விட்டு வானகம் புகுந்தார்.

---

## கூகூ. வல்லை. சண்முகசுந்தர முதலியார்

### பிறப்பு

தொண்டை நாட்டிலே வல்லக்கோட்டை என்னும் ஊரில் துளுவவேளாளர்குலத்தில் 1858-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ஆம் நாள் சண்முகசுந்தர முதலியார் தோன்றினார். தந்தையார் பெயர் முத்துச்சாமி முதலியார். தாயார் பெயர் சுப்பம்மாள்.

### கல்வி

இருமுதுகுரவர்கள் முதலியாரை உரிய பருவத்தில் பள்ளிக்கு அனுப்பினர். இவருடைய முன்னோர்கள் சென்னையை அடைந்து கொண்டித்தோப்பு என்னுமிடத்தில் குடியேறியிருந்தனர். ஆகவே முதலியாருடைய பள்ளிப் படிப்புச் சென்னையில் தொடங்கியது. தொண்டை மண்டலம் துளுவவேளாளர் பள்ளியில் ஏழாவது வகுப்பு வரையிற்படித்தார். ஆங்கிலமுஞ் சிறிது கற்றார். கல்வி கற்பது இவருக்கு மிக வெறுப்பாக இருந்தது. ஒழுங்காகப் பள்ளிக்குப் போகாமல் தில்லுமல்லுச் செய்து திரிந்தார். இந்தச் சமயத்தில் தந்தையாருங் காலமானார்.

### சிலம்பம் பழகுதல்

சிலம்பம் பழகுதல் என்பது தடிகளைச் சுழற்றிச் சூழ்ச்சியாகப் பகைவர்களைத் தாக்குதற்குப் பழகும் தடிப் போர்க்கலையாகும். அடங்காப் பிடாரியாகத்திரிந்த முதலி

யார் அப்போது பக்கத்தில் வாழ்ந்திருந்த, “ஆட்பட்டா சண்முகசுந்தர முதலியார்” என்பவரிடத்திலே கோல்சுழற்றுதல், கத்தி சுழற்றுதல், குத்துச்சண்டை முதலியவைகளை நன்கு கற்றுத்தேறினார். மற்றவர்கட்குச் சிலம்பக்கலை பழக்கும் ஆசிரியராகவும் ஆனார். ஒருமுறை தம் ஆசிரியரை எதிர்த்துவந்த பறைக்கூட்டத்தினரைப் பார்த்து, ஆசிரியர் கட்டளைப்படி,

“ஒருகுத்துக் குத்த
உழக்கு இரத்தம் எடுக்க
நாலுபேர் சிரிக்க
நாலுமூலை நாலுசவுக்கம்
நடுவில்இருக்கும் செங்கான்கடை
ஓடுமாங் கிருட்டிணாங்குளம்
ஒளிக்குமாம் பறைச்சேரி
அமரவஸ்தாத் கொண்டித்தோப்பு
சண்முக சுந்தரப்பா தீன்.”

என்று சொல்லி முழங்கினார். இவருடைய ஆசிரியர் கூட்டத்தினர்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் எதிரிகள் புறங்காட்டியோடினர். முதலியார் எவரோடும் வலிய வம்பிழுப்பதில்லை. வந்த வம்பையும் விடுவதில்லை. இடையே நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளாலும் தாயார் வருந்திக் கேட்டுக்கொண்டபடியாலும் சிலம்ப வேலையை விட்டுவிட்டுக் கல்வி கற்கத்தொடங்கினார்.

## தமிழ்நூல் கற்றல்

முதலியாரின் தாயார் நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்தவர். முதலியார் தம்முடைய தாயிடமே நூல்களைக் கற்கத்தொடங்கினார். நிகண்டு, திருக்குறள், நாலடியார், நைடதம், கம்பராமாயணம் முதலிய நூல்களைப் பாடங்கேட்டார். தொண்டைமண்டலம் துளுவ

வேளாளர் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த அப்பன் செட்டியாரை அடுத்து இலக்கணம், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை முதலியவை கற்ருர். பூவை கலியாணசுந்தர முதலியாரிடம் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், திருக்கோவையார் முதலியவைகளைக் கற்ருர்.

சொற்பொழிவு கேட்டல்

அந்நாளில், வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், ஆறுமுக நாவலர், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், உரையாசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் ஆகியோர் எல்லாவிடங்களினும் சைவ சமயச் சொற்பொழிகள் செய்து சைவத்தொண்டு செய்து கொண்டிருந்தார்கள். முதலியார் சொற்பொழிவுகள் நடக்கும் இடங்களுக்கெல்லாஞ் சென்று சொற்பொழிவைக் கருத்துடன் கேட்கத்தொடங்கினர். அதன் பயனுக இவருடைய உள்ளத்தில் சைவநூல்களைக் கற்றல் வேண்டும் என்னும் விருப்பமும் உண்டாகியது. சிவாசாரியாரிடத்தில் தீட்சைபெற்றுச் சிவபூசை செய்தலை மேற்கொண்டதுடன் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் இடத்தில் சிவஞானபோதம் முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், துகளறுபோதம் முதலிய நூல்களைத் தம் கையால் எழுதினர்.

கச்சிக்கலம்பகம்

ஒரு நாள் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் பள்ளியில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. சென்னை இராசதானிக் கல்லூரிப் பேராசிரியர் பூண்டி அரங்கநாத

முதலியாரால் இயற்றப்பெற்ற கச்சிக்கலம்பகம் என்னும் நூலின் அரங்கேற்றம் நடந்துகொண்டிருந்தது. உயர் நீதிமன்ற நீதித்தலைவர்களும் வழக்கறிஞர்களும் புலவர் பெருமக்களுங் கூடியிருந்தனர். அரங்கேற்றம் நடைபெறுஞ் செய்தி இவருக்குத் தெரியாது. தற்செயலாக அவ்வழியே வந்த இவர் கூட்டங்கூடியிருப்பதன் காரணத்தை உசாவியறிந்தார். உள்ளே சென்று உட்கார்ந்தார். எல்லோருடைய கைகளினும் புத்தகம் இருப்பதைப் பார்த்தார். தாமும் ஒரு புத்தகம்பெற எண்ணினார்.

"மாகச்சிக் கனமொழியாள் முகையிலிட
இடப்பிதிரவாளிக் கொத்தை,
யேகச்சிக் கலகமதப் பயலடமாச்
சொரியவுடல் வாடினைந்தென்
பாகச்சிக் கலுற்றனள்நற் பூண்டிரங்க
நாததுங்கா அன்பாரும்பெட்
பாகச்சிக் கலம்பகமாந் தார்தந்தால்
உயிருறும்விற் பன்ன ரேறே."

என்னும் பாட்டை எழுதிக் கலம்பக ஆசிரியர் அரங்கநாதரிடத்தே அனுப்பினார். பாட்டைக்கண்ட பேராசிரியர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தாமே நேரில் வந்து புத்தகம் ஒன்றைக்கொடுத்தார். அவருடைய பாட்டைப் பாராட்டினார்.

சொற்பொழிவுகள் செய்தல்

சைவசமய உண்மைகளை எங்கும் பரப்ப எண்ணிய இவர் எல்லா இடங்களினும் சொற்பொழிவு செய்தார். இவருடைய சொற்பொழிவைக்கேட்டுப் பலர் சைவ சமய உண்மைகளை நன்ருக அறிந்துகொண்டார்கள். வேதாந்தச் சொற்பொழிவுகள் நடக்கும் இடங்கள் பலவற்றிற்குச் சென்று அங்கு சொற்போரிட்டார். சைவச் சொற்பொழிவு

கள் நடக்குமிடத்தே இவர் சென்றிருப்பாராயின் கூட்டம் அமைதியாக நடக்கும். இவர் சொற்பொழிவுகள் செய்த தோடு பலருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து அவர்களைப் புலவராகவுஞ் செய்தார். தனிப்பாடல்கள் பல செய்ததையன்றி இவர் நூல் செய்ததாகத் தெரிய வில்லை.

இறுதி

சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உழைத்திருந்த இவர் 1941-ஆம் ஆண்டு மேத்திங்கள் நான்காம் நாள் சதுரங்கபட்டினத்திலே தமது 83-ஆவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

---

## உ0. சண்முகம் பிள்ளை

தோற்றம்

செந்தமிழ்க் கடவுளாகிய முருகக் கடவுளிடத்திலே நீங்காத பேரன்பு கொண்டவராகிய வ. சு. சண்முகம் பிள்ளை 1880 ஆம் ஆண்டு ஆக்டோபர்த் திங்கள் மூன்றும் நாள் தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள மஞ்சக்குப் பத்திற் பிறந்தார். தந்தையார் பெயர் சுப்பிரமணியப்பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மாள்.

கல்வி

தந்தையராகிய சுப்பிரமணியப்பிள்ளை அரசாங்க அலுவல் பார்த்தமையின் பல ஊர்களுக்கு மாற்றப்பட்டார். ஆகவே இளைஞராக இருந்த சண்முகம் பிள்ளையும், மஞ்சக் குப்பம், நாமக்கல், கும்பகோணம், திருவாரூர், தஞ்சை, மதுரை, சென்னை ஆகிய இடங்களுக்குப்போய் ஆங்காங் கிருந்த பள்ளிகளில் கல்வி கற்றார். மெட்ரிகுலேஷன்

தேர்வு வரைக்கும் வடமொழி கற்றுத்தேர்ந்தார். மதுரையில் நடைபெற்ற இராமநாதபுரம் அரசி தமிழ்ப் பரீட்சை எனப்பெறும் தேர்வில் முதலாவதாகத் தேறினர். பிறகு கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்த் தேர்வில் முதலாவதாகத் தேறிச் சேதுபதிமெடலைப் பெற்றூர். சூரியநாராயண சாத்திரியாருடைய பன்னிரு மாணவர்களில் இவர் ஒருவர்.

### அலுவல்

இவர் பி. ஏ. பி. எல். தேர்வில் தேறிப் பட்டம் பெற்றூர். முதலில் உயர்தர நீதிமன்றத்தில் அலுவலில் அமர்ந்தார். பிறகு 1921-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரையில் திண்டிவனம், பழநி, திருநெல்வேலி, கும்பகோணம், உடுமலைப்பேட்டை, திருக்கோவலூர், மஞ்சக்குப்பம், திருத்தருப்பூண்டி, மதுரை, இராமநாதபுரம், திருவையாறு, திருவள்ளூர் ஆகிய இடங்களில் மாவட்ட முன்சீப்பாக வேலை பார்த்தார். பிறகு 1935-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுக் கூடலூர் மஞ்சக்குப்பத்தில் தங்கினர்.

### நற்பணிகள்

வேலையில் இருந்தபோதும், ஓய்வுபெற்ற பிறகும் இவர் தமது பொழுதை நல்ல வேலைகளிலே செலவிட்டார். சிவப்பதிகள் பலவற்றிற்குச் சென்று சிவபெருமானைப் போற்றி வழிபட்டார். பல சிவப்பதிகளின் புராணங்களை உரைநடையில் எழுதி அப்பதிகளின் வரலாற்றை எல்லோரும் அறிந்து கொள்ளுமாறு செய்தார். மாணவர்கட்குத் திருக்குறள், நாலடியார், நன்னூல் முதலிய நூல்களைப் பாடஞ் சொன்னர். பெரியவர்களுக்குப் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம், உலாக்கள் கலம்பகங்கள் முதலியவைகளைப் படித்துப் பொருள் விளக்கினர். தேவாரம் பெற்ற சிவப்பதிகளில் 257 பதிகட்குச் சென்று

இறைவனைக் கண்டு வழிபட்டுப் போற்றினார். தந்தையார் வெளியிட்ட நூல்களுக்குப் பெருந்துணையாக அமைந்து நின்றதுடன் தந்தையாருக்குப்பின் அந்நூல்களை இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிடுதலையும் மேற்கொண்டிருந்தார்.

இவர் தாமாகவே எழுதிவெளியிட்ட நூல்கள்.

நூல்கள்

1. திருவாடானைப் புராணம்
2. திருக்குடவாயிற் புராணம்
3. கண்டியூர்ப் புராணம்
4. கோகர்ணத் தலபுராணம்

என்பன இவருடைய உரைநடை நூல்கள். திருத்தணிகை முருகன்மீது "தணிகை நூற்றெட்டு வெண்பா வந்தாதி" என்னும் செய்யுள் நூலையும் இவர் பாடினார். உ. வே. சாமிநாதையரைக்கொண்டு திருக்கழுக்குன்றத்து உலாவை வெளிப்படுத்தினார்.

இறுதி

இவ்வாறு பல நற்பணிகளில் ஈடுபட்டிருந்த இவர் நல்ல நினைவுடனும் முருகப்பெருமானை மறவாப் பண்புடனும் 1941-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் மூன்றாம்நாள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை அடைந்தார்.

# உக. காழி. சிவ. கண்ணுச்சாமிப்பிள்ளை

பிறப்பு

சோழவளநாட்டிலே சீகாழிக்கு அண்மையில் உள்ள திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில், வழி வழிச் சைவவேளாளர் குலத்தில் 1897-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பத்தொன்பதாம் நாள் கண்ணுச்சாமிப்பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் சிவலோகம்பிள்ளை. தாயார் பெயர் கண்ணம்மாள். கண்ணுச்சாமிப்பிள்ளைக்கு உடன் பிறந்தவர்கள் நால்வர்.

கல்வி

கண்ணுச்சாமி சிறு குழந்தையாக இருந்தபோதே அவருடைய தந்தையார் வாணிகத்தை முன்னிட்டுச் சீகாழிக்குக் குடியேறினர். கண்ணுச்சாமியின் பள்ளிப்படிப்புச் சீகாழியில் தொடங்கியது. சீகாழியில் பத்தாவது வகுப்புவரையிற் படித்தார்; பிறகு திரிசிரகிரி என்னும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்கு எப். ஏ. வரையில் படித்தார்.

உருவுகண்டெள்ளாமை வேண்டும்

கண்ணுச்சாமி சிறுபிள்ளையாயிருக்கும்போது அகவைக்கேற்ற உடற்கட்டமையப் பெறாமல் பார்வைக்குச் சிறு பையனைப் போலக் காணப்பட்டார். அவரை எப். ஏ. வகுப்பு மாணவர் என்று கூறின், கேட்பவர் பொய்யென நினைத்து எள்ளி நகையாடுவர். "உருவுகண்டெள்ளாமை வேண்டும். உருள்பெருந்தேர்க், கச்சாணியன்னூர் உடைத்து" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ஆயினும் இவ்வுலகம் திருவள்ளுவர் கூறிய மறைமொழியை ஒரு பொருட்படுத்தாமல் காண்டலளவையைக்கொண்டே பெரும்

பாலான முடிவையும் செய்வதாக இருக்கிறது. ஒருநாள் கண்ணுச்சாமி பல புத்தகங்களைக் கையில் தாங்கியவாறு கடைத்தெருவில் பள்ளியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். சிறுபையன்போல் தோற்றமளிக்கும் இவர் பல புத்தகங்களுடன் செல்வதைப் பார்த்து முகமதிய இளைஞன் ஒருவன், "நீ எவ்வகுப்பில் படிக்கின்றாய்; இவ்வளவு புத்தகங்களைச் சுமந்துகொண்டு செல்லுகின்றாயே?" என்று கேட்டான். கண்ணுச்சாமி, "நான் எப். ஏ. வகுப்பில் படிக்கின்றேன்" என்று கூறினார். அம்முகமதிய இளைஞன் இவர் கூறியதை நம்பவில்லை. அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தான். "இந்தப் பையன் நான்காவதோ ஐந்தாவதோ படிக்கக்கூடும். எப். ஏ. படிப்பதாகப் பொய் சொல்லுகிறான்," என்று இயம்பிக்கொண்டே இவருடைய கையில் இருந்த புத்தகங்களைப் பறித்துப் பார்த்தான்! எல்லாப் புத்தகங்களும் எப். ஏ. வகுப்பிற்குரிய பாடப்புத்தகங்களாகவே இருந்தலைப் பார்த்தான். கண்ணுச்சாமி கூறியது மெய்ம்மைதான் என்று உணர்ந்தான், "நான் உன்னுடைய தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து போனேன். நான் கூறியது குறித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூறி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

### சென்னையில் கற்றல்

திருச்சியில் எப். ஏ. த் தேர்வில் வெற்றியடைந்த கண்ணுச்சாமி சென்னையை அடைந்து பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்தார். அப்பொழுது புதிதாக பி. ஏ. வகுப்பிற்குத் தமிழை விருப்பப்பாடமாக ஏற்படுத்தியிருந்தனர். ஆயினும் அத்தேர்விற்கு ஐந்தாறு பேரே தேர்வு எழுதச் சென்றனர். அவர்களில் இவர் ஒருவர்

தாம் தேர்வில் தேறினர். கல்லூரித் தலைவர் இவருக்குச் சங்கநூல்கள் பலவற்றைப் பரிசாக வழங்கினர்.

### திருமணம்

இவர் எப். ஏ. வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே சுந்தரம் என்னும் பெண்மணியை மணம் புரிந்தார். மக்களும் சிலர் தோன்றினர்.

### சென்னையில் அலுவல்

பி. ஏ. த் தேர்வில் தேர்ச்சியடைந்த இவர் அஞ்சல் இலாகாப் பிரிவுத் தலைவரின் காரியாலயத்தில் அலுவல் பார்க்கத்தொடங்கினர்.

### தமிழ்த்தொண்டு

அலுவலில் இருக்குங்காலத்திலேயே கண்ணுச்சாமி ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் அச்சிடும் நூல்களைத் திருத்துதல் அச்சுப் பிழை பார்த்தல் முதலிய தமிழ்ப் பணிகளையும் மேற்கொண்டு தமது இறுதி நாள் வரையிலும் செய்தார். இராமச்சந்திரபுரம் அன்புநிலையத்தினர் பதிப்பித்து வெளியிட்ட சுத்தானந்த பாரதியாருடைய நூல்களும் இவருடைய பார்வையில் வெளிவந்தன. 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் வெளியீட்டில் பல கட்டுரைகளும் கதைகளும் எழுதினர்.

### நாடகத்தொண்டு

கண்ணுச்சாமி நாடகக்கலை வளர்ச்சிக்கும் பணிபுரிந்தார். இவரும் இவருடைய நண்பர்கள் பலரும் நாடக சபை ஒன்றை ஏற்படுத்தினர். அதில் இவர்களே நாடக பாத்திரங்களாகக் கோலம் பூண்டு நடித்தனர். பல ஊர்

களுக்குஞ் சென்று செல்வர்களுடைய ஆதரவிலே நாடகம் நடித்தனர். நாடகத்தால் கிடைத்தபொருள்களை அறவழியிற் செலவிட்டனர். இறுதியில் திருவாங்கூர் அரசியார் முன்பும் ஒரு நாடகத்தை நடத்தி அரசியாருடைய பாராட்டுதலைப் பெற்றார்கள்.

இறுதி

செந்தமிழ் வளர்ச்சிக்கு நல்ல தொண்டு செய்திருந்த இவர் 1943-ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 8-ஆம் நாள் தமது நாற்பத்தாறும் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

நூல்கள்

1. விலங்குகளின் அறிவுக்கதைகள்
2. லூதர்பர்பாங்
3. போர்க்கருவிகளின் வரலாறு
4. பெருமாள் மாடு
5. நீதிநெறி விளக்கவுரை
6. வேலனும் அவரைக்கொடியும்
7. அரக்கர் மறவி
8. பிறந்தநாட் பரிசு
9. எலிக்குடும்பம்

முதலியன இவருடைய நூல்கள்.

---

## உஉ. பலராம ஐயர்

பிறப்பு

தென்னார்க்காடு மாவட்டத்திலேயுள்ள கடலூரில் 1875-ஆம் ஆண்டில் பலராம ஐயர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கோதண்டராம ஐயர். தாயார் பெயர் சிவகாமசுந்தரி.

கல்வி

பள்ளிப்படிப்பையும் கல்லூரியில் எப். ஏ. வரையுள்ள படிப்பையும் கடலூரில் செயின்ட்சோசப் கல்லூரியிற் படித்து முடித்தார். பிறகு சென்னை மாநகரையடைந்து கிறித்துவக் கல்லூரியில் பி. ஏ. த் தேர்வுக்குப் படிக்கத் தொடங்கினர். கணிதத்திலும் தமிழிலும் கூரிய அறிவு அமையப்பெற்று விளங்கினர்.

பரிதிமாற் கலைஞர்

அக்காலத்தில் அக்கல்லூரியில் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞன் என்று தமிழில் மொழிபெயர்த்த வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். சூரியநாராயண சாத்திரியார் தமிழைப் போதித்த திறம் பலராம ஐயருக்குத் தமிழார்வத்தை மிகுதிப்படுத்தியது. சாத்திரியாருடைய இயற்றமிழ் மாணவர்களில் இவரும் ஒருவராகித் தமிழை மிகுந்த முயற்சியுடன் கற்கத்தொடங்கினர். பெரும்பாலும் சாத்திரியாருடைய இல்லத்திலேயே தங்கிக் கருத்துடன் தமிழ் கற்றார். இளம்பருவத்திலேயே செய்யுள் பாடுந் திறனும் உரைநடையெழுதுந் திறனும் நன்றாக அமையப்பெற்றார். சொற்பொழி வாற்றலில் சிறந்த திறமையும் இவருக்கு உண்டாகியது. சாத்திரியாரிடம் பாடங்கேட்க இயலாதவர்கள் ஐயரிடம் பாடங்கேட்டலை அதற்கு ஒப்பாக எண்ணினர்கள்.

ஆசிரியத் தொழில்

ஐயருக்கு அகவை பதினெட்டு நடந்துகொண்டிருக்கும்போது தந்தையார் விண்ணுலகெய்தினர். குடும்பம் எளிய குடும்பமாகையால் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு ஐயருடைய தலையில் விழுந்தது. கல்லூரிப்

படிப்புப் பி. ஏ. ப்பட்டம் பெறுவதற்கு முன்பே முடிந்து விட்டது. கடலூர் நகர உயர்நிலைப்பள்ளியிலும், காரைக்குடி மீனாட்சிசுந்தரேசுவரர் வித்தியாசாலையிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழாசிரியராக அமர்ந்து பணியாற்றினார். 1911-ஆம் ஆண்டில் கள்ளிக்கோட்டைக்குச் சென்று வாணிபக்கல்வி, சுருக்கெழுத்து முதலிய கலைகளில் பட்டமும் நற்சான்றிதழும் பெற்றுவந்தார். 1935-ஆம் ஆண்டில் தமது அலுவலில் இருந்து ஓய்வு பெற்றார்.

### நல்லியல்புகள்

ஐயர் கம்பராமாயணச் சொற்பொழி வாற்றுதலில் வல்லவர். இவருடைய இராமாயணச் சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகவும் கேளாரும் வேட்பவும் விளங்கும். பள்ளியிற்பாடஞ் சொல்லுதலையன்றி இல்லத்திலும் மாணவர்பலர்க்கு ஓய்வு ஒழிவு இல்லாமல் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். சாத்திரியாருடைய கொள்கையையே ஐயரும் பின்பற்றினார். தம்மிடம் கல்வி கற்கும் மாணவரிடத்தில் இருந்து இவர் எத்தகைய கைம்மாற்றினையும் பெறமாட்டார்.

### எழுதிய நூல்கள்

இவர் அலுவலில் இருந்த காலத்திலும் ஓய்வு பெற்றிருந்த காலத்திலும் நூல்கள் பல எழுதினார்.

1. தசரதன் தவறு
2. வல்லீ பரிணயம்
3. மத்தவிலாசப் பிரகசனம்
4. சூளாமணி உரைநடை
5. சிலப்பதிகாரக்கதை
6. ஆத்திசூடி நீதிக்கதைகள்

7. தசகுமாரசரித்திரம்
8. யௌவனும்பிகை பிள்ளைத்தமிழ்
9. தாமரை நாண்மலர்

*இறுதி*

இவர் தமது அறுபத்தெட்டாவது அகவையில் 1943-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

---

## உரு. சலசலோசனர்

*பிறப்பு*

சென்னை மாநகரில் சலசலோசனர் பிறந்தார். தந்தையார் பெயர் இராமசாமிச் செட்டியார். தாயார் பெயர் பூங்காவனத்தம்மையார். தந்தையாராகிய இராமசாமிச் செட்டியார் செய்யுள் செய்யும் திறம் அமையப்பெற்றவர். விநாயகர் பதிகம், திருஎவ்வுளூர்க்கலம்பகம் முதலிய நூல்கள் இயற்றியவர்.

*கல்வி*

சலசலோசனர் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டுக் கிறித்துவக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்கத்தொடங்கினர். அக்காலத்தில் உவல்லியம் மில்லர்த்துரை என்பவர் கல்லூரித் தலைவராக இருந்தார். பரிதிமாற் கலைஞர் சூரியநாராயண சாத்திரியார் தமிழ்ப்பேராசிரியராக விளங்கினர். இவர்கள் இருவரிடத்தினும் ஆங்கிலத்தையும் தமிழையும் பாங்குறக் கற்றுணர்ந்தார் சலசலோசனர். "மகனறிவு தந்தையறிவு" என்பர் பெரியோர். பாவாணரின் திருமகனுகப் பிறந்த சலசலோசனர் தாமும் பாப் பாடுந் தன்மையை இளமைக்காலத்திலேயே பெற்றார். இவருடைய பாடல்கள் இனிமையும் எளிமையும் திட்பநுட்பமுஞ்

செறிந்து விளங்கின. பாவின் சிறப்பைப் பார்த்து எல்லோரும் புகழ்ந்து கொண்டாடினார்கள். உடன்பயில் மாணவரும் ஒருசாலை மாணவரும் உளம் உவந்து போற்றினர். கல்லூரித் தேர்வுகளில் முன்மையாகத் தேறுதலும் பரிசுகள் பெறுதலும் இவருக்கு வழக்கமாக இருந்தன.

### நூல் எழுதுதல்

மாணவராக விளங்கியிருந்த இவர் பரிதிமாற் கலைஞரிடம் கல்விகற்ற பண்பினாலும் குடிப்பிறப்பினாலும் நூல்யாக்கும் செயலிலும் ஈடுபட்டார். திருஎவ்வுளூர் ஆனைமுகக் கடவுள்மீது செந்தமிழ்ப்பதிகம் ஒன்றுபாடிப் போற்றினார். உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் புலவராகிய செகப்பிரியர் செய்த நாடகங்களுள் தலைசிறந்து விளங்குவது சிம்பலைன் (Cymbeline) என்பது. அதற்குச் சரசாங்கி எனப்பெயர் கொடுத்துத் தமிழில் மொழி பெயர்த்து நூலாகச் செய்தார். மேலும் தாம்செய்த நாடகநூலைத் தாமே நடித்துக் காட்டவுந் தொடங்கினார். இராவ்பகதூர் சம்பந்த முதலியாருடன் சேர்ந்து நாடகம் தொடங்கினார். தாமே சரசாங்கியாகக் கோலம் பூண்டு நடித்தார். இவருடைய நடிப்புத்திறனைக் கண்டவர்கள் வியப்படைந்து போற்றினார்கள்.

### நூல் நயம்

இவருடைய நூல் எழுதப்பட்டவுடனே அஃதாவது ஐம்பதாண்டுகட்கு முன்னர் வெளியாயிற்று. இந்நூலைக் கல்லூரித் தலைவர் உவில்லியம் மில்லர்த்துரைக்கே உரிமையாக்கி வெளியிட்டார். நூல் சிறந்த முறையில் அமைந்து விளங்கியது. நூலைப் பார்வையிட்ட அறிஞர்கள் சலசலோசனரைப் பாராட்டிப் புகழுரை புகன்றார்கள். மனோன் மணீய ஆசிரியராகிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கிறித்

தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பரிதிமாற் கலைஞர், கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் முதலியோர் புகழுரை புகன்றவர்களுட் சிலராவர்.

"கைகேசி மனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகில்
ஐயாவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்.

நடுவனெனப் பேர்கொண்டு நட்டாரைப் பிரித்திடுவாய்
படுதொழிலைக் கைக்கொண்ட பாதகனே கொடுங்கூற்றே
அடுதொழிலைக் கைக்கொள்ளா அருமைபெருஞ் சுந்தரனுக்(கு)
இடர்செய்தாய் நன்றோஈ தியம்பிடுவாய் இயம்பிடுவாய்.

என்பன சலசலோசனர் சரசாங்கியில் இயற்றிய செய்யுட்கள். உரைநடையும் பாட்டுமாக விரவிய இந்நூல் படித்தற்கும் நடித்தற்கும் ஏற்றமுறையில் அமைந்துள்ளது.

இறுதி

கூற்றுவன் அறிவிலாரை விரும்பான். அறிவுடையாரையே மிகுதியும் விரும்புவான். அறிஞர்கள் கரும்பின் சாற்றைப்போன்றவர்கள். அறிவிலிகளோ கரும்பின் சக்கையைப் போன்றவர்கள் என்பது அவனுடைய முடிவு. வாழ்வின் நடுவிலே அவன் வந்து புகுந்துவிடுவான். இதனைக் கருதியே பெரியோர்கள் கூற்றுவனுக்கு **நடுவன்** என்னும் பெயரையும் நவின்றுள்ளார்கள். கலைத்தலைவன் (எம்.ஏ) என்னும் பட்டத்தைப் பெற்றுச் சிறந்து விளங்கிய சலசலோசனர், தமது இருபத்தொன்றாவது அகவையிலேயே கூற்றுவனுக்கு இரையாகி முடிந்துபோனார். "நனிபேதையே நயனில் கூற்றம்."

# உசு. பண்டித வேங்கடசாமி நாட்டார்

## தோற்றம்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாறு என்னுஞ் சிவப்பதிக்கு அண்மையில் உள்ள நடுக்காவேரி என்னும் ஊரில் வேங்கடசாமி நாட்டார் 1884-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் நான்காம் நாள் பிறந்தார். நாட்டாருடைய தந்தையார் பெயர் முத்துச்சாமி நாட்டார்.

## கல்வி

நாட்டார் ஆரும் அகவையில் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கத்தொடங்கினர். சிலகாலம் அப் பள்ளியில் கற்ற பின்னர் அவ்வூரில் இருந்த தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். நாட்டாருடைய தந்தை யாகிய முத்துச்சாமி நாட்டாரும், அவருடைய இளவலாகிய சொக்கலிங்க நாட்டாரும் தமிழறிஞர்களாக இருந்தனர். முத்துச்சாமி நாட்டார் இலக்கணப் பிழையில்லாமல் திருத்தமாகப் பேசும் சீரிய இயல்பு வாய்ந்தவர். அந்த நற்பழக்கம் வேங்கடசாமியையுந் தொடர்ந்தது. திண்ணைப் பள்ளி மாணவராக இருந்தகாலம் முதல்கொண்டே பிழை யறப்பேசி வந்தார் வேங்கடசாமி.

நாட்டார் தம் தந்தையாரிடமும் சிறிய தந்தை யாரிடமும் சிறிய தமிழ் நூல்களைப் பாடங்கேட்டுக் கல்வி யறிவை நாளும் பெருக்கிக்கொண்டு வந்தார். இம்முறை யில் நிகண்டு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களை முறையாகக் கற்ருர். ஓய்வு நேரங்களில் தோட்ட வேலை முதலிய வீட்டு வேலைகளையும் செய்தார்.

சிறிய நூல்களைப் படித்து முடித்தபின் அந்தாதி கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, தூது முதலிய நூல்

களைத் தந்தையாரிடமே பாடங்கேட்டார். பல நூல்களைத் தாமாகவும் ஓதி உணரத்தொடங்கினார். நன்னூலைத் தந்தையாரிடமே கற்றறிந்தார்.

நாட்டார் எப்பொழுதும் நூல்களைப் படித்தலிலேயே பொழுது போக்குபவராகவும், வீண் பேச்சுப் பேசுதல் விளையாடுதல் முதலிய பயனற்ற தொழில்களில் ஈடுபடாதவராகவும், இருந்தபடியால் அவருடைய பெயர் நடுக் காவேரியில் சிறந்து விளங்கியது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

அந்நாளில் மதுரைமாநகரில் பாண்டித் துரைத் தேவர் என்னும் ஆண்டகையினால் மதுரைத் தமிழ்ச் சங்கம் என்னும் பெயருடன் சங்கம் ஒன்று ஏற்படுத்தப் பெற்றது. அந்தச் சங்கத்தின் சார்பாகப் புலவர் பள்ளி யொன்றும் அமைக்கப்பட்டது. புலவர் பள்ளியில் பிரவேச வகுப்புப், பாலபண்டித வகுப்புப், பண்டித வகுப்பு என மூன்று பகுப்புகள் ஏற்படுத்தப்பெற்றன. மேற்படி வகுப்புக்களில் கல்வி கற்றுத் தேர்வு எழுதுபவர் கட்குப் பட்டமும் பரிசும் வழங்கப்பெற்றன. தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்பதையே சிறந்தநோக்க மாகக்கொண்ட அச்சங்கம் அங்கு கல்வி கற்பவர்களே யல்லாமல் எங்கு கல்வி கற்பவர்களும் அங்கு வந்து தேர்விற் கலந்து வினாத்தாள்கட்கு விடையெழுதிப் பட்டமும் பரிசும் பெறலாம் எனத் திட்டமாகத்தெரியப் படுத்தியது. இச்செய்தியை நாட்டார் நண்பர் ஒருவர் மூல மாக அறிந்தார். தாமும் தேர்வுக்குச் சென்று எழுதிப் பட்டம் பெறவேண்டுமென எண்ணினார். ஆனால் மதுரைக்குச் சென்று அங்கு கல்லூரியில் சேர்ந்து படிப் பதற்கு எண்ணவில்லை. வீட்டில் இருந்தவாறே படித்து

முடித்துத் தேர்வுக்கு மட்டும் சென்று எழுதுவதென முடிவு செய்தார். மூன்று வகுப்புக்கட்கும் பல நூல்கள் பாடமாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வகுப்பு நூல்களும் ஆசிரியரிடத்தில் இரண்டாண்டுகள் கற்றுணரக் கூடிய அளவுக்கு அமைக்கப்பட்டிருந்தன.

தனிப்பட்ட முறை

கல்லூரியிற் சேர்ந்து படிக்காதவர்களும் தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதிப் பட்டம் பெறலாம் என்று வழி வகுக்கப்பட்டிருந்தது நாட்டாருக்கு மிக உதவியாக இருந்தது. தேர்விற்குப் பத்துத் திங்கள் இருக்கும்போது தான் நாட்டாருக்குச் செய்தி தெரிந்தது. பிரவேச வகுப்பு நூல்களைப் பத்துத்திங்களில் படித்துமுடித்துத் தேர்வு எழுதுவதென்று முடிவுசெய்தார். இரண்டாண்டு கள் ஆசிரியரிடம் வருந்திக் கற்றுணரவேண்டிய நூல்களை யெல்லாம் பத்துத் திங்களிற்படித்து முடித்துத் தேர்வுக்குச் சென்று எழுதினர். பிரவேச வகுப்பில் (முதல் தேர்வில்) இரண்டாம் மாணவராக வெற்றிபெற்றார். பரிசும் கிடைத்தது.

பாலபண்டிதர்

பிரவேச வகுப்பிற்கு அடுத்த வகுப்புப் பாலபண்டிதர் வகுப்பு. அவ்வகுப்புக்குரிய நூல்களையும் நாட்டார் ஒரே ஆண்டில் படித்துமுடிக்க எண்ணினர். அவ்வாறே படித்து முடித்து 1906-ஆம் ஆண்டில் பாலபண்டிதத் தேர்வில் எழுதினர். குறித்தகாலத்தில் தேர்வின் முடிவு வெளியா கியது. பாலபண்டிதத் தேர்விலும் நாட்டார் முதல் வகுப்பில் தேறினர். முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றவர் நாட்டார் ஒருவரே; பரிசும் கிடைத்தது.

பண்டிதர்

இரண்டு தேர்வுகளினும் வெற்றிபெற்ற நாட்டார் மூன்றாவது தேர்வாகிய பண்டித வகுப்புத் தேர்விற்கும் ஓராண்டில் படித்துமுடித்துச் சென்றார். நுண்மாணுழைபுல மிக்க நாட்டாருக்கு இத்தேர்வும் எளிதாகவே இருந்தது. நாட்டார் இத்தேர்விலும் முதன்மையாகத்தேறித் தங்கத் தோடாவைப் பரிசாகப்பெற்றார். அதுமுதல் நாட்டாருடைய பெயர், பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் என வழங்கத்தொடங்கியது. நாட்டார் தங்கத்தோடா பரிசுபெற்ற செய்தி நாள்தாள்களிலெல்லாம் வெளிவந்தமையின் நாட்டாரைத் தமிழுலகம் நன்றாக அறிந்து கொண்டது. பழம்பெருந்தமிழ் நூல்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம் புறநானூறு முதலிய நூல்களைத் தாமே கற்றுணர்ந்த அவருக்கு ஏற்பட்ட சிறப்பைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

ஆசிரியத் தொழில்

நாட்டார் பண்டிதப்பட்டம்பெற்று மேலும் பல நூல்களை ஆராய்ச்சி செய்துகொண்டு தமது ஊரில் இருந்தார். அப்பொழுது திருச்சிராப்பள்ளியில் ஹீபர் கல்லூரியில் பிச்சை இப்ராகிம் புலவர் என்பவர் தமிழ்ப் புலவராக அமர்ந்திருந்தார். அவர் பெருஞ்செல்வர் தமிழில் நல்ல அறிஞர். அவர் ஊதியத்தைநாடித் தொழிலை மேற்கொள்ளவில்லை. கல்லூரித் தலைவருடைய வேண்டுகோளின் மீதும் தமிழ் வளர்ச்சியைக் கருதியுமே அப்பணியை மேற்கொண்டிருந்தார். அவர் 1908-ஆம் ஆண்டில் சிலதிங்கள்கள் விடுமுறை பெறநேர்ந்தது. அவர் தமது இடத்திற்குத் தக்கார் ஒருவரைத் தேடினார். நாட்டார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தேர்வில் முதன்மையாகத் தேறியதை அறிந்திருந்த அவர் நாட்டாரைத் தம்மிடம் வரவழைத்தார். தாம்

திரும்பி வரும் வரையிலும் அவரை அப்பணியில் அமர்த்திச் சென்றார்.

### கற்பிக்கும் திறன்

தாம் கற்ற கல்வியைப் பிறருக்குப் போதிக்கும் வகையில் நாட்டார் திறமை மிகுந்தவராக இருந்தார். நாட்டாருடைய திருத்தமான தமிழ்ப் பேச்சும், போதனைத் திறமும் மாணவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. நாட்டாரிடம் நன்மதிப்புக்காட்டி அமைதியுடன் பாடங்கேட்டனர். அவர்மீது நல்லன்பும் பற்றுங் கொண்டனர்.

### சொற்பொழிவுகள்

திருச்சிராப்பள்ளியில் இருந்த சங்கங்களிலும் அவைகளிலும் நாட்டார் சொற்பொழிவுகள் பல செய்தார். சைவ சமய நூல்களையும் தேவார திருவாசகம் முதலியவைகளையும் நாட்டார் நன்கு ஆராய்ந்திருந்தமையின் அவருடைய சொற்பொழிவு மிகச் சிறந்ததாக இருந்தது. இதனால் பொதுமக்களும் நாட்டாரை நன்குணர்ந்து கொண்டனர்.

### உயர்நிலைப்பள்ளியில் வேலை

பிச்சை இப்ராகிம் வேலைக்குத் திரும்பிய பிறகு நாட்டார் ஊருக்கு மீண்டார். ஆனால் அவருக்கு வேறோர் இடத்தில வேலை கிடைத்தது. 1909-ஆம் ஆண்டில் கோயமபுத்தூர் செயின்ட் மிக்கோல் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்கும் அவருக்குப் பேரும் புகழும் உண்டாயின.

### ஹீபர் கல்லூரியில் 24-ஆண்டுகள்

1910-ஆம் ஆண்டில் பிச்சை இப்ராகிம் புலவர் ஹீபர் கல்லூரியில் இருந்து விலகினார். அவருக்குப்பின் அவ்

வேலை நாட்டாருக்குக் கிடைத்தது. மாணவர்களும் மற்றவர்களும் அதுகுறித்துப் பெருமகிழ்ச்சியடைந்தனர். 1910-முதல் 1933-ஆம் ஆண்டு சூன்திங்கள் முடிய இருபத்து நான்கு ஆண்டுகள் அக்கல்லூரியில் நாட்டார் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்திருந்தார். இவ்வாறு ஒரே இடத்தில் ஒரே கல்லூரியில் நிலையாக வேலை பார்த்தவர்கள் மிகச் சிலரே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

நாட்டார் ஹீபர் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பின் நீண்டநாள் ஓய்வாக இருக்கவில்லை. மறுதிங்களே அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். நாட்டாருடைய புலமைக்குப் புலவர்களைத் தோற்றுவிக்கும் அக்கல்லூரி நல்லிடமாக அமைந்தது. ஆண்டமர்ந்து, ஏழு ஆண்டுகள் வரை பணி புரிந்தார். பிறகு 1940-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுத் தஞ்சை நகரையடைந்தார்.

குணநலன்கள்

நாட்டார் உண்மையான தமிழ்ப் புலவர். நாட்டில் எத்தனையோ போலிப் புலவர்களைப் பார்க்கிறோம். அத்தகைய போலிப் புலவர்கட்கெல்லாம் அரியேறாக விளங்கினார் நாட்டார். தெய்வ அன்பு நாட்டாரிடம் மிகுதியாகக் குடிகொண்டிருந்தது. அடக்கமும் பொறுமையும் ஒருங்கே அமையப்பெற்றவர். நாட்டார் பாடம் நடத்தும் வகுப்பில் அமைதி குடிகொண்டிருக்கும். மாணவர்கள் நாட்டாருடைய அன்பில்கட்டுண்டு அமர்ந்திருப்பர். ஒன்பான் வகைச் சுவைப் பாடல்களையும் நாட்டார் படித்துரைக்கும்போது கேட்போர் அவ்வச் சுவையின் பாற்பட்டு விளங்குவர். நாட்டார் பாட்டைப் பதம் பிரித்துப்

படித்துக் காட்டும்போதே மாணவர்கள் பொருளறிந்து கொள்வார்கள்.

### உடன்பழகிய புலவர்கள்

நாட்டார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமர்ந்து பணிபுரியும்போது, ரா. இராகவையங்கார், பண்டிதமணி—மு. கதிரேசச் செட்டியார், ச. சோமசுந்தர பாரதியார், சர்க்கரை—இராமசாமிப் புலவர், சோழவந்தான்—கந்தசாமியார் முதலியோர் அங்கிருந்து பணிபுரிந்துகொண்டிருந்தனர். ஆகவே நாட்டார்க்கு மேற்கூறிய புலவர் பெருமக்களுடைய கூட்டுறவும் இருந்தது.

### தொடர்புகள்

மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலிய சங்கங்களில் நாட்டார் கலந்துகொண்டுபொதுநலப் பணிகள் பலவற்றில் ஈடுபட்டிருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் 'தமிழ்ப்பொழி'லிலும் அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எழுதினார். சைவ சித்தாந்த மகாசமாசத்துச் சித்தாந்தப் பத்திரிகையிலும் பல கட்டுரைகள் எழுதினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்லூரிப் பாடத்திட்டங்களை வகுக்கவும் பாடநூல்களை அமைக்கவும் பலர் சேர்ந்த அவை உண்டு. அவற்றுள் தமிழ் அவை ஒன்று. அதில் கல்லூரித் தமிழாசிரியர் பலரும் இடம் பெற்றிருப்பர். அக்கூட்டத்தில் நம் நாட்டாரும் பல ஆண்டுகள் இடம் பெற்றிருந்தார். தேர்வுகள் பலவற்றிற்குத் தேர்வாளராக இருந்தார்.

### நாட்டார் எழுதிய நூல்கள்

ஆசிரியத்தொழிலில் வாணாள் முழுவதும் அமர்ந்திருந்த நாட்டார் நூல்களும் எழுதித் தமது பெயரைத் தமிழ் உலகத்தில் நிலைநாட்டினார்.

1. ஆத்திசூடி உரை
2. கொன்றைவேந்தன் உரை
3. உலக நீதி உரை
4. நறுந்தொகை உரை
5. மூதுரை உரை
6. நல்வழி உரை
7. நன்னெறி உரை
8. கார் நாற்பது உரை
9. திருவிளையாடற் புராணம் உரை
10. இன்னா நாற்பது உரை
11. களவழி நாற்பது உரை
12. சிலப்பதிகார உரை
13. மணிமேகலை உரை
14. அகநானூறு உரை
15. கண்ணகி வரலாறும் கற்புமாண்பும்
16. நக்கீரர்
17. பரணர்
18. கள்ளர் சரித்திரம்
19. சோழர் சரித்திரம்

முதலியன நாட்டாருடைய நூல்களாகும்.

இறுதி

வேலையில் இருந்து ஓய்வுபெற்ற பின் நாட்டார் தமது பெயரால் நூல் வெளியீட்டுக் கழகம் ஒன்றை அமைத்து நடத்தத்தொடங்கினர். அதன் வாயிலாகவும் நூல்கள் பல வெளிவந்தன. நாட்டாருக்கு ஆண்மகன் ஒருவனும் பெண்மக்கள் இருவரும் மக்கட்பேருக அமைந்தனர். பெண்களில் பார்வதியம்மை என்னும் மூத்தபெண்ணும் புலவர் கல்வி கற்று வித்துவான் என்னும் பட்டமும் பெற்றுச் சிறப்படைந்தார். அந்த அம்மையாரும் நூல்கள் எழுதும் சால்பு அமையப்பெற்றவர். செந்தமிழ்த் தாயின் அருந்தவமகனுகத் தோன்றிய நாட்டார் இவ்வாறு

தமிழ்த்தொண்டு செய்து சீர்த்திபெற்றிருக்கும் நாளில், 1944-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமது அறுபதாவது அகவையிலே இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

---

## உரு. சற்குணர்

### பிறப்பு

சற்குணர் 1877-ஆம் ஆண்டு மேத்திங்கள் 7-ஆம் நாள் சென்னைமாநகரிலே பிறந்தார். இவருடைய முன்னோர்கள் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கு வந்தவர்களாம். சற்குணருடைய தந்தையார் பெயர் **சாமுவேல் சற்குணர்.** தாயார் பெயர் ஞானப்பூஅம்மாள். சற்குணருடைய முழுப் பெயர் தருமராச சற்குணர் என்பது.

### கல்வி

சற்குணர் தம் தந்தையாரிடத்தே கல்விகற்கத்தொடங்கினர். சி. எஸ். எம். உயர்தரக் கலாசாலையில் புகுமுக வகுப்புத் தேறியபின் கிறித்தவக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்றார். ஆங்கிலக் கல்வி கற்கும்போதே தமிழ் நூல்களையும் பாடங்கேட்கத் தொடங்கினர். அப்பொழுது கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியர்களாயிருந்தவர்கள், கோபாலாச்சாரியார், மகாதேவ முதலியார், மறைமலையடிகள், வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் ஆகியோர் இவர்கள் சற்குணருடைய சிறந்த தமிழறிவைச் சிறப்பாக மதித்துப் போற்றினர்கள்; கலாசாலைக் கல்வியோடு தமிழ்க் கல்வியையும் இவர் தொடர்ந்து கற்றார். தொல்காப்பிய உரிஇயல் சூத்திரங்களை அப்பொழுதே நெட்டுருச் செய்துவிட்டார். பி. ஏ. வகுப்பில், கல்லூரியில் தமிழில் முதன்மையாகத் தேறியதற்காகச் சேதுபதியின் பொற்

பதக்கத்தைப் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சையிலும் முதற் பரிசு பெற்றார்.

ஆசிரியர்

ஆசிரியராகவேண்டும் என்னும் அவா இவருக்கு மிகுதியாக இருந்தது. 1905-ஆம் ஆண்டில் சென்னை ஹாரிஸ் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக அமர்ந்து ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் தொண்டுசெய்தார். 1914-ஆம் ஆண்டில் சென்னைத் திருப்பவுற் கலாசாலையைவிட்டுக், கா. நமச்சிவாய முதலியார் நீங்கியபோது இவர் மேற்படி கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்தார். இவர் ஆசிரியரான பின்பு மாணவர்களுக்கு இலக்கியச் சுவையும் பாட்டெழுதும் திறமையும் ஏற்பட்டன. நாட்டுப்பற்றையும் மொழிப் பற்றையும் இவர் மாணவர்களுக்கு நன்றாக ஊட்டினார். 1928-ஆம் ஆண்டில் மெஸ்டன் துறையின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அமர்ந்தார். அங்கு இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் ஒவ்வோராண்டிலும் 95%க்கு மேல் மாணவர்கள் தமிழில் தேறினார்கள்.

ஈடுபாடு

சங்க நூல்களிலே இவருக்கு மிகுந்த விருப்பம் உண்டு. புறநானூறும், சிந்தாமணியும் கலித்தொகையும் இவருக்கு மிகவும் பிடித்தமான நூல்கள். உரைநடை நூல்களைவிடச் செய்யுள் நூல்களை மிகுதியாக விரும்பிக் கற்பார்.

எழுதிய நூல்கள்

இவர் எழுதிய நூல்கள் இரண்டு. ஒன்றின் பெயர் இலக்கண ஆக்கம். மற்றொன்று தமிழ்ப்பாடப் புத்தகம்.

குண நலன்கள்

யாவரிடத்திலும் இவருக்கு மிகுந்த அன்புண்டு. நண்பர்களிடத்தில் உள்ள குற்றங் குறைகளை இவர் அறவே

எண்ணிப்பார்க்கமாட்டார். கல்வி கற்க ஊக்குவதில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். தாம்கண்ட உண்மையை எந்த இடத்திலும் அஞ்சாது எடுத்துரைப்பார். தம் தந்தையாரிடத்தில் இவருக்கு மிகுந்த அன்புண்டு. கைம்மாறு கருதாது பல மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்லி அவர்களைப் புலவர்களாக்கினார். தம் பெயருக்கேற்பக் குணம் அமையப் பெற்றவர்களில் இவர் ஒருவர். இவர் ஆங்கிலப்பட்டம் பெற்றிருந்தபோதிலும் தமிழன்னையிடத்திலேதான் மிகுந்த விருப்பமும் பற்றுங் கொண்டிருந்தார். உள்ளொன்றுவைத்து வெளியில் ஒன்று பேசமாட்டார். எக்காரணத்தை முன்னிட்டும் ஒருவருடைய மனம் புண்படுமாறு மொழிகளைக் கூறமாட்டார். எப்பொழுதும் கையில் புத்தகத்தோடுதான் காட்சியளிப்பார்.

---

## உசு. கா. சுப்பிரமணிய பிள்ளை

தோற்றம்

தென்பாண்டிநாட்டிலே திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில் 1889-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் சுப்பிரமணிய பிள்ளை தோன்றினார். சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையார் பெயர் **காந்திமதிநாத பிள்ளை**. தாயார் பெயர் மீனாட்சியம்மையார். காந்திமதிநாத பிள்ளை திருநெல்வேலியில் சைவ வேளாள மரபில் முதன் முதலாகப் பி. ஏ. (இளங்கலைஞர்) என்னும் பட்டம் பெற்றமையின் பி. ஏப் பிள்ளை எனவும் அழைக்கப்பெற்றார்.

**கல்வி**

சுப்பிரமணிய பிள்ளை தமது ஐந்தாம் ஆண்டிலே திண்ணைப்பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினார். முதல்

மூன்று வகுப்புக்கள் வரையில் அப்பள்ளியில் படித்தார். தந்தையார் இளமையிலேயே நிகண்டினைக் கற்பித்தலோடு ஆங்கிலமும் கற்பித்தார். பிறகு கிறித்துவ சங்கத்தாருடைய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். இவருக்கு நினைவாற்றல் நன்றாக அமைந்திருந்தமையின் எல்லா வகுப்புக்களினும் முதல்வராகத் திகழ்ந்தார். அதனால் சம்பளம் இல்லாமல் கல்வி கற்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. 1906-ஆம் ஆண்டில் மெட்ரிக் தேர்வில் தேறினர். 1908-ல் எப். ஏயில் தேறினர். பிறகு சென்னைக்குச் சென்று மாகாணக் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு நன்றாகக் கல்வி கற்று 1910-ஆம் ஆண்டில் பி. ஏ., வகுப்பில் முதன்மையாகத் தேறி பி. ஏ. பட்டம் பெற்றார். மேலுங் கல்வியைக் கருத்துடன் கற்று 1913, 1914-ஆம் ஆண்டுகளில் எம். ஏ. த்தேர்விலும் தேறினர்.

சட்டப் பேரறிஞர்

பின் இவர் சட்டப் பேரறிஞர் (எம். எல்) என்னும் பட்டம்பெற விழைந்தார். அதற்குரிய நூல்களைச் சுருங்கிய காலஎல்லையிற் கற்று 1917-ஆம் ஆண்டில் எம். எல். என்னும் பட்டத்தையும் பெற்றார். அதுமுதல் இவருடைய பெயர் எம். எல். பிள்ளை என்று வழங்கியது.

திருமணம்

கல்வியறிவிற் சிறந்து விளங்கிய சுப்பிரமணிய பிள்ளைக்குப் பலர் பெண்கொடுக்க முன்வந்தனர். இறுதியில் நெல்லைநாயகம் பிள்ளை என்பவருடைய திருமகளான பிரமு அம்மாள் என்னும் மங்கையைத் திருமணம் புரிந்தார்.

சட்டக்கல்லூரியில் வேலை

நேர்மையான வழியில் வாழ்க்கையைச் செலுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கமாக இருந்தது.

ஆசிரியத்தொழில் சிறந்தது என்று எண்ணினர். சட்டக் கல்லூரியில் வேலை பெறுதற்கு முயன்றார். அவ்வேலை இவருக்குக் கிடைத்தது 1919-ஆம் ஆண்டுமுதல் 1927 ஆம் ஆண்டுவரையில் சட்டக்கல்லூரியில் ஆசிரியராக விளங்கினார்.

தாகூர் சட்ட விரிவுரையாளர்

இரவீந்திரநாத தாகூர் என்பவர் "உலகப் பெருங் கவி" என்று புகழ்பெற்றவர். "நோபல் பரிசு" என்னும் பரிசினைப்பெற்றவர். அவருடைய புகழ் உலகம் எங்கும் பரவியுள்ளது. அவருடைய குடும்பப்பெயரால் கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலே "தாகூர் சட்ட விரிவுரையாளர்" என்னும் பெயருடைய பரிசு ஒன்று அமைந்திருக்கிறது. சட்டக்கலையைப் பற்றி மூன்று பொருள்கள் கொடுக்கப் பெறும். அவைகளுள் ஏதாவது ஒன்றைப்பற்றி பன்னிரண்டு சொற்பொழிவுகள் செய்தல்வேண்டும். அப் பரிசுப்போட்டியிற் கலந்துகொள்பவர்கள் தங்களுடைய விரிவுரைகளின் சுருக்கத்தை எழுதிக் கல்கத்தா பல்கலைக் கழகத்திற்கு அனுப்புதல்வேண்டும். அச் சுருக்கத்தை வைத்துக்கொண்டு விரிவுரையாளர்களுடைய தகுதி அளவிடப்பெறும். மிகச் சிறந்ததாக எண்ணப்பெறும் சுருக்கத்தை எழுதியவரைத் தாகூர் சட்ட விரிவுரையாளராகக் குறிப்பிட்டு ஆணை அனுப்புவார்கள். தேர்ந்தெடுக்கப் பெற்றவர் கல்கத்தாவுக்குச்சென்று தமது பன்னிரண்டு விரிவுரைகளையும் நிகழ்த்துதல்வேண்டும். பல்கலைக் கழகம் விரிவுரையாளருடைய எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளும். பேரவை ஒன்று கூட்டி அப்பேரவையில் பதினாயிரம் வெண்பொற் காசுகளை நன்கொடையாக வழங்கும்.

1920-ஆம் ஆண்டில் நம் சுப்பிரமணிய பிள்ளை இப் பரிசுப்போட்டியிற் கலந்து கொண்டார். இந்தியாவில் இருந்த சட்டப் பேரறிஞர்கள் பலரும் அதிற் கலந்து கொண்டனர். சுப்பிரமணிய பிள்ளையோடு போட்டியிட்ட வர்களில் சென்னை உயர்நீதி மன்றத்து நீதித்தலைவராக இருந்த சி. மாதவன் நாயர் என்பவரும் ஒருவர்.

அவ்வாண்டில் கொடுக்கப்பெற்ற மூன்று பொருள் களில் மிகக் கடுமையானது, "குற்றங்களின் நெறிமுறைகள்" என்பது. சுப்பிரமணிய பிள்ளை இதனையே தமது விரி வுரைப்பொருளாகத் தெரிந்தெடுத்தார். சொற்பொழிவின் சுருக்கத்தை எழுதிக் கல்கத்தாப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைத்தார். கழகத்தினர் தமக்குவந்த சுருக்கங் கள் எல்லாவற்றையும் ஆராய்ந்துபார்த்து, சுப்பிரமணியப் பிள்ளையின் சுருக்கத்தைச் சிறந்தது என்று தேர்ந்தெடுத் தார்கள். இவரை அவ்வாண்டுக்குரிய தாகூர் சட்டவிரி வுரையாளராக வருமாறு ஆணையனுப்பினர்கள். சுப்பிர மணிய பிள்ளை குறிப்பிட்ட காலத்தில் மேற்படி விரிவுரை யைச்செய்து பெரும்புகழையும் பொருளையும் அடைந்தார். இது தமிழ் நாட்டிற்கே தனிப்பெருஞ் சிறப்பாகியது.

### உயர் பதவியை நாடல்

தாகூர் சட்ட விரிவுரையாளரான இவருக்கு முனிசிப் பாக வேலை பார்க்குமாறு அழைப்புக் கிடைத்தது. உயர் பதவியையே சுப்பிரமணிய பிள்ளை நாடி நின்றதால் அப் பதவியை வேண்டாமென மறுத்துவிட்டார்.

### பூசைப்பிள்ளை

இறைவனைப்போற்றி வழிபாடுசெய்யும் பூசனையை சுப்பிரமணிய பிள்ளை இளம்பருவம் முதற்கொண்டே மேற் கொண்டிருந்தார். பல்கலைக் கழகப்படிப்பை மேற்கொண்டு

மாணவர் விடுதியில் தங்கியிருந்தபோதும் பூசையை விட வில்லை. மாணவர்கள் நையாண்டி செய்ததையும் ஒருபொரு ளாக மதிக்கவில்லை. மேலும் இவர் தமிழர்க்கே தனிப் பண்பாடாகிய விருந்தோம்பலினும் திருந்திய மனப் பான்மை அமைந்தவராகப் பொருந்தியிருந்தார். சிறப் பாகப் பூசனை நிகழ்ந்த ஒருநாளில் நீதிபதி வேங்கட சுப்பாராவ், நீதிபதி தேவதாசுப்பிள்ளை என்னும் நண்பர்கள் இருவரைத் தம் இல்லத்திற்கு விருந்துண்ணவருமாறுவேண் டியழைத்தார். அவர்களும் வருவதாக உடன்பாடு தெரி வித்தனர். குறிப்பிடப்பட்ட நாள் வந்தது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிடப்பட்ட நீதித்தலைவர்கள் இருவரும் பிள்ளையின் இல்லத்துக்கு வந்துசேர்ந்தனர். பிள்ளையோ இறைவழிபாட்டில் ஈடுபட்டு மெய்ம்மறந்து, கருங்கல் மனத்தையும் கசிந்துருகச்செய்யும் திருவாசகமெனும் பெருவாசகத்தைக் கண்ணீர்சோர ஓதுவதில் உளஞ் செலுத்தியிருந்தார். விருந்தினராகவந்த நீதிபதிகள் பிள்ளை யின் பூசையைப் பார்த்துக்கொண்டு அமைதியாக அமர்ந் திருந்தனர். தம்மைக் கண்டதும் பூசையையெல்லாம் போட்டுவிட்டு ஓடிவராமல் உலகத்தையே மறந்து நின்ற பிள்ளையின்மெய்யன்பு நீதித்தலைவர்கட்கு மிகுந்த வியப்பை யளித்தது. பிள்ளை பூசையை முடித்துக்கொண்டு விரைந்து வந்தார். விருந்தினரைப் போற்றினர். அவர்களை வர வேற்காமல் காக்கவைத்தமையின்பொருட்டு மன்னிக்க வேண்டினர். நீதிபதிகளோ பிள்ளையைப்பார்த்து "பெரி யீர்! உண்மை வழிபாட்டை நாங்கள் இன்றுதான் பார்த் தோம். பூசையில் ஈடுபட்டுள்ள பலர் உலகினர் தம்மைப் புகழ்தல் ஒன்றையே நாடிப் பூசைசெய்கிறார்கள்" என்று கூறிப் புகழ்ந்துபோற்றி மகிழ்ந்து விருந்துண்டு சென் றார்கள்.

இரவீந்திரநாத தாகூர்

உலகப் புகழ்ப்பெற்ற வங்காளக் கவிஞராகிய இரவீந்திரநாத தாகூர் சென்னைக்கு வந்தார். சென்னைமாநகர மக்கள் பல இடங்களில் அவருடைய செஞ்சொன்மாரியைக் கேட்டுக் களித்தனர். அவர், தாகூர் சட்டவிரிவுரைப் பரிசு பெற்ற சுப்பிரமணிய பிள்ளையைப் பார்க்கவேண்டும் என்னும் விருப்பத்துடன் இருந்தார். சுப்பிரமணிய பிள்ளை இருக்கும் இடம் தேடிவந்து கண்டுகளித்து உரையாடி மகிழ்ந்தார். மேலும் இவருடன் அமர்ந்து நிழலோவியம் ஒன்றும் எடுத்துக்கொண்டார்.

அண்ணுமலைநகரில் ஆசிரியர்

சென்னை அரசாங்கத்தின் சட்டத்துறைத் தலைவராக சர். சி. பி. இராமசாமி ஐயர் அமர்ந்தார். சட்டக் கல்லூரியில் நிலையாகப் பேராசிரியர்களை வைத்திருப்பதால், மற்றைப் பேரறிவாளர்களுடைய புலமை சட்டக்கல்லூரி மாணவர்கட்குப் பயன்படாது போகிறது என்று எண்ணினர். "இனிமேல் சட்டக் கல்லூரிக்கு நிலையான பேராசிரியரோ விரிவுரையாளரோ வேண்டியதில்லை. தகுந்தவர்களை அவ்வப்பொழுது அமைத்துக்கொள்ளலாம்" என்று கட்டளை அனுப்பினர். இம்முடிவால் சுப்பிரமணிய பிள்ளை 1927-ஆம் ஆண்டில் சட்டக்கல்லூரிப் பேராசிரியர் பதவியில் இருந்து விலகினர். 1929-ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக அமர்த்தப்பெற்று இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

கோயில் தருமத்தலைவர்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் தலைவராக அமர்ந்து சீரிய திருத்தொண்டுகள் பலசெய்தார். தேவாரப் பாடசாலை சிவாகம பாடசாலை ஆகியவைகளை ஏற்படுத்தி

ஞர். மற்றும் பல திருத்தொண்டுகள் செய்து மக்களுக்கு நலம் புரிந்தார்.

சங்கங்கள் அமைத்தல்

சங்கங்கள் அமைத்து அதன் வாயிலாகத்தொண்டுகள் பல செய்தால் எல்லோரும் நன்மையை எய்தலாம் என்னும் கொள்கை சுப்பிரமணிய பிள்ளையின் உள்ளத்தில் வேரூன்றி நின்றது. தாம் பள்ளியில் கல்விபயின்றுகொண்டிருந்தகாலத்தில் தானே "சைவ சித்தாந்த சங்கம்" என்னும் பெயருடன் சங்கம் ஒன்று அமைத்தார். இச்சங்கத்திற்கு இவரே தலைவர். சங்கம் ஞாயிற்றுக்கிழமைதோறுங் கூடிப் பல ஆராய்ச்சிகளையும் முடிவுகளையும் செய்தது. பிறகு இவர் சென்னையை அடைந்து கல்விகற்றபோது அங்கும் "நண்பர் சங்கம்" ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வந்தார். பிறகு திருவள்ளுவர் வாழ்ந்திருந்த திருமயிலையில் திருவள்ளுவர் கழகம் ஒன்றை அமைத்தார். திருநெல்வேலியில் இருந்த காலத்திலும் சங்கங்கள் அமைத்துப் பணிபுரிந்தார். பல சங்கங்களுக்கும் பேரவைகட்குஞ் சென்று சொற்பொழிவாற்றினர்.

பல்கலைப்புலவர்

சுப்பிரமணிய பிள்ளையின் பலவகைக் கலைத்திறமையையும் நன்குணர்ந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் "பல்கலைப்புலவர்" என்னும் சிறப்புப் பெயரை 25—12—1940-ல் வழங்கியது.

மீண்டும் அண்ணாமலைநகரில்

இடையே உடல்நோய் ஒன்று சுப்பிரமணிய பிள்ளையைப்பற்றியது. அத்துடன் வறுமை நோயுஞ்சேர்ந்து கொண்டது. இரு நோய்களாலும் இவர் உள்ளம் கலங்கித் துன்புற்றுப் பல இடங்களினும் தங்கியிருந்தார். இவ

ருடைய இன்னல் நிலையைப் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் உணர்ந்தார். இவருடைய அறிவுத்திறனை அண்ணாமலைச் செட்டியாருக்கு எடுத்துரைத்தார். மீண்டும் ஆங்கு தருவித்து ஆசிரியத்தொழிலில் அமர்த்தவேண்டும் என்று அறிவுறுத்தினார். ஆகவே, சுப்பிரமணிய பிள்ளை மீண்டும் 1940-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப்பேராசிரியரானார்.

## இறுதி

அண்ணாமலை நகரில் இரண்டோராண்டுகள் பணி புரிந்தார். 1944 ஆம் ஆண்டு தொடங்கியவுடன் உடல்நிலை மிகவும் சீர்கேடடைந்துவிட்டது. பணி செய்யமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டார். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் சுப்பிரமணிய பிள்ளையை நெல்லைக்கு அழைத்துச்சென்று தக்க சமயத்தில் நல்ல உதவி புரிந்தனர். பொருட்செலவைக் கவனியாது மருத்துவ உதவி முதலியன அன்புடன் அளித்தனர். ஆயினும் நோயினின்றும் விடுதலைபெறாது தமது ஐம்பத்தாறாவது அகவையில் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முப்பதாம் நாள் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## குண நலன்கள்

சுப்பிரமணிய பிள்ளை சீரிய மனப்போக்கு அமையப் பெற்றவர். பகட்டான கோலம்பூண்டு செருக்கித் திரிதல் இவருக்கு அடியோடு பிடிக்காது. சட்டக் கல்லூரியில் வேலைபார்ப்பதற்கு முயற்சிசெய்த காலையில் சட்டையணியாமலே நீதிமன்றத் தலைவர் ஒருவரைச் சென்று கண்டார். நடந்துபோதல் இழிவென்று எண்ணமாட்டார். நண்பர்களோடு உரையாடியபடியே மைல் கணக்காக நடந்து செல்வார். ஏழை எளியவர்களையும் செல்வர்களையும் ஒரே

நோக்குடன் பார்க்கும் பெருந்தன்மை இவருக்கு இயல் பாகவே அமைந்திருந்தது. இவருடைய நினைவாற்றல் எல்லோராலும் வியந்து பாராட்டக்கூடியது. ஒருமுறை கேட்ட செய்தியை மறுமுறை அவ்வாறே திரும்ப உரைக்கும் ஆற்றல் இவருக்கு நிரம்ப அமைந்திருந்தது. ஒரு நாள் ஆசிரியர் சொல்லிய நீண்டபொருளை மாணவர்கள் கேட்டு எழுதிக்கொண்டிருந்தனர். இவர் எழுதவில்லை. கேட்டுக்கொண்டிருந்தார். இவருடைய தன்மையை ஆசிரியர் நன்கு அறிந்துகொள்ளவில்லை. இவர் எழுதாமல் இருப்பதைமட்டும் பார்த்துவிட்டு, "எங்கே நீ எழுதியதைப் படி பார்ப்போம்," என்றார். இவர் தாம் கேட்டவாறே திரும்பச்சொன்னார். மற்றைய மாணவர்களோ இவர் சொல்லியதைச் சரிபார்த்தார்கள். இந்நிகழ்ச்சியைக் கண்ட ஆசிரியர் பெரிதும் வியப்படைந்தார்.

### இவர் எழுதிய நூல்கள்

சுப்பிரமணிய பிள்ளை போதகாசிரியராக மட்டும் இருக்கவில்லை. நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கினார். இவர் பள்ளியில் வேலைபார்க்கும் நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களிலெல்லாம் நூலாராய்ச்சியிலும் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டிருந்தார். கீழ்க்குறிப்பிடப்பெறும் நூல்களைத் தவிரப் பல பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

### நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. பழந்தமிழர் நாகரிகம்
3. திருவாசகப் பொழிப்புரை
4. திருக்குறட் பொழிப்புரை
5. தனிப்பாடல் திரட்டுரை
6. திருமுருகாற்றுப்படை உரைநடை

7. கந்தர் கலிவெண்பா உரைநடை
8. சர். சி. பி. ராய்
9. திருஞானசம்பந்தர் வரலாறு
10. திருநாவுக்கரசர் வரலாறு
11. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு
12. மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு
13. சேக்கிழார் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும்
14. தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்
15. பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்
16. குமரகுருபர அடிகள் வரலாறு
17. சிவஞானமுனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும்
18. மெய்கண்டாரும் சிவஞானபோதமும்
19. உலகப்பெருமக்கள் வரலாறு
20. அறிவு விளக்க வாசகம்
21. திருஞானசம்பந்தர் தேவார இயற்கைப்பேரழகு
22. மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்
23. இறையனார் அகப்பொருளாராய்ச்சி
24. செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும்
25. இந்து சமயங்களின் சுருக்க வரலாறு
26. திருநான்மறை விளக்கம்
27. சைவசித்தாந்த விளக்கச் சுருக்கம்
28. முருகன் பெருமை
29. சைவ சித்தாந்த உண்மை வரலாறு
30. சைவச் சடங்கு விளக்கம்
31. மெய்கண்ட நூல்களின் உரைநடை
32. தமிழர் சமயம்
33. சிவஞானபோதப் பொழிப்புரை
34. தியானமும் வாழ்க்கை உயர்வும்
35. கடவுளும் வாழ்க்கை நலமும்
36. உலக நன்மையே ஒருவன் வாழ்வு
37. மக்கள் வாழ்க்கைத் தத்துவம்
38. வாழ்க்கை இன்பம்
39. உடல் நூல்
40. நோய் நீக்கம்

41. வான நூல்
42. சிவப்பிரகாசம் ஆங்கிலமொழிபெயர்ப்பு
43. நீதிநெறி விளக்கம் ஆங்கில மொழிபெயர்ப்பு
44. சைவசித்தாந்த இயற்கைத் தத்துவம் (ஆங்கிலம்)
45. இந்து சமயங்களின் சுருக்க வரலாறு
46. பொருட் சட்டம்
47. பதிவு விதி
48. குற்றச் சட்டம்
49. இந்தியத் தண்டனைத்தொகுதி
50. குற்றங்களின் நெறிமுறைகள்

---

## உஎ. மோசூர். கந்தசாமி முதலியார்

### தோற்றமும் கல்வியும்

சென்னைமாநகரில் அரிசி வாணிகஞ் செய்திருந்த மோசூர் பொன்னம்பல முதலியாருடைய அருமைத் திருமகனுகக் கந்தசாமி முதலியார் 1887 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஒன்பதாம் நாள் பிறந்தார். தாயாருடைய பெயர் உண்ணுமுலையம்மையார்.

கந்தசாமி முதலியார் முதலில் சென்னைத் தொண்டை மண்டலம் துளுவவேளாளர் பாடசாலையில் கல்விபயிலத் தொடங்கினர். பிறகு பச்சையப்பன் கல்லூரியில் கல்வி பயலத்தொடங்கி பி. ஏ. வகுப்பில் ஒரு பகுதியை முடித்தார். பிறகு சென்னை அரசாங்கக் கணக்கிலாகாத் தலைவர் அலுவலகத்தில் எழுத்தாளராக அமர்ந்தார். அவ்வேலையில் இருந்துகொண்டே பி. ஏ.த் தேர்வுக்குச் சென்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

### தமிழ்க் கல்வி

சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாரிடம் நெருங்கிப் பழகும்பேறு பெற்றிருந்

தமையின் இவர் அப்பெரியாரிடம் தமிழ் நூல்கள் பலவற்றைப் பாடங்கேட்டார். கல்லூரியில் இவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் திருமணம் செல்வக்கேசவராய முதலியார். அவர் தமிழ் மொழியைப் போதித்த திறமும் இவருடைய தமிழார்வத்தை நன்கு வளர்த்தது. மேலுஞ் சில நூல்களைத் தக்காரிடம் கற்றுணர்ந்தார்.

தமிழாசிரியர்

இவருடைய நோக்கம் தமிழாசிரியராக அமர்ந்து மாணவர்கட்குத் தமிழ் பயிற்றவேண்டும் என்பதாக இருந்தது. அவ்வாறு செய்யின் தமிழறிவை மேலும் நன்றாக வளர்த்துக்கொள்ளலாம் என்று எண்ணினார். ஆகவே, 1918 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியர் வேலையை மேற்கொண்டார். தமிழாசிரியராக இருந்த போதிலும் பேராசிரியர் தி. த. கனகசுந்தரம் பிள்ளையிடம் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களைப் பாடங்கேட்டுத் தமது தமிழறிவை நன்கு வளர்த்து வளம்படுத்திக்கொண்டேயிருந்தார். பிறகு இராமலிங்கத் தம்பிரானிடம் காஞ்சிப்புராணம் முதலிய நூல்களைப் பாடங்கேட்டார்.

திருமணம்

இவருக்கு இருமுறை திருமணம் நிகழ்ந்தது. இவர் வடலூர் இராமலிங்க அடிகளிடம் மிகுந்த அன்புடையவர். அதனால் முதல் மகளுக்கு அருட்பிரகாசம் என்றும் முதல் மகனுக்கு இராமலிங்கம் என்றும் பெயர்கள் வைத்தார்.

பலவகைத் தொண்டுகள்

1922-ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது பல தடவைகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புமுறைக் கூட்டத்தினரில் (ஜூரிகளில்) ஒருவராக இருந்தார். 1924-ஆம்

ஆண்டில் இவருடைய மேற்பார்வையில் திருவருட்பதிப்பு ஒன்று வெளியாயிற்று. 1925-ஆம் ஆண்டில் சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டை அருணாசலக்கடவுள் கோயில் அறச்செயலாளர்களில் ஒருவராக அமர்த்தப்பட்டுக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார். 1931-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டுவரை சென்னை அரசாங்கக் கலாசாலைப் பாடப் புத்தகக் கூட்டத்தினரில் ஒருவராக அமர்ந்து வேலைசெய்தார். பல ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்து உறுப்பினராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து உறுப்பினராகவும் இருந்தார்.

உரையாசிரியர்

நூல்களுக்கு உரை இயற்றவேண்டும் என்னும் எண்ணம் இவருக்கு மிகுதியாக இருந்தது. மோசூர் ஆலடிப் பிள்ளையார் புகழ்பத்து என்னும் பெயருடைய நூல் ஒன்றை 1940-ஆம் ஆண்டில் இயற்றி அதற்குத் தாமே விரிவுரையும் இயற்றி வெளியிட்டார். இவரால் உரையெழுதப்பட்ட நூல்கள் 1. கச்சிக்கலம்பகம் 2. திருவாமாத்தூர்க் கலம்பகம் 3. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் 4. திருவொற்றியூர்க் கலம்பகம் 5. ஏகாம்பரநாதர் உலா 6. சந்தானகுரவர் நான்மணிமாலை 7. மகிழ்மாக் கலம்பகம் என்பன. இவற்றுள் கச்சிக் கலம்பகம் பூண்டி அரங்கநாத முதலியாரால் இயற்றப்பட்டது. திருவாமாத்தூர்க் கலம்பகம் இரட்டைப் புலவர்களால் இயற்றப்பட்டது. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டது. மகிழ்மாக்கலம்பகம் தொழுவூர் வேலாயுத முதலியாரால் இயற்றப்பட்டது. திருவொற்றியூர்க் கலம்பகம் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரால் இயற்றப்பட்டது. சந்தான குரவர் நான்மணிமாலை

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையால் இயற்றப் பட்டது. ஏகாம்பரநாதர் உலாவும் இரட்டைப்புலவர்களால் இயற்றப்பட்டதே.

இறுதி

தமிழ்த் தொண்டுகள் பல செய்து சிறப்புடன் விளங்கிய இவர் 1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு இருபத்தொன்பதாம் நாள் விண்ணுலகெய்தினர்.

பண்புநலம்

இவர் பேசும் ஆற்றலில் சிறந்து விளங்கினர். ஆங்கிலப் புலவர்கள்கூட வியப்பெய்துமாறு ஆங்கிலத்திலே பேசுவார். இவர் தாம் கருதிய பொருளை எத்தகையோரிடமும் அஞ்சாது எடுத்துரைக்கும் நெஞ்சுரம் படைத்தவர். இவர் பேசத் தொடங்கிவிட்டால் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார். நூல்கள் பலவற்றை வெளிப்படுத்த வேண்டுமென்பதில் மிகுந்த விருப்பம்கொண்டிருந்தார். இவருடைய உரைகள் விரிவாக அமைந்து சிறப்பாக விளங்குகின்றன.

---

## உ௬. புதுமைப்பித்தன்

தோற்றம்

புதுமைப்பித்தன் என்னும் புனைப்பெயரால் விளங்கிய **சொ. விருத்தாசலன்** 1906-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தந்தையார் பெயர் **சொக்கலிங்கம் பிள்ளை**. தாயார் பெயர் **பர்வதத்தம்மாள்**. சொக்கலிங்கம் பிள்ளையின் ஊர் திருநெல்வேலி. இவர் தாசில்தாராகத் திருப்பாதிரிப் புலியூரில் வேலைபார்த்துக்கொண்டிருந்தவிடத்தில் புதுமைப் பித்தன் பிறந்தார்.

**கல்வி**

புதுமைப்பித்தனின் தந்தை பல இடங்களுக்கும் மாற்றப்பட்டபடியால் புதுமைப்பித்தன் ஓரிடத்தில் இருந்து நிலையாகக் கல்விகற்க முடியவில்லை. பள்ளிக் கல்வியைப் பலஇடங்களினும் கற்ருர். தந்தை வேலையிலிருந்து ஓய்வு பெற்று நெல்லையை அடைந்தபின் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கத் தொடங்கினுர். பள்ளியின் பாடப் புத்தகங்களைக் கற்பதில் இவருடைய நாட்டம் செல்லவில்லை. புனைகதைகளைப் படிப்பதிலேயே தமது பொழுதையெல்லாஞ் செலவிட்டார். இதனுல் கல்லூரிப் படிப்பு மெதுவாகவே சென்றுகொண்டிருந்தது. ஆகவே தமது இருபத்தைந்தாவது அகவையில் பி. ஏ. தேர்வில் தேறினுர்.

**திருமணம்**

பி. ஏ. கல்வியை முடித்த புதுமைப் பித்தனுக்கு 1931-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. திருவனந்தபுரத்திலிருந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவருடைய, அருமைத் திருமகளாகத் தோன்றிய கமலாம்பாள் என்னும் பெண்மணியே வாழ்க்கைத் துணைவியாக அமைந்தாள்.

**சென்னையை அடைதல்**

புதுமைப்பித்தன் சட்டப்படிப்பைப் படித்து, வழக்கறிஞராகவோ அரசியல் அலுவலாளராகவோ ஆகவேண்டும் என்னும் எண்ணம் புதுமைப்பித்தனுடைய தந்தையாருக்கு இருந்தது. புதுமைப்பித்தனே தந்தையின் போக்கிற்கு இணங்கி நடக்கவில்லை. தம் மனம்போனவாறு வாழ்க்கை நடத்தவேண்டும் என்று எண்ணினுர். புனைந்துரைக் கதைகளைப் புதுமையான முறையில் எழுதி இலக்கியத்தொண்டு செய்யவேண்டும் என்பதே புதுமைப் பித்தனுடைய எண்ணமாக இருந்தது. இதனுல் தந்தைக்கும்

மைந்தனுக்கும் மாறுபாடுகள் உண்டாயின. தந்தை மகனை வெறுத்தார். மகன் தந்தையை வெறுத்தார். தாமும் மனைவியும் வீட்டைவிட்டு வெளியேறினார். மனைவியை உறவினர் வீட்டில் இருக்கச்செய்துவிட்டுத் தாம் மட்டும் சென்னையை அடைந்தார். 'மணிக்கொடி' முதலிய பத்திரிகைகளில் கதைகள் எழுதினார். கதைகள் நன்றாக அமைந்தன. பத்திரிகைகளினும் வெளிவந்தன. ஆனால் அதன்பொருட்டுப் பணங் கிடைக்கவில்லை. அந்நாளில் பத்திரிகைகள் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு ஏழ்மையான நிலையில் வாழ்ந்திருந்தன. இந்நிலையில் அவைகள் எழுத்தாளர்களுக்கு எத்தகைய உதவியுஞ் செய்யவில்லை.

கதைவெறி

புதுமைப்பித்தனும் அவரைப்போன்ற பிற எழுத்தாளர்களும் வறுமையால் வாடி நொந்தனர். நாட்கணக்காகப் பட்டினியுங் கிடந்து வருந்தினர். ஆனால், கதை யெழுத வேண்டும் என்னும் ஆர்வமும் வெறியும் அவர்களைவிட்டு நீங்கவில்லை. கதையெழுதிக்கொண்டே இருந்தனர். ஒரு நாள் புதுமைப்பித்தனுக்கு நண்பர் ஒருவர் இரண்டு ரூபா செலவுக்குக் கொடுத்தார். உணவு முதலியவற்றின் பொருட்டு அவர் அப்பொருளைச் செலவிடுவார் என்பது பணங் கொடுத்தவருடைய எண்ணம். புதுமைப்பித்தன் பணங் கிடைத்ததும் மூர்மார்க்கெட் பக்கஞ் சென்றார். பழைய புத்தகங்களை விற்கும் கடையில் இருந்து மாப்பஸான் கதைகள் என்னும் கதைப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு எஞ்சிய சில்லரைக்குப் பாக்கு, வெற்றிலை, புகையிலை முதலியவைகளுடன் இருப்பிடத்தை யடைந்தார். இவருக்குப் பணங்கொடுத்தவர் இவர் செய்திருக்கும் செலவைப் பார்த்துத் திடுக்கிட்டார். "என்ன இப்படிச்செய்து

விட்டீர்?" என்று வருந்தினர். இவ்வாறு புதுமைப்பித்த னுக்குக் கதைப்பசிதான் மிகுதியாக இருந்ததே தவிர வயிற்றுப்பசியை அவர் ஒரு பொருளாக மதிக்கவில்லை.

பத்திரிகைத் தொழில்

ஊழியன், தினமணி, தினசரி முதலிய பத்திரிகை களில் இவர் உதவியாசிரியராகச் சிறிது சிறிதுகாலம் வேலை பார்த்தார். தமது அறிவுடைமைக்குச் சிறுமை வருமாறு அடங்கி நடக்கும் வழக்கம் இவரிடம் சிறிதும் இல்லை. ஆகவே பத்திரிகைத்தொழிலில் இவர் நிலைபெற்றிருக்க வில்லை.

சினிமாக் கதை

இறுதியில் இவர் சினிமாக் கதை எழுதும் துறையில் இறங்கினர். இரண்டொரு படங்களுக்குக் கதைகளும் எழுதிக்கொடுத்தார். இறுதியில் தாமே ஒரு சினிமாப் படம் பிடிக்கவேண்டும் என்று முயற்சி செய்தார். ஆனல் அம்முயற்சி வெற்றியடையவில்லை. இருமல் நோய் இவரைப் பிடித்து வருத்தியது. அதனல் வருந்தி 1948-ஆம் ஆண்டில் தமது நாற்பத்திரண்டாம் அகவையில் திருவனந்த புரத்தில் காலமானர்.

பண்பு நலம்

விறுவிறுப்பாகவும் வியக்கத்தக்க வகையிலும் இவர் கதைகள் எழுதியமையின் இவருடைய பெயர் தமிழ் நாடெங்கும் விரைவாகப் பரவிப் புகழ்பெற்றுவிட்டார். இவருடைய கதைகள் நல்ல முறையில் அமைந்தமையின் மக்கள் மிகவும் பாராட்டினர்கள். கதைகளின் மூலம் இவர் தமிழ் உலகிற்குச் செய்ததொண்டு போற்றத்தக்கது. இவருடைய கதைகளேயன்றிப் பேச்சும் நகைச்சுவை நன்கமையப் பெற்றிருந்தது.

இவர் எழுதிய கதைகள்

1. இன்று இரவு
2. மணியோசை
3. புதிய ஒளி
4. கட்டுரைகள்
5. கவிதைகள்
6. உலகத்துச் சிறுகதை
7. தெய்வங்கொடுத்த வரம்
8. முதலும் முடிவும்
9. ஆண்மை
10. பளிங்குச்சிலை
11. பிரேத மனிதன்
12. அவளும் அவனும்
13. உயிர் ஆசை
14. வேடிக்கை மனிதர்கள்
15. சிற்றன்னை
16. பலிபீடம்
17. வாக்கும் வக்கும்
18. உலக அரங்கு
19. கபாடபுரம்
20. விபரீத ஆசைகள்
21. புதுமைப் பித்தன் கதைகள்
22. நாசகாரக்கும்பல்
23. பக்தகுசேலா
24. ஆறு கதைகள்
25. பேஷிஸ்ட் சடாமுனி
26. கப்சிப் தர்பார்

ஆகியன இவர் எழுதிய கதை நூல்களாம்.

## ௨௯. முத்துக்குமாரத் தம்பிரான்

### தோற்றம்

இலக்கண நூல்களை நன்கு கற்றுச் சிறந்து விளங்கிய படியால் "இலக்கணச்சாமிகள்" என்னும் காரணப்பெயரைப் பெற்ற முத்துக்குமாரத்தம்பிரான் ஈழ நாட்டிலே யாழ்ப்பாணத்திலே பிறந்தார். தந்தையாருடைய பெயர் வெற்றிவேற் பிள்ளை. இளமைக் காலத்தில் கற்கவேண்டிய பள்ளிப் படிப்பைச் செவ்வனே கற்றார். அடக்கம், பொறுமை, தெய்வ வழிபாடு, நல்லோர் கூட்டுறவு முதலிய சீரிய பண்புகள் இவரிடம் இளமைப் பருவத்திலேயே அமைந்து விளங்கின. துறவறத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் என்னும் கருத்துடன் இருந்த இவர் பதினான்காம் அகவையில் ஈழநாட்டைவிட்டுப் புறப்பட்டு இந்தியாவை அடைந்தார்.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

திருத்தில்லைப்பதி இவருக்குப் பிடித்தமான இடமாக இருந்தது. கூத்தப்பிரானைப் போற்றிப் பணிந்துகொண்டு அங்குத் தங்கியிருந்தார். அந்நாளில் அங்கு ஈசானியமடத்தில் இராமலிங்க அடிகள் என்னும் பெரியார் கல்விகேள்விகளில் வல்லவராய் மாணவர் பலர்க்கு நூல்களைப் பாடஞ் சொல்லிக்கொண்டு, நூல்களை ஆராய்ச்சி செய்து வெளியிடுதல் முதலிய பணிகளிலே சிறந்து விளங்கியிருந்தார். முத்துக்குமாரசாமி என்னும் பெயருடன் வந்து சேர்ந்த இவர் அப்பெரியாருடைய கல்விப் பெருமை முதலியவைகளை நன்குணர்ந்தார். அவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தெளிந்தார்.

### தம்பிரானுதல்

பிறகு சைவ நூல்களைக் கற்றுணரவேண்டும் என்று எண்ணினர். அந்நாளில் சூரியனார்கோயில் ஆதீனத்தில்

எழுந்தருளியிருந்த முத்துக்குமாரதேசிகர் சைவ நூல்களில் வல்லவராக விளங்குகிறார் என்பதை அறிந்து அவரிடஞ் சென்று சைவசித்தாந்த அறிவு நூல்களை ஓதியுணர்ந்தார். அவரிடமே சிவதீக்கையும் கல்லாடையும் பெற்று முத்துக்குமாரத் தம்பிரான் என்னும் பெயரை யடைந்தார்.

இலக்கணச்சாமிகள்

இவர் உண்மைத்துறவை உள்ளவாறு மேற்கொண்டார், நியதி திறம்பாமை, சைவ சமயத்தில் பேரன்பு, புறநெறியிற் சிக்கிய உயிர்களைச் சிவநெறிப்படுத்துதல் முதலிய நற்குணங்களை மேற்கொண்டு விளங்கினர். இலக்கண அறிவாற்றல் நன்கு அமையப்பெற்றிருந்த படியாலும், சிவனடியார்கட்குரிய இலக்கணங்களிலெல்லாம் சிறந்து விளங்கினமையானும் இலக்கணச்சாமி என்னும் பெயரும் இவருக்கு உண்டாயிற்று.

நூல் வெளியீடு

வெளிவராதிருந்த சிவஞானமாபாடியத்தையும் சிவாக்கிர பாடியத்தையும், இவை போன்ற வேறு பல அரிய நூல்களையும் ஏட்டுச்சுவடிகள் பலவற்றைத்தேடி ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். முத்திநிச்சய பாடியம் என்னும் அரியநூல் தருமபுர ஆதீனத்தில் இருந்து வெளிவருவதற்குக் காரணமாக இருந்தார். சிவக்கவிமணி சி. கெ. சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராண விரிவுரை அடிகளாரால் பார்வையிடப்பட்ட பிறகே அச்சிற்பதிப்பிக்கப்பட்டு வெளி வந்துகொண்டிருந்தது.

நூல் நிலையம்

இவர் திருத்தில்லையில் காரைக்குடிச் சொக்கலிங்க ஐயாவால் அமைக்கப்பட்ட மெய்கண்ட சித்தாந்த வித்தியா

சாலையிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். கிடைத்தற் கரிய நூல்கள் பலவற்றை இவர் தொகுத்து வைத்திருந் தார். அந்நூல்களை இறுதியில் இலவச வாசகசாலையாகச் செய்து அவ்வாசகசாலை நடந்து வருவதற்காகத் தமது பொருளையும் அவ்வாசகசாலைக்கு உரிமையாக்கினர்.

### இறுதி

சைவசமயத்திற்கும் செந்தமிழ் மொழிக்கும் நல் தொண்டு செய்திருந்த இவர் இறுதியில் ஞானவரணம் என்னும் நூலை அச்சிடுதற்கு ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தார். அந்நூல் முடிவு பெறுவதற்குள் தமது எழு பதாம் அகவையிலே 1949-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்திரண்டாம் நாள் இறைவன் திருவடிநீழலை அடைந் தார். இவருடைய உடல் ஞானப் பிரகாச தீர்த்தம் என்னும் குளக்கரையில் அடக்கஞ் செய்யப்பட்டது.

---

## ௯0. இராமசாமிக் கவுண்டர்

### பிறப்பு

வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள மாடப்பள்ளி என்னுஞ் சிற்றூரில் 1889-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் பதினொன்றும் நாள் இராமசாமிக் கவுண்டர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அனுமந்தராயக் கவுண்டர், தாயார் பெயர் அங்கம்மாள்.

### கல்வி

அக்காலத்திலே மாடப்பள்ளியில் தகுந்த பள்ளிக் கூடம் இல்லை. ஆகவே இராமசாமியார் திருப்பத்தூர் சென்று கல்வி கற்றார். திருப்பத்தூர் நகராட்சி உயர் நிலைப்பள்ளியிலேயே பள்ளியிறுதி வகுப்பு வரை படித்துத்

தேறினர். உயர்நிலைப்பள்ளியில் பயின்று வருங்காலத்தில் தானே தமிழார்வம் மிகுந்தவராக விளங்கினர். கணக்கை அவர் தம்முடைய விருப்பப்பாடமாக எடுத்துக்கொண்டிருந்தாரெனினும் தமிழார்வமும் தமிழ்ப் பற்றும் அவரிடம் மிகுதியாக வளர்ந்து வந்தன.

### பாரதத்தில் பற்று

இராமசாமியாருக்கு அகவை பன்னிரண்டு பதின் மூன்று நடந்துகொண்டிருக்கும் போதே வில்லிபாரதப் பாடல்களைப் பாடுவதில் பெருவிருப்பங்கொண்டிருந்தார். வில்லிபாரதத்தை இவருடைய தந்தையார் இவருக்குக் கற்பித்தார். வேறுசில மாணவரோடு கூடி இவர் அதனைக் கற்ருர். வில்லிபாரதம் இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

### வேட்டகம்

ஒருமுறை இவர் தம்மைப்போன்ற வேறுசில மாணவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இவர் பாரதம் முதலிய நூல்களைப் படித்துக்கொண்டிருத்தலை நன்குணர்ந்த ஓர் அறிஞர் இராமசாமியைப் பார்த்து, "வேட்டகம்" என்ருல் என்ன சொல் பார்ப்போம். என்று கேட்டார். இவர் உடனே, "விரும்புதற்குரிய இடம்" என்று மறுமொழி பகர்ந்தார். "மாமியார் வீடு" என்று சொல்லாமல் ஏன் இவ்வாறு கூறுகிருய்?" என்று கேட்டார் அந்த அறிஞர். அதற்கு இராமசாமியார், "மாமனர் வீட்டார் மாப்பிள்ளையின் வருகையை மிகவும் விரும்புகின்றூர்கள். மாப்பிள்ளையும் மாமனர் வீட்டைப் பெரிதும் விரும்புகிருர். அதனுல்தான் இவ்வாறு கூறினேன்" என்று சொன்னர். இவ்வாறு இவர் இளமையிலேயே பலவகையான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

கல்வியுங் கலையும்

இராமசாமியார் ஐந்தாவது படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தந்தையுந்தாயும் கழிச்சல் நோய்க்கு இரையானார்கள். பிறகு சிறிய தந்தையார் இவரைப் பாது காத்தார். பதினேழாவது ஆண்டில் பள்ளியிறுதி வகுப்பில் தேறினார். பிறகு வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள வூரிஸ் கல்லூரியிற் சேர்ந்தார். கல்லூரி வகுப்புக்களிலும் கணக்குப் பாடத்தையே எடுத்துப் படித்தார். எப். ஏ. தேர்விற்குச் செல்லவிருந்த சமயத்தில் இவருடைய தங்கை யார் நோய்வாய்ப்பட்டுக் காலமாயினர். அதனால் உளங் கலங்கினார். அவ்வாண்டு நடந்த அத்தேர்விலும் தேறாமல் தவறினார்.

பிறகு திருச்சிக்குச் சென்றார். செயின்ட் சோசப் கல்லூரியிற் சேர்ந்தார். நடுத்தர வகுப்பிலும் (இண்டர் கிளாஸ்) தேறினார். பிறகு திருச்சியில் இருந்து சென் னைக்குச் சென்று கிறித்தவக் கலாசாலையிற் சேர்ந்தார். கணக்கு நூலில் மிகப் புகழ்பெற்ற பேராசிரியர் தாஸ் என்பவரிடம் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் தேறினார்.

திருமணம்

1923-ஆம் ஆண்டில் இவருக்குத் திருமணம் சிறப் பாக நடைபெற்றது. வாழ்க்கைத் துணையாக அமைந்த பைங்தொடியின் பெயர் கனகம்மாள். இராமசாமியார் கனகம்மாளுடன் இல்லறத்தை இனிது நடத்தத்தொடங் கினார். மக்கட்பேறும் அமைந்தது.

அலுவல்

1924-ஆம் ஆண்டில் வாணியம்பாடி இசுலாமியா உயர்நிலைப்பள்ளியில் கணக்காசிரியராகப் பணிபுரியத்

தொடங்கினார். 1925-26-ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிற் சேர்ந்து எல். டி. பட்டம் பெற்றார். எம்.ஏ.எல்.டி பட்டம் பெற்றவுடன் வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் தலைவராக வேலை பார்க்குமாறு அழைத்தனர். அப்போது இவருக்கு அகவை இருபத்தேழு. இருபத்தேழாம் அகவையில் ஒருவர் ஒரு கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்றனர் எனின் அவருடைய அறிவு நலத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறவும் வேண்டுமோ?

சேலங் கல்லூரித் தலைவர்

1927 ஆம் ஆண்டில் சேலங்கல்லூரியில் தலைவர் பதவிக்கு ஆள்தேவை என்பதை அறிந்தார். அதனைப் பெறுவதற்கு விண்ணப்பஞ்செய்தார். சேலங்கல்லூரி அப்போது இரண்டாந்தரக் கல்லூரியாக இருந்தது. கல்லூரியையும் உயர்நிலைப் பள்ளியையும் ஒருவரே மேற்பார்த்து வந்தார். அவரே உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராயும் கல்லூரித்தலைவராயும் செயலாற்றிவந்ததால் பொறுப்பு மிகுதியாக இருந்தது. கல்லூரித்தலைவர் பொறுப்பிற்குப் பலரிடம் இருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தன. இவரோ இளைஞர், அகவையும் பழக்கமும் முதிர்ந்த பலர் தமக்கு அப்பொறுப்புவேண்டும் என்று போட்டியிட்டனர். அவர்களுக்கே அவ்வேலையைக் கொடுக்கவேண்டும் என்று தக்கார் பலருந் துணைநின்றனர். அப்போது தம்மண்ணச் செட்டியார் என்பவர் சேலம் நகராட்சித்தலைவராக இருந்தார். அவர் ஊக்கமும் இளமையும் அமையப்பெற்றவராக விளங்கினார். அவர் இந்த வேலையை இராமசாமிக் கவுண்டருக்கே கொடுக்கவேண்டும் என்று எண்ணினார். பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவருக்கே அவ்வேலையைக் கொடுத்தார். கல்லூரியின் முன்னேற்றத்தின்

பொருட்டுக் கவுண்டர் செய்யுந் திட்டங்களுக்குப் பக்கத் துணையாகவும் அமைந்து நின்றார். கவுண்டர் தம் பணியைச் சிறப்பாக நடத்தினார். ஆண்டுகள் நான்கு சென்றன. நகராட்சியின் சூழ் மாறியது. தம்மண்ணச் செட்டியார் விலகியதும் பலர் கவுண்டரைக் கல்லூரித்தலைவர் பதவியிலிருந்து விரட்டிவிடப் பெருமுயற்சி செய்தனர். அம்முயற்சி வெற்றியடையாமல் தோல்வியடைந்தது.

### நல்லியல்புகள்

கவுண்டர் மாணவர்களின் நன்மையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் கல்லூரி வகுப்புவரையிலும் நடத்துதல்வேண்டும் என்னும் நோக்கம் இவருக்கிருந்தது. தமிழிலேயே பாடங்களை நடைபெறச்செய்தார் தமிழில் பாடங்கள் நடைபெறுதலை ஒருமுறை பார்வையிட்ட இராசகோபாலாச்சாரியார் கவுண்டரைப் பெரிதும் பாராட்டினார். கல்லூரி ஆசிரியர்களோடு கவுண்டர் கலந்து பழகிக் காரியங்களை நடத்தினார். தனித்தமிழ் வளர்ச்சியிலும் இவர் கருத்துச்செலுத்தி அதன்பொருட்டும் வேலைசெய்தார். தமிழறிஞர்மாட்டுத் தணியாப் பெருங்காதல் கொண்டவர் இவர். எவரேனும் தமிழறிஞர்களின் கூட்டுறவு கிடைத்தால் அவர்களைப் பெரிதும் போற்றிப் பாராட்டி, ஆகவேண்டியவைகளைச் செய்வார்.

### நூல்கள் எழுதுதல்

தமிழில் நூல்கள் எழுதவேண்டும் என்னும் வேட்கையும் இவருக்கு மிகுதியாக இருந்தது. நெப்போலியன், நெல்சன் முதலியவர்களுடைய வரலாற்றைத் தமிழில் எழுதினார். கபிலையின் கதை என்னும் நூலும் இவரால் எழுதப்பட்டது. தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டுப் பல

நூல்களை ஆராய்ச்சி செய்தார். தமிழர் வரலாறு என்னும் நூல் ஒன்று எழுதத்தொடங்கினர். ஆனால், அந்நூல் முடிவுபெறவில்லை. தத்துவநூற் பயிற்சியிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. கைவல்லியம், பகவத்கீதை, விவேகானந்தர் நூல்கள் முதலியவற்றைக் கற்றுணர்ந்தார். பகவத்கீதையை நன்கு கற்றுணர்ந்ததுடன் வடமொழிக் கீதையை எளிய தமிழ்நடையில் எல்லோருக்கும் பயன்படும் வண்ணம் மொழிபெயர்த்தார். இதற்காகவே வடமொழியையுங் கற்றுணர்ந்தார்.

இறுதி

"என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்னும் பெரியார் கூற்றுக்கிணங்கத் தமிழ்த்தொண்டு செய்திருந்த இவர் மாரடைப்பு நோயினல் 1950 ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் இருபதாம் நாள், தம் ஐம்பத்தோராம் அகவையில் பூதவுடலை நீத்துப் புகழுடலை உலகில் நிறுவினர்.

---

## ௫௧. புகழ். முத்துச்சாமிப் பிள்ளை

தோற்றம்

நெல்லை மாவட்டத்தில் எல்லையில் புகழுடன் விளங்கும் திருச்செந்தூர்க்கூற்றம் (தாலுகா) உடன்குடி என்னும் சிற்றூரிலே முத்துச்சாமிப்பிள்ளை 1890 ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் பதினறும் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் புகழும்பெருமாள் பிள்ளை. தாயார் பெயர் சுப்பம்மையார்.

கல்வி

தொடக்கத்தில் முத்துச்சாமி பள்ளிக் கல்வியை உள்ளூரில் கற்ருர். பிறகு தமிழ்மொழியை நன்ருகக் கற்க

வேண்டும் என்னும் ஆர்வம் இவருக்கு மிகுதியாக ஏற்பட்டது. அகவை பன்னிரண்டில் இருக்கும்போதே புறப்பட்டுத் திருத்தில்லையை அடைந்தார். நான்காண்டுகள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தமிழ் கற்றுத்தேறி வல்லவரானார். தில்லையிற் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போதே இவருக்கு மறைமலையடிகளின் நட்புக் கிடைத்தது. மூன்நூறுகல் தொலைவில் இருந்து தமிழ் கற்க வந்த முத்துச்சாமிப் பிள்ளையின் தமிழார்வம் மறைமலையடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆகவே இருவரும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

செந்தமிழ்த்தொண்டு

செந்தமிழை நன்கு கற்றுத்தேறிய இவர் மாணவர் பலர்க்குத் தமிழ் நூல்களைக் கற்பித்தார். தந்தையார் நடத்திய பலசரக்குக் கடையையும் நடத்தினார். 'செந்தமிழ்ச் செல்வி'யிலே பல கட்டுரைகள் எழுதினார். பாளையங் கோட்டைச் சைவசபைச் சார்பில் நடந்த பல கூட்டங் களிலும் ஆண்டு விழாக்களிலும் அரியபெரிய பொருள் களைக் குறித்து விரிவுரைகள் பல செய்தார். வேறு பல கழகங்களிலும் இவருடைய சொற்பொழிவு நடந்தது.

இயற்றிய நூல்கள்

1. ஒழுக்க விளக்கம்
2. செல்வக்கணபதி இரட்டைமணிமாலை
3. தேவார உரை
4. திருவாசக திருச்சதக உரை

முதலியன இவருடைய நூல்கள்.

இறுதி

தம் உறவினர் ஒருவரைக்கொண்டு உடன்குடியில் நடுநிலைப்பள்ளி ஒன்றை அமைக்கச்செய்தார். இவரால் பல

ருடைய பயனுக்குகாக அமைக்கப்பெற்ற கிணறு அறக் கிணறு என்னும் பெயருடன் வழங்குகின்றது. இப்பெரியார் நோயடையும் சமயங்களில் மருந்துகளை உண்பதில்லை. முருகக்கடவுளைப் புகழ்ந்துபாடியே நோய்களைப் போக்கிக் கொள்வது வழக்கம். இவர் தமது அறுபதாவது அகவையிலே 1950 ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் பதினேழாம் நாள் கண்ணுதற்பெருமானின் கழலிணைகளையடைந்தார்.

---

## ௩௨. சிதம்பரம் பிள்ளை

*பிறப்பு*

சிதம்பரம் பிள்ளை நாகர்கோவிலில் வேளாண்குடியில் பிறந்தார். தந்தையார் பெயர் பழனியா பிள்ளை

கல்வி

பள்ளிப் படிப்பு முதலியவைகளை வரன்முறையாகக் கற்றுப் பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்றார். இளமையிலேயே கூரிய அறிவும் சுறுசுறுப்பும், ஆழ்ந்த எண்ணமும் ஆராய்ச்சித்திறமையும் அமையப்பெற்றவராக விளங்கினார். ஆங்கில மொழியிற் சிறந்து விளங்கியதைப்போலவே தமிழ்மொழியையும் மலையாளமொழியையும் நன்கு கற்றுத் தலைசிறந்து விளங்கினார்.

தொழில்

வழக்கறிஞராகத் தொழில்புரிந்த இவர் வாய்மை தவறாத நேர்மையராக விளங்கினார். இவருடைய சொற்போர்த் திறன் மிக வியக்கத்தக்கதாக விளங்கியது. திருவிதாங்கூர் சட்டசபை உறுப்பினராகவும் எதிர்கட்சித் தலைவராகவும் பல ஆண்டுகள் பலரும் புகழுமாறு தொடர்ந்து பணியாற்றினார்.

முனிசிபல் தலைவர்

நாகர்கோவில் நகராண்மைக் கழகத் தலைவராகப் பல ஆண்டுகள் அமர்ந்து மக்களுக்கு நலம்பல உஞற்றினார். எதனையும் வாய்ப்பேச்சளவில் நிறுத்தாமல் செயல்முறையில் செய்துகாட்டுவதில் இவர் சிறந்து விளங்கினார்.

தமிழ்த்தொண்டு

" தீண்டத்தகாதவர்களும் மக்களே. அவர்கள் கோவிலுக்குள் நுழைந்து கடவுளை வழிபடத்தொடங்கினால் அங்குள்ள கடவுள் வெளியே ஓடிப்போகமாட்டார். மக்கள் எல்லோரும் பிறப்பால் ஒத்த நிலைமையுடையவர்கள் " என்னும் இக்கொள்கையைக் காந்தியடிகள் கண்டுபிடித்துக் கோயில் நுழைவுரிமைச் சட்டத்தைக்கொண்டு வருவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே சிதம்பரம் பிள்ளை இந்த முன்னேற்றப்பணியில் இறங்கிவிட்டார். "கோயில் நுழைவுரிமை" என்னும் நூலை எழுதி அதனைப் பதிப்பித்து வெளியிட்டார். அப்பொழுது சிதம்பரம் பிள்ளையின் அக்கொள்கையைக்கண்டு பலபேர் வெறுப்படைந்தனர். ஆனால், இது குறித்துச் சட்டம் வந்தவுடன் எல்லோரும் தலைவணங்கிப்போயினர். வரலாற்றுத்துறையிலும் இவர் இறங்கிப் பல நூல்களை ஆராய்ச்சி செய்தார். "திராவிடன்—ஆரியன்" என்னும் நேரிய நூலைச் சீரியமுறையில் கூரிய அறிவுடன் எழுதிவெளியிட்டார்.

கட்டுரைகள்

'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலக் கிழமையிதழில் பல கட்டுரைகள் எழுதினார். தமிழ்ப் பத்திரிகைகளிலும் பலவற்றில் அரிய கட்டுரைகள் எழுதினார். இவருடைய கட்டுரைகள் திட்பநுட்பஞ் செறிந்தனவாய்க் கற்போருக்குக் களிபேருவகையளித்து விளங்கின.

### சொற்பொழிவுகள்

பேரவைகளில் சொற்பொழிவு செய்வதினும் இவர் வல்லவர். தமிழ் நாட்டில் இருந்த பல சங்கங்களும் பேரவைகளும் இவரையுஞ் சொற்பொழிவாளராகப் பெற்றுச் சிறப்படைந்தன.

### கழகத்தொடர்பு

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் தொடக்க காலமுதலே கழகத்தின் வளர்ச்சியிலும் ஆக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்து சொல்லாலும் செயலாலும் தூண்டுதலாலும் அறிவுரை நல்கலாலும் உதவிசெய்து துணைபுரிந்தார். 1938 ஆம் ஆண்டுமுதல் பத்தாண்டுகளுக்குமேல் தொடர்பாகக் கழகத் தலைவராயிருந்து நன்மைகள் பல செய்தார்.

### இறுதி

விரிவுரையாற்றலாலும் ஆராய்ச்சி நூல்கள் எழுதுதலாலும் கட்டுரைகளைப் பத்திரிகைகட்கு வரைதலானும் சீரிய தமிழ்த்தொண்டு செய்திருந்த இப்பெரியார் 1951 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 25 நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து விண்ணகம் புகுந்தார். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாரும் மக்களும் இருக்கின்றனர்.

---

## ௫௫. திருக்குறள் அவதானி சுப்பிரமணியதாசு

தோற்றம்

திருவிதாங்கூர் நாஞ்சில்நாட்டில் உள்ளதும், திருமால் திருப்பதிகள் நூற்றெட்டனுள் முதன்மை பெற்றதுமாகிய திருப்பதிசாரம் என்னும் ஊரில், திருக்குறள் அட்டாவதானம் சுப்பிரமணியதாசு பிறந்தார். பிறந்தகாலம் 1878-ஆம் ஆண்டு தைத்திங்கள். இவருடைய தந்தையார் பெயர் பசுங்கிளித்தேவர். தாயார் பெயர் ஆச்சியம்மாள்.

கல்வி

திண்ணைப்பள்ளியில் நான்காவது வகுப்பு வரையில் கல்வி கற்றார். பிறகு மற்போர்த் தொழிலை மாண்புடன் கற்று மேன்மையுற்றார். நாடகத்துறையிற்புகுந்து பழகி நடித்துக்காட்டும் கலையையுங் கற்றார். உழவுத்தொழிலையும் உளம் உவந்து மேற்கொண்டார். பிறகு முப்பதாம் அகவையில் வடசேரி இராமசுப்பு ஆசாரியார் என்பவரிடம் வேதாந்த நூல்கள் இலக்கண இலக்கிய நூல்கள் முதலியவைகளை ஓதியுணர்ந்தார். நாகர்கோவில் மார்க்கண்டேயர் என்பவரிடம் திருக்குறளைப் பயின்றார். திருக்குறளைக் கற்றதனால் ஊன் உணவு உண்டலை ஒழித்தார். கோட்டாறு சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரிடம் திருக்குறளை மீண்டும் ஒருமுறை பயின்றார். திருக்குறளில் எல்லாப் பொருள்களும் ஒருங்கமைத்திருத்தலைக் கண்டார். “ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும், பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர், வாய்கேட்க நூலுளதோ மன்னு தமிழ்ப்புலவர், ஆய்க்கேட்க வீற்றிருக்கலாம்” என்னும் செய்யுட்பொருளை உள்ளவாறுணர்ந்தார். திருக்குறளை வழுவறநன்கு பயின்றார். தமிழ்நாடு முழுவதற்கும் திருக்குறளைப் பரப்பவேண்டும் என்னும் எண்ணங்கொண்டார்.

### அட்டாவதானம்

திருக்குறள் நூலில் அட்டாவதானம் செய்யவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. திருக்குறளின் பாட்டிலக்கம், உரை, அதிகாரம், தொடர் எண் முதலியவைகளில் முழுக்கருத்தையும் செலுத்திப் பழகினர். முதன் முதலாக 1920-ஆம் ஆண்டில் சென்னைமாநகரில் விபுலாநந்த அடிகள், டாக்டர். சி. நடேச முதலியார் முதலியவர்களுடைய தலைமையில் பல்வேறிடங்களில் திருக்குறள் அட்டாவதானஞ் செய்துகாட்டனர்.

பின்னர் 1933-ஆம் ஆண்டில், உ. வே. சாமிநாதையர், இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், கோ. வடிவேலுச் செட்டியார், கா. நமச்சிவாய முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், மணி. கோடீசுர முதலியார் முதலிய பேரறிஞர்கள் குழுமிய பேரவையில் அட்டாவதானம் நிகழ்த்னர். அதன்பின் 1949-ஆம் ஆண்டில் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமையில் கூடிய திருக்குறள் மாநாட்டில் அவதானஞ் செய்தார். இறுதியில் 1951-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கோகலே மண்டபத்தில் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. கோயமுத்தூர், தென்காசி, காரைக்குடி முதலிய ஊர்களினும் இவருடைய திருக்குறள் அவதானம் நடைபெற்றது.

### திருமணம்

இவர்க்கு இருமுறை திருமணம் நடைபெற்றது. இவருடைய திருமகன் இராமதாசும் பன்னிரண்டாவது அகவையில் திருக்குறள் அவதானஞ்செய்யும் சீரிய நிலையை அடைந்தார்.

### நூல்கள்

திருக்குறளில் தாம் கண்ட முடிபுகளையெல்லாம் தொகுத்தெழுதி "வள்ளுவர் வகுத்த அரசியல்" என்னும்

பெயரோடு வெளியிட்டதுடன் வேறு சில நூல்களும் எழுதி வெளியிட்டார்.

இறுதி

திருக்குறட் புலமையிற் சிறந்து விளங்கிய இவர் தமது எழுபத்துமூன்றும் அகவையில் 1951-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் மண்ணக வாழ்வை நீத்து விண்ணகம் புகுந்தார்.

---

## ௩௪. நவநீதகிருட்டிண பாரதியார்

தோற்றம்

பண்டிதமணி க. சு. நவநீதகிருட்டிண பாரதியார் சோழவளநாட்டிலே மணல்மேல்குடிக்குப் பக்கத்தில் உள்ள கரவட்டங்குடி என்னுஞ் சிற்றூரிலே வாழ்ந்திருந்த, **சுப்பிரமணிய பாரதியார்** என்பவருடைய புதல்வராகக் கிருட்டிணவடம் என்னும் ஊரில் 1889-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் முதல் நாள் பிறந்தார். இவருடைய தாயார் பெயர் **தைலம்மையார்.**

கல்வி

இவர் பள்ளிக் கல்வியைக் கற்று முடித்தபின் சர்க்கரை இராமசாமிப்புலவர், பண்டித, அ. கோபாலையர், நற்றிணை உரையாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், சோழவந்தான் அரசன் சண்முகனார் ஆகியவர்களிடத்திலே இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் கற்றுத்தேறினார்.

ஆசிரியத்தொழில்

பாலைக்காடு விக்டோரியாக் கல்லூரியில் சில ஆண்டுகள் தமிழ்ப்புலவராக அமர்ந்து பணியாற்றினார். பிறகு

திருவாவடுதுறை யாதீனத்தில் அம்பலவாண தேசிக சுவாமி கள்பால் திருமுறை ஆராய்ச்சித் துணைவராக அமர்ந்தார்.

ஈழநாட்டில் வேலை

1917-ஆம் ஆண்டில் இவருடைய புலமையை வியந்து, ஈழநாட்டு வள்ளல் சர். பொன்னம்பலம் இராமநாததுரை தமது பெண்கள் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக ஏற்படுத்தினர். இவருடைய புலமைத் திறத்தால் மாண வர்கள் தமிழறிவிற் சிறந்து விளங்கினர்கள். பிறகு பரமேசுவரா கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந் தார். அந்தக் கல்லூரியில் நல்ல தமிழ்த்தொண்டு செய்தார்.

நூல்கள் இயற்றல்

பாரதியார் ஆசிரியத் தொழிலோடு அமைதியாகப் பொழுதுபோக்கவில்லை. ஓய்வு நேரங்களில் நூலாராய்ச்சி யில் ஈடுபட்டார். "உலகியல் விளக்கம்" என்னுஞ் செய் யுள் நூலை எழுதி 1922-ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினர். இந்நூல் பல ஆண்டுகள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட மொழிவளர்ச்சிச் சங்கப் பண்டித பரீட்சைக்குப் பாட நூலாக அமைந்தது. இந்நூல் ச. பூபால பிள்ளை என்பவர் எழுதிய உரையோடு விபுலாநந்த அடிகளால் பதிப்பிக்கப் பெற்றது. 1929-ஆம் ஆண்டில் "புத்திளஞ்செங்கதிர்" "பரம்புமலைப்பாரி" "செழுங்கதிர்ச்செல்வம்" என்னும் நூல் களை எழுதினர். இளஞ்சிறுவர்கள் எளிதாகக் கற்றற் கேற்ற இலக்கண நூல்கள் இல்லாத குறையைப் போக்கு தற்கு எண்ணிப், "பாரதீயம்" என்னும் பெயருடன் 1947-ஆம் ஆண்டில் இலக்கண நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். பத்திரிகைகளிலும் பல கட்டுரைகள் எழுதினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்தும் தனித்தமிழ்த் தேர்வுகளிலும்

வேறு தேர்வுகளிலும் பரீட்சகராக அமர்ந்து பல ஆண்டுகள் தொண்டுபுரிந்தார்.

பண்டிதமணி

தமிழ்மொழி வளர்ச்சியின்பொருட்டு ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் ஒன்றினை அமைத்து அதன் வாயிலாகவும் தமிழ் வளர்ச்சிக்கு நல்ல வேலைசெய்தார். அம் மன்றம் "பண்டிதமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கியது. 1952-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட மொழிவளர்ச்சிச் சங்கம் "புலவர்மணி" என்னும் பட்டத்தினை வழங்கியது, இவ்வாண்டில் அன்பர்கள் முயற்சிசெய்து பணமுடிப்பு ஒன்றினை இவருக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.

திருவாசக ஆராய்ச்சிப்பேருரை

பாரதியார் நீண்டகால உழைப்பை மேற்கொண்டு திருமுறைகளிற் சிறந்துவிளங்கும் திருவாசகத்திற்கு ஆராய்ச்சிப் பேருரை ஒன்று அருமையும் பெருமையும் அமையப்பெற்றதாக எழுதி, ஆயிரம் பக்கங்கட்கு மேற்கொண்ட பெரிய புத்தகமாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இறுதி

இவர் 1954-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 22-ஆம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

## ௬௫. இராசம் அய்யர்

**பிறப்பு**

மதுரை மாவட்டத்தில் உள்ள வத்தலக்குண்டு என்னும் சிற்றூரில் 1872-ஆம் ஆண்டில் இராசம் அய்யர் பிறந்தார்.

**கல்வி**

தொடக்கத்தில் பள்ளிக் கல்வியை வத்தலக்குண்டில் தொடங்கினர். பிறகு மதுரையை அடைந்து எப். ஏ. த் தேர்வுவரை மதுரையிற் படித்தார். அதன்பின் சென்னையை அடைந்து கிறித்துவக்கல்லூரியிற் சேர்ந்தார். வரலாற்றுப்பகுதியை முதன்மைப்பாடமாக எடுத்துக்கொண்டு பி. ஏ. தேர்விற்குப் படித்தார். 1899-ஆம் ஆண்டில் பி. ஏ. த் தேர்வில் தேறினர்.

**மனக்கோட்டை**

பி. ஏ. த் தேர்வுக்குப் படிக்கும்போது ஆங்கில நூல்கள் பலவற்றைக் கற்றார். மேல் நாடுகளில் சுற்றிப்பார்த்து அவ்விடத்து நாகரிக மேன்மைகளையெல்லாம் அறியவேண்டும் என்றும் அவைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் எண்ணி எண்ணி மனக்கோட்டைகள் பல கட்டினர். ஆங்கில நாவல்கள் பலவற்றை ஊக்கத்துடன் படித்தார். மேற்கூறிய நோக்கங்களோடு பி. எல். தேர்வுப் படிப்பைத் தொடங்கினர். மனக்கோட்டை கட்டுவதில் முனைந்திருந்த இவருடைய பி. எல். தேர்வு தேருமற் போயிற்று. மனக் கோட்டைகள் யாவும் சடசடவென்று இடிந்து விழுந்தன.

**வேதாந்த ஆராய்ச்சி**

சட்ட கலாசாலை மாணவராக இருந்த இராசம் அய்யர் வேதாந்த ஆராய்ச்சி மாணவராக மாறினர். கைவல்லியம்

என்னும் வேதாந்த நூலைக் கற்கத்தொடங்கினர். குரு வில்லாதவரையில் வேதாந்த அறிவு பலிக்காது என்று அறிந்தார். வேதாந்தங் கற்று மெய்ஞ்ஞானியாக விளங் கிய ஓரம்மையாரை யடுத்து அவரிடம் வேதாந்த ஆராய்ச்சி யில் ஈடுபட்டார். அன்றியும் இளமையிலேயே இவர் 'ரேம்பின்ஸ் இன் வேதாந்தா' என்ற அருமையான வேதாந்த நூலையும் எழுதியிருக்கிறார்.

கமலாம்பாள் சரித்திரம்

இதே சமயத்தில் அய்யர் கட்டுக்கதைகள் எழுதும் பணியிலும் ஈடுபட்டார். அக்காலில் சென்னை மயிலாப் பூரினின்றும் வெளிவந்துகொண்டிருந்த விவேகசிந்தாமணி என்னும் திங்களிதழில் ஆபத்துக்கிடமான அபவாதம் அல் லது கமலாம்பாள் சரித்திரம் என்னும் புதுமாதிரியான தொடர்கதையை எழுதி வெளியிட்டார். கற்பனையாக எழுதப்பட்ட இந்தக் கதை படித்தவர்களுடைய உள்ளத் தைக் கவர்வதாக இருந்தது. இதனால் இராசம் அய்ய ருடைய பெயர் எல்லா இடங்களினும் பரவத்தொடங்கியது. மேலும் வேதாந்தக்கட்டுரைகளையும் எழுதினர். இவரு டைய ஒரே நூல் இக் கமலாம்பாள் சரித்திரந்தான்.

குருவையடைதல்

பி. எல். தவறியதில் இருந்து இராசம் அய்யருடைய உலக வெறுப்பு மிகுதிப்பட்டுக்கொண்டே வந்தது. குரு வாக விளங்கிய அம்மையார் பாண்டோ சென்றுவிட்டார். இராசம் அய்யர் வேறு குருவைத் தேடினர். அக்காலில் சாந்தானந்த சரசுவதி என்னும் பெரியார் உண்மையான வேதாந்தப் பெரியாராக விளங்கியிருந்தார். அய்யர் அவரை அடுத்தும் பல செய்திகளை அறிந்தார்.

விவேகானந்தர்

அந்நாளில் விவேகானந்தர் சென்னைக்கு வந்தார். மயிலையில் வேதாந்த நோக்கமுடையவர்களாக இருந்த செல்வர்கள் சிலர் இராசம் அப்பரை விவேகானந்தருக்கு அறிமுகப்படுத்தினார்கள். தாங்கள் இராசம் அப்பரைக் கொண்டு ஒரு வேதாந்தப் பத்திரிகை வெளியிட விரும்புவதாகவும் அப்பத்திரிகைக்குத் தகுந்த பெயரை விவேகானந்தரே குறிப்பிடவேண்டும் எனவுங் கேட்டுக்கொண்டார்கள்.

பிரபுத்தபாரதம்

இராசம் அப்பரோடு உரையாடிப்பார்த்த விவேகானந்தர் இராசம் அப்பருடைய வேதாந்த ஆராய்ச்சியில் மன நிறைவு கொண்டார். அவர்கள் வெளியிட விரும்பிய பத்திரிகைக்குப், "பிரபுத்தபாரதம்" என்று பெயர் சூட்டுமாறு கூறினர். இராசம் அப்பரை ஆசிரியராகக்கொண்டு பிரபுத்தபாரதம் வெளியாயிற்று. இராசம் அப்பர் வேதாந்தத்தைக் குறித்து அப்பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதினர். அக்கட்டுரைகளைப் படித்தவர்கள் இராசம் அப்பருடைய வேதாந்த நூல் திறனை வியந்து போற்றினர்கள். பத்திரிகையை வாங்கிப்படிப்போர் தொகையும் வளர்ந்தது.

இறுதி

இராசம் அப்பர் திருமணம் முடிபப்பெற்ற இளைஞராக இருந்தும் இல்லற நடவடிக்கைகளில் சிறிதும் கலந்து கொள்ளாமல் வேதாந்தக் கட்டுரை எழுதுதல் ஆத்ம சாதனை செய்தல் முதலியவைகளிலே ஈடுபட்டிருந்தார். இதனால் இவரது உடலை நோய்கள் பற்றின. அதற்கு மருத்துவஞ்செய்து சிலமுறை நலமடைந்தாராயினும்

இறுதியில் நோய் கடுமையாகிவிட்டது. 1898-ஆம் ஆண்டு மேத் திங்கள் 13-ஆம் நாளில் தமது இருபத்தாறும் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

ஏமாற்றம்

இவரது வேதாந்தக்கட்டுரை ஒன்றின்பொருள் நன்கு விளங்காதபடியால், அக்கட்டுரை அரசாங்கக்குற்றமுடையது என்று அரசியல் அலுவலாளர்கள் எண்ணினர். ஐயரைக் கைது செய்யுமாறு பிடிகட்டளை (வாரண்டு) அனுப்பினர். ஐயரைக் கைதுசெய்யச்சென்ற ஊர்க்காவலர் அவர் விண்ணுலகஞ் சென்றுவிட்டாரென்பதைக் கேள்விப்பட்டு மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினர்.